கல்கி



KALKI 27-6-1976 75 காசு



ஒரு ரூபாய் மிச்சப்படுத்துங்கள்!
CINTHOL
LUXURY
TOILET POWDER
CINTHOL
LUXURY
TOILET POWDER
சிந்தால்
சோப் வாங்கும்போது
சிந்தால் பவுடர் விலையில் ஒரு
ரூபாய் மிச்சப்படுத்துங்கள் *
கூப்பன் அறிவிப்புடன் கூடிய சிந்தால் சோப் வாங்குங்கள். உறையின் பின் பக்கத்தில் ஒரு கூப்பன் இருக்கும். அதை உங்கள் டீலரிடம் கொடுத்து, ஒரு ரூபாய் தள்ளுபடியில் சிந்தால் டாய்லெட் பவுடர் (எந்த சைஸானாலும்) வாங்கிக் கொள்ளுங்கள்.
Save Re.1
COUPON ON REVERSE
OPEN WRAPPER CAREFULLY
CINTHOL
CINTHOL
DEODORANT AND COMPLEXION SOAP
இந்த வாய்ப்பை நழுவ விடாதீர்கள்!
இன்றே முந்துங்கள்!
*ஸ்டாக்குகள் உள்ளவரையே இந்தச் சலுகை உண்டு
Interpub/GS/13/75 TM

உல்லாசமான 60 கிலோ மீட்டர்கள் — ஒரே லிட்டரில்!

ஆம், சுவேகா மோபெடில் உங்களுக்குக் கிடைப்பது—ஒரே லிட்டரில் 60 கிலோ மீட்டர்கள் சொகுசான சவாரி. (ஆமாம், நடைமுறையில் சிறந்த பொருட்கள் மலிவாகவுமிருக்கின்றன!) அதுமட்டுமல்ல, வேகமாகச் சவாரி செய்யத்தகுந்தவாறும், சாலையில் நிலையாக ஓடுவதற்கு ஏற்றவாறும் சுவேகா மோபெட் சிறப்பாக உருவாக்கப்பட்டுள்ளது.

அதனுடைய உறுதியான வடிவமைப்பும், செயின் இயக்கமும் அதனை உறுதிப் படுத்துகின்றன. கிளம்புங்கள் — உங்கள் வாழ்க்கையில் சிறிது உல்லா சத்தையும் சேர்த்துக்கொள்ளுங்கள்.




Suvega

சுவேகா — இந்தியாவில் அதிகம் தேவைப்படும் மோபெட்

மோபெட்ஸ் இந்தியா லிமிடெட் திருப்பதி, ஆந்திரப்பிரதேசம்.

SAA/MIL/2047

மெஸர்ஸ் மோபட்ஸ் இந்தியா லிமிடெட், நெ. 1. V. பழனிசாமி நாயுடு ரோடு, அவினாசி ரோடு, கோயமுத்தூர்-18 ○ மெஸர்ஸ் லக்ஷ்மி ஏஜன்ஸீஸ், [illegible] 73, 2 C.3. [illegible] ரோடு, கண்டோன்மெண்ட் திருச்சி-620001 ○ லக்ஷ்மி ஏஜன்ஸீஸ், 174-E, [illegible] வெளி வீதி, மதுரை ○ மெஸர்ஸ் மோபட்ஸ் ஆட்டோமொபைல்ஸ், 14, காந்தி ரோடு, சேலம்-7 ○ மெஸர்ஸ் ஸ்ரீ ராமகிருஷ்ணா என்டர்பிரைஸ், 52, கோயமுத்தூர் ரோடு, பொள்ளாச்சி ○ மெஸர்ஸ் ஸ்ரீ பாலகிருஷ்ணா ஏஜன்ஸீஸ், ராதாகிருஷ்ணாஸ் ஜின்னிங் பேக்டரி, 53, ஸ்ரீ வில்லிபுத்தூர் ரோடு, ராஜபாளையம்-626 117.





கல்கி



அநல ௵
ஆனி 14
ஜூன் 27
1976

மூன்றும் தெரிந்த முன்னாள் நீதிபதி !

சென்னை உயர்நீதி மன்றத்தின் தலைமை நீதிபதியாக இருந்து ஓய்வு பெற்றவர் – திரு ராஜமன்னார்.

சட்டத்தில்தான் அவர் நிபுணர் என்று எண்ணக் கூடாது !

கதை கட்டுரைகள் எழுதியிருக்கிறார் ; கவிதைகள் எழுதியவர் ; நாடகங்கள் எழுதிக் குவித்தவர். இன்றும் நேரம் கிடைக்கும் போதெல்லாம் எழுதுகிறார்.

திரு ராஜமன்னார் ஒரு தெலுங்கு மாதப் பத்திரிகையின் ஆசிரியராகவும் இருந்து வந்தவர் !

அவர் நடத்திய மாத இதழின் பெயர் 'கள' (கலை).

ராஜமன்னார் ஆயிரம் பிறை கண்டுவிட்டார் ! எண்பத்தோராம் வயதிலும் சுறு சுறுப்பாய்க் காணப்படுகிறார் !

– ஏ. சுவாமிநாதன்


சர்வதேச அரசியல்
வன்முறை
லெபனான் படுகொலை
பாக்கா– கிஸ்தான் வன்முறை
தூதரகங்களில் வன்முறை
முதலமைச்சர்கள் மகாநாடு
சி.எல்
தமிழ்நாடு கவர்னர் பதவி
ஷா
சுகாடியா
சட்டை கழன்றதடா சம்சாரம் விட்டதடா!...

விடை கொடுக்கிறோம்; வரவேற்கிறோம்!

மக்களாட்சிக்கு முடிவுகட்டி ராஷ்டிரபதி ஆட்சி ஆளுனர் மூலமாக நடக்கும் போது அந்த ஆளுனர் பிரபலமடைவதைத் தவிர்க்க முடியாமல் இருக்கலாம். ஆனால் திரு கே. கே. ஷா மக்களாட்சி நடக்கையிலேயே தமிழகத்தில் மிகவும் பிரபலமடைந்து விட்டவர். ஆளுனர் என்றால் ஏதோ எட்டிப் பிடிக்க முடியாத ஒரு கோட்டையில் மக்களுடன் தொடர்பின்றி வாழ வேண்டும் என்கிற ஒரு மாயையை உடைத்தெறிந்து விட்டுக் கீழிறங்கி வந்தவர்.

காந்தி மண்டபத்தில் காந்தி ஜெயந்தி விழாக்கள், கலைநிகழ்ச்சிகள், இலக்கிய கூட்டங்கள், மொழி ஆராய்ச்சி மாநாடுகள், என்று பலப்பலவற்றில் கலந்து கொண்டார். பேச்சாற்றலாலும் மிதமான நகைச்சுவையாலும் மக்களைக் கவர்ந்த அதே நேரத்தில் ஆழ்ந்த கருத்துக்களையும் வெளிப்படுத்தி அறிஞர்களைச் சிந்திக்க வைத்தார். தமிழகத்தின் ஆளுனராக வந்த மறுதினமே பள்ளிப் பிள்ளை போல் தமிழ் கற்கத் தொடங்கிய ஒன்றே அவர் தமிழக மக்களின் மனங்களில் நிரந்தர இடம் பெறுவதற்குப் போதுமானதாய் இருந்தது.

கல்கி

மலர் 35

இதழ் 48

திரு கே. கே. ஷா தமது பொது வாழ்வின் ஆரம்ப கட்டத்திலேயே அரசியல்வாதி. 1930, 32-ம் ஆண்டு போராட்டங்கள் தொடங்கி, 1942 வெள்ளையனே வெளியேறு புரட்சியில் கலந்து கொண்டு, பாரதம் சுதந்திரம் அடைந்த பின்னர் மத்திய அமைச்சர் அவையில் பொறுப்பு வாய்ந்த பதவிகளில் அமர்ந்து அவர் பலப் பல பணிகளை அரசுக்கும் காங்கிரஸ் கட்சிக்கும் ஆற்றியுள்ளார். எனவே தமிழக ஆளுனராக நியமனமான போது மத்திய அரசின் விருப்பத்துக்கேற்ப மாநில அரசிடம் நடந்து கொண்டார். இல்லாத போனால் கே. கே. ஷா என்பதற்குக் ''கலைஞர் கருணாநிதி ஷா'' என்பதாக ஒரு விளக்கம் தரும் அளவுக்கு அவர் பிராபல்யத்தைத் தேடியிருக்க மாட்டார். பின்னால் ராஷ்டிரபதி ஆட்சி இங்கே தோன்றியதும் தாம் தி.மு.க. தலைவர்களின் செயலாற்றலை மட்டுமே போற்றியதாகவும் அவர்களது பிரிவினை வாதங்கள், ஒழுங்கீனங்கள் முதலியவற்றை வரவேற்றதாக ஆகாது என்றும் அவர் சமாதானம் கூற நேர்ந்தது. வரவேற்காவிடினும் தி.மு.க. ஆட்சியின் இந்தப் போக்குகளுக்கு அணை போட அவர் எந்த அளவில் முயற்சி எடுத்தார் என்பது நமக்கு இன்று தெரிய வராது; நாளை சரித்திரம் பேசலாம்.

ராஷ்டிரபதி ஆட்சி இங்கு தோன்றிய பிறகு நிர்வாகத்தில் தடங்கல் தாமதங்கள் ஏதுமின்றி இலகுவாகவும் அமைதியாகவும் தொடர்வதற்கு வழி வகுத்ததில் திரு ஷா அவர்களுக்குப் பெரும் பங்கு உண்டு. லஞ்ச ஊழல்களைக் களைவதிலும் சமுதாய நலத் திட்டங்கள் பலவற்றை அமுலாக்குவதிலும் மக்கள் துயரங்களை அறிந்து இடையூறுகளை நீக்குவதிலும் அவர் அளப்பரிய சிரத்தை காட்டினார்.

போகிற போக்கில் இலவசக் கல்வித் திட்டத்தைப் பற்றிப் புனராலோசனை செய்ய வேண்டுமென்று ஒரு வெடிகுண்டு கருத்தைத் தூக்கிப் போட்டுவிட்டுச் சென்றிருக்கிறார் என்றாலும் பொதுவாக திரு ஷா தமிழக மக்கள் இதயங்களில் அன்பும் பண்பும் அறிவாற்றலும் நகைச்சுவை உணர்வும் மிக்க ஆளுனராக என்றும் குடியிருப்பார்.

புதிய ஆளுனர் திரு மோகன்லால் சுகாதியா அவர்களும் முழுக்க முழுக்க ஓர் அரசியல்வாதியே. மின்பொறி இயலாளராக வாழ்க்கையை ஆரம்பித்தாலும் சீக்கிரமே சுதந்திரப் போராட்டத்தில் குதித்துப் போற்றுதலுக்குரிய விடுதலை வீரரானார். இந்தியாவிலேயே மிக இளைய முதல் மந்திரியாக ராஜஸ்தானத்தில் பொறுப்பேற்றார். நேருஜியின் பாராட்டுக்கு அடிக்கடி ஆளான திரு சுகாதியா தமிழகத்துக்குள் அடியெடுத்து வைக்கும்போதே 'ஹிந்தி திணிப்பு கூடாது' என்ற ஆணித்தரமான அறிக்கையுடன் வந்து மாநில

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற - எங்கள் தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார்

ராஜாஜி சிந்தனை

"புரட்சிக்காரரும் தேசபக்தரே!"

காசி சர்வகலாசாலைப் பட்டமளிப்பு விழா நடந்த போது காந்தியடிகள் வெடிகுண்டு எறியும் தத்துவம் பற்றிப் பேசினார். வெடிகுண்டு எறிபவரும் நல்ல மனிதரே என்றும் அவரும் தேசத்தினிடம் பக்தியுடையவரே என்றும் அவர் தேசத்துக்காக உயிர் கொடுக்கும் தியாகியே என்றும் கூறினார். புரட்சிக்காரருடைய நோக்கத்தைக் கூறிவிட்டு அவருடைய முறையிலுள்ள பிழையை எடுத்துக் கூற விரும்பினார். ஆனால் புரட்சிக்காரரும் தேசபக்தரே என்று காந்தியடிகள் கூறியதும் பெஸண்ட் அம்மையாருக்குக் கோபம் வந்து விட்டது. உடனே எழுந்து வெளியே போய் விட்டார். அதன்பின் வெகுநாள் வரை பெஸண்ட் அம்மையாருக்கும் காந்தியடிகளுக்கும் தொடர்பு இல்லாமலேயே போய் விட்டது.

அந்தப் பிரசங்கத்திலேயே காந்தியடிகள் மகாராஜாக்கள் அணிந்திருந்த ஆடை ஆபரணங்கள் பற்றியும் குறிப்பிட்டார். ஜனங்களின் வறுமையைப் பற்றி வர்ணித்தார். தேசம் முழுதும் அரைப்பட்டினியாக இருக்கும்போது இந்த ராஜாக்கள் பெண்களைப் போல் ஆடை ஆபரணங்களை அணிந்து வந்திருக்கிறார்களே என்றார்.

இப்படிச் சொன்னதும் புரட்சிக்காரர்களைப் பற்றிக் குறிப்பிட்டதும்தான் பெஸண்ட் அம்மையாரும் மகாராஜாக்களும் அந்தக் கூட்டத்தை விட்டு வெளியேறியதற்குக் காரணம். ஆனால் காந்தியடிகள் தென் ஆப்பிரிக்காவில் செய்த காரியங்கள் அதிக நலம் வாய்ந்தவையாக இருந்ததால் சென்னை கவர்னர் ஆம்டில் பிரபு பகிரங்கமாகக் காந்தியடிகளைப் பாராட்டிப் பேசினார். அதன் பின்னர் காந்தியடிகளுக்கு ''கெய்ஸரி ஹிந்த்'' என்னும் பொற்பதக்கம் அரசாங்கத்தாரால் அளிக்கப்பட்டது. அந்தப் பதக்கத்தை அவர் ஒத்துழையாமை இயக்கக் காலத்தில் அரசாங்கத்திடம் திருப்பிக் கொடுத்து விட்டார். — ''அக்டோபர் 2-ம் தேதி'' என்ற கட்டுரையில்

மக்களின் அன்புக்குப் பாத்திரராகிறார். ''கிருஷ்ணா நதி நீரை வரவேற்கத் தயாராவோம்'' என்று சொல்லிச் சென்னைவாசிகளின் இதயங்களைக் குளிர்விக்கிறார்.

இங்கு நிலவுகிற பிரச்னைகளைப் புரிந்து கொள்ளவும் மக்களின் மனங்களையும் தேவைகளையும் தெரிந்து கொள்ளவும் அவருக்குச் சிறிது காலம் பிடிக்கும். வெகு சீக்கிரம் இந்த ஆரம்ப கட்டத்தைத் தாண்டிச் செயல் வீரராகி இந்த மாநிலத்தை நேர்மையின் இருப்பிடமாகவும் உழைப்பின் உறைவிடமாகவும் செல்வச் செழிப்பின் ஊற்றுக் கண்ணாகவும் மாற்றுவார் என நம்பி வாழ்த்தி வரவேற்கிறோம்.

பாடசாலைகளில் ஒரு ராஜா!


எப்போதும் ஆனந்தச் சுடர் நிலையில் வாழ்ந்து உயிர்களுக்கு இனிது செய்து வந்தால் பூவுலகில் சொர்க்கம் காணலாம் என்னும் உண்மையை சதுர் வேதங்களும் பலவிதமாக விளக்கிக் கூறுகின்றன.

வேதங்கள் தழைக்க ராஜா பாடசாலை எடுத்துக் கொண்டு வரும் பிரயாசை அளப்பரியது. வேதங்கள் போதிப்பதுடன் காவிய நாடகங்களையும் சொல்லித் தருகிறார்கள். தமிழ், கணக்கு, ஆங்கிலம் இவற்றையும் மாணவர்கள் கற்கிறார்கள். தேகப் பயிற்சியிலும் போதிய கவனம் செலுத்தி வருகிறார்கள். ஏழு ஆண்டுகள் உணவு, உடை, இருக்கை எல்லாம் தந்து மாதா பிதா குரு தெய்வம் ஆகிய அனைத்துமாக விளங்குகிறது ராஜா பாடசாலை.



அத்யயனம் முடிந்த பின்னர் வேதப் ப்ரவீண என்ற விருதும் ரூ. 1500 ரொக்க சன்மானமும் மாணவர் பெறுகின்றனர். இவ்வாண்டு இந்தக் கௌரவங்களை அடைந்த குசன், சேஷாத்திரி ஆகிய இரு இளைஞர்களையும் படத்தில் காணலாம்.

ராஜா பாடசாலையில் குழந்தைகளைச் சேர்க்க விரும்புவோர், சேர்மன், ராஜா வேத பாடசாலை, யாகசாலைத் தெரு, கும்பகோணம் என்ற முகவரிக்கு எழுதலாம்.



ஜீவகாருண்யம் ௭

ஜகத்குரு
ஸ்ரீ காஞ்சி காமகோடி
சங்கராசாரிய ஸ்வாமிகள்

தர்மபுத்திரர் அச்வமேத யாகத்துக்கு அங்கமாக ஏராளமான அன்னதானம் பண்ணினார். அந்த மாதிரி சகல ஜனங்களுக்கும் வயிறும் மனசும் ரொம்பிப் போகிற முறையில் எவருமே அன்னதானம் பண்ணினதில்லை என்று எல்லோரும் ஏகமாகக் கொண்டாடினார்கள். வயிறு ரொம்பப் போட்டுவிடலாம். அது பெரிசில்லை. அதே சமயத்தில் மனசும் ரொம்புகிற மாதிரி பரம அன்போடு போடுவதுதான் விசேஷம். 'இது யாகத்தின் அங்கம், இதைப் பண்ணினால்தான் தனக்குப் பலன் கிடைக்கும்' என்று காரியார்த்தமாக மட்டுமில்லாமல், கடனே என்று இராமல், நிஜமான பரிவோடு பாண்டவர்கள் இப்படிப் பெரிய அன்னதானம் செய்து லோகமெல்லாம் ஸ்தோத்திரம் பண்ணுகிறபோது, இதனால் அவர்களுக்கு ஒரு கர்வம் வந்துவிடக்கூடாதே என்று பகவான் பார்த்தார். கர்வம் வந்ததோ அத்தனை தர்மமும் அதிலே வீணாக வேண்டியதுதான். அதனால் இந்தச் சமயத்தில் இவர்களைக் கொஞ்சம் மட்டம் தட்டினாலும் நல்லதுதான் என்று பகவான் நினைத்தார். வெறுமனே மட்டம் தட்டினால் மட்டும் போதாது; அதோடு ஸர்வ லோகத்துக்கும் தானத்தின் உத்கிருஷ்டமான தத்துவம் தெரியும்படியாகவும் பண்ண வேண்டும் என்று நினைத்தார். இந்த இரண்டு லட்சியங்களையும் பூர்த்தி பண்ணுகிற ஒரு சம்பவம் அப்போது நடந்தது.

ஏகப்பட்ட ஜனங்கள் சேர்ந்து தர்மபுத்திரரை ஸ்தோத்திரம் பண்ணிக் கொண்டிருந்த அந்த சந்தர்ப்பத்தில் அங்கே திடீரென்று ஒரு விசித்திரமான கீரிப்பிள்ளை தோன்றிற்று. விசித்திரம் என்னவென்றால் அந்தக் கீரிப்பிள்ளையின் உடம்பில் சரியாக ஒரு பாதி மட்டும் பளபளவென்று தங்கம் மாதிரி பிரகாசித்தது.

அந்தக் கீரி போஜன சாலையில் உள்ள அன்னாதிகளின் மேல் புரண்டு விட்டு, மநுஷக் குரலில், "இது என்ன பெரிய தானம், இதென்ன பெரிய யாகம்? அந்தக் குருக்ஷேத்திரத்து உஞ்ச விருத்திப் பிராம்மணர் பண்ணின தானத்துக்கு இது வீசம் கூடக் காணாது" என்று தூக்கி எறிந்து பேசிற்று.

பார்வைக்கே பாதித் தங்கமாக அந்தக் கீரி விசித்திரமாக இருந்தது என்றால், அது மநுஷக் குரலில் பேசினது அதைவிட விசித்திரம். அது பேசிய விஷயமோ எல்லாவற்றையும் விட விசித்திரமாக இருந்தது. லோகம் முழுதையும் கட்டி ஆள்கிற ஸார்வபௌமரான தர்மபுத்திரரை விடப் பெரிய தானத்தை உஞ்ச விருத்தி பிராம்மணன் எப்படிப் பண்ண முடியும்?

உஞ்சவிருத்தி என்றால் தற்காலத்தில் பிச்சை எடுப்பது, வீடு வீடாகப் போய்த் தான்ய பிக்ஷை வாங்குவது என்று நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். இம்மாதிரி தெருத் தெருவாகப் போய் அக்ஷதை வாங்குவதை உஞ்சவிருத்தி பஜனை என்றுகூட பஜனை சம்பிரதாயத்தில் சொல்கிற ஒரு பழக்கம் வந்து விட்டது. ஆனால் ஆதி காலத்தில், நம் தர்ம சாஸ்திரங்களின்படி பார்த்தால், உஞ்ச விருத்தி என்பதற்கு அர்த்தமே வேறே. சாஸ்திரப்படி களத்திலே நெல்லடித்து, சொந்தக்காரன் அந்தத் தான்யத்தைக் கொண்டு போகிறபோதே, கொஞ்சத்தைத் தனக்கு என்று எடுத்துக் கொள்ளாமல் அப்படியே களத்திலேயே விட்டு விட வேண்டும். இதைத் தான் சோற்றுக்கு வேறு வழியே இல்லாத பிராமணர்கள் பொறுக்கி எடுத்துக் கொள்ள வேண்டும். 'உஞ்சம்' என்றால் 'சிதறிப் போனதைத் திரட்டி எடுப்பது' என்றே அர்த்தம்.

கீரிப்பிள்ளை உஞ்சவிருத்திப் பிராமணனை ஒஹோ என்று புகழ்ந்ததும் ஸபையில் கூடியிருந்தவர்கள் அதனிடம், "நீ யார்? நீ சொல்கிற உஞ்சவிருத்திப் பிராமணன் யார்? அவன் பண்ணின [illegible] பெரிய தானம் என்ன?" என்று கேட்டார்கள்.

கீரிப் பிள்ளை கதை சொல்ல ஆரம்பித்தது. அந்தக் கீரி ரொம்ப வயசானது. அதனால் எத்தனையோ வருஷங்களுக்கு முன்னால் நடந்த கதையைச் சொல்லிற்று.

அப்போது குருக்ஷேத்திரத்தில் ஒரு பெரிய பஞ்சம் ஏற்பட்டது. பெரிய பெரிய பிரபுக்களே அன்னத்துக்குப் பரிதவிக்கும்படியான ஸ்திதி ஏற்பட்டது. அப்போது உஞ்சவிருத்தி பிராமணன் நிலை எப்படி இருக்கும்? எப்

[1932ம் வருஷத்திலிருந்து பெரியவர்கள் வழங்கிய உரைகள், ஸ்ரீமுகங்கள், கட்டுரைகளிலிருந்து தொகுத்தது]

போதோ எங்கேயோ பொறுக்கி வந்த கோதுமையில்தான் கொஞ்சம் குப்பையும் கூளமுமாக, மட்கி, நாற்றமெடுத்துக் கைவசம் இருந்தது. அதை மாவாக அரைத்து வைத்துக் கொண்டிருந்தார்கள். அவருடைய குடும்பத்திலே நாலு ஜீவன்கள். பிராம்மணன், அவனுடைய பத்தினி, பிள்ளை, மாட்டுப் பெண் — இந்த நாலு பேருக்கு ஒரு வேளைக்குத்தான் இந்த மாவு போதும்.

'ஏதோ இந்த வேளையை இப்படித் தள்ளுவோம்; அடுத்த வேளை இதுவும் இல்லாமல் பிராணன் போக வேண்டியதுதான்' என்று நினைத்து நாலு பேரும் வெறும் மாவை ஆளுக்கு ஏதோ ஒரு பிடி தின்னலாம் என்று உட்கார்ந்தார்கள்.

இந்தச் சமயம் பார்த்து ''தேஹி'' என்று சொல்லிக் கொண்டு ஒரு யாசகர் அங்கு வந்து சேர்ந்தார். **(தொடரும்)**



'அரும்பு அம்புகள்' என்ற சமூக நாவலில் 'முரணியல் அழகு' மிளிர்வதைக் கண்டு மனமகிழ்வுற்றேன். கதா பாத்திரங்களின் அழகை மென்மையை, குரல் தன்மையை 'முரணியல் அழகுடன்' வர்ணிப்பதில் கல்கிக்கு இணை கல்கியே.

கமலாவையும் பவானியையும் வர்ணிக்கும்போது, ''ஒன்று பச்சைக் கிளி என்றால் மற்றது மாடப்புறா; ஒன்று மஞ்சள் சாமந்தி என்றால் மற்றது இளம் சிவப்பு ரோஜா; ஒன்று கும்மிக் கீதம் மற்றது இங்கிலீஷ் டியூன்; ஒருத்தி அல்லி ராணி மற்றொருத்திகிளியோபாத்ரா!'' என்று கூறியுள்ளார். இப்பாணி கதாபாத்திரங்களோடு உள்ளம் ஒன்றும் தன்மையைத்தருகிறது.

சென்னை—4
13—6—76 வ. ச. வண்டார்குழலி எம். ஏ.

இறவா இலக்கிய நவீனங்கள் படைத்து, அதில் என்றென்றும் வாழ்ந்துகொண்டிருக்கும் அமரர் கல்கியின் படைப்புக்கள் ஒவ்வொன்றும் ஒன்றையொன்று விஞ்சும் தன்மையுடையது. எத்தனை முறை படித்தாலும் தெவிட்டாத தேவாமிர்தம். அன்னாரின் 'பார்த்திபன் கனவு' விரைவில் கல்கியில் வெளிவர இருக்கிறது என்பதை அறிந்து ஆவலுடன் எதிர்நோக்கும் லட்சோப லட்ச உள்ளங்களில் என்னுடையதும் ஒன்று.

9—6—76
திருமலைராயன்பட்டினம் ஆர். வி. மதி

'மழை விட்டும் தூவானம் விடவில்லை' என்பார்கள். மக்களுக்குப் பல தொல்லைகள் கொடுத்து வந்த ஆட்சி போனாலும் அதனுடைய விளைவுகள் இன்னும் இருந்து கொண்டே இருக்கின்றன. எடுத்துக்காட்டாகப் பல மாதங்களாக மக்களால் வாங்கப்படாமல் இருந்த நியாயவிலைக் கடையின் நாற்ற அரிசியை இம்மாதம் மக்கள் தலையிலே கட்டப் பார்க்கிறார்கள். ஒரு கிலோ அரிசி வாங்கினால்தான் சர்க்கரை கொடுப்பார்களாம். எதற்குப் பயனற்ற அரிசியை ஒரு கிலோ ரூ. 2—25 கொடுத்து வாங்க வேண்டும்?

சேலம்—4
11—6—76 வா. அர்த்தநாரீசுவரன்

சென்ற 30—5—76 இதழில் அரசு டாக்டர் பற்றிய கார்ட்டூன் பார்த்தேன். நாகர்கோயில் தலைமை அரசாங்க மருத்துவமனையில் டாக்டர் நாகராஜன் பணியாற்றுகிறார். அவர் தனியாகவும் மருந்தகம் வைத்திருக்கிறார். 27—5-1976 அன்று அவர் சரியாக 11.50க்கு சி. பூதலிங்கம் ஆச்சாரி, என்பவருக்கு *Hydrocele and Hernia* என்ற ஆபரேசன் செய்தார். ஆபரேஷன் முடிந்து இரவு 8—25 வரை அவரை நோயாளி அருகிலேயே பார்த்தேன். உண்ணவில்லை; உறங்கவில்லை. அடுத்த நாள் காலையில் அவர் வீட்டில் உள்ள ஒருவர் மிகவும் முயற்சி பண்ணி அழைத்துச் சென்றார். ஆகையால் கடமையே கண்ணாகக் கொண்ட திரு நாகராஜன்போன்ற டாக்டர்களின் மனத்தைப் புண்படுத்தாதீர்.

நாவல்காடு
8—6—76 எம். பூதலிங்கம் பிள்ளை

சேரமான் காதலியை வர்ணிக்கப் போதிய வார்த்தைகளே இல்லை. கதையை அழகுற அமைத்துக் கொடுக்கும் கண்ணதாசன் அவர்களுக்கு எனது பாராட்டுக்கள்.

போடிநாயக்கனூர்
14—6—76 ஆர். உஷா

மகிழ்ச்சித் துள்ளல்; மௌனக் குமுறல்!



‘‘சத்தியம்’’ தான் திரு எஸ். ஏ. கண்ணன் டைரக்ட் செய்த முதல் படம். தாம் டைரக்டர் ஆன விவரத்தை அவரே சொல்கிறார்:

‘‘நான் முதலில் நடிகனாகத்தான் மேடையேறினேன். மெலிந்த, ஆகிருதியில்லாத என் தோற்றத்தை ஒருநாள் கண்ணாடியில் பார்த்துக் கொண்டிருந்தபோது நான் நடிகனாயிருக்கத் தகுதியற்றவன் என்ற உறுதியான அபிப்பிராயம் என் மனத்தில் வலுப்பெற்றது.

‘‘சிறு வயதிலிருந்தே சக்தி நாடக சபாவில், சிவாஜி ஸாருடன் பல வேடங்களில் நடித்து வந்திருப்பவன். நான் நடிகனாயிருப்பதை விட டைரக்டரா யிருக்க விரும்புவதை அறிந்த சிவாஜி ஸார், ‘கண்ணன், உன்னைப்பற்றி நீயாகவே சிந்தித்து, தக்கதொரு முடிவை எடுத்திருக்கிறாய். சபாஷ்!’ என்று கூறி உற்சாகமாகப் பாராட்டினார். அதையே நான் ஆசியாகக் கொண்டேன்.’’

‘‘சத்தியம்’’ படத்தில் நெஞ்சைவிட்டு நீங்காத காட்சி என்று கல்கி வாசகர்கள் கருதும் காட்சி பற்றி, கண்ணனிடம் பேசினேன்.

‘‘வாணி தன் ஆசை அத்தானைத் தேடிக் கொண்டு உற்சாகமாகத் துள்ளிக் குதித்து ஆடிப் பாடியபடியே அவன் வீட்டுக்கு வந்து அவனைக் காணாது திரும்புகிறாள். அதைத் தூர இருந்து பார்க்கும் தர்மலிங்கமும், அவன் மனைவியும் அடக்க முடியாத துயரத்தில் மௌனமாக விம்முகிறார்கள்.

‘‘இந்தக் காட்சி பெரும்பான்மையான ரசிகர்களின் பாராட்டைப் பெற்றதற்குக் காரணம் என்னவாயிருக்கும் என்று நீங்கள் நினைக்கிறீர்கள்?’’ என்று கண்ணனிடம் கேட்டேன்.

‘‘சந்தேகம்’ இல்லாமல் ஜெய்சித்ராவின் நடிப்பாற்றல் தான். காட்சியை டைரக்டர் விளக்கியவுடன் மனத்தில் தெளிவாகப் பதிந்துகொண்டு விடுவார். அவரது திறமையை நான் மனத்துக்குள் பாராட்டி மகிழ்வேன். மௌனமாக நடித்தே உணர்ச்சிகளைப் புரிய வைப்பதில் சிவாஜிக்கு நிகர் யாரும் இல்லை. குறிப்பிட்ட அந்தக்காட்சியில், வாணியின் உற்சாகத்தைக் கண்ட தர்மலிங்கம், அவளுக்கும் அவளது ஆசை அத்தானுக்கும் கல்யாணம் நடக்காது என்பதை எப்படி வாய்விட்டுச் சொல்லுவது என்று மனம் குமுறி விம்முகிறான் — வாணியின் உற்சாகம், தர்மலிங்கத்தின் அடக்கிக் கொள்ள முடியாத துயரம் — ஆகிய இரண்டு வித்தியாசமான உணர்ச்சிக்களையும் ஒரே சமயத்தில் பார்க்கும்போது உண்டாகும் மனப் பதைப்புத்தான் அந்தக் காட்சியின் வெற்றிக்குக் காரணம். சிவாஜி ஸாரின் மௌனக் குமுறலையும் ஜெய்சித்ராவின் உற்சாகமான துள்ளலையும் கண்டு நானே செட்டில் நெகிழ்ந்து போனேன்.’’

‘‘‘விதி’ என்ற நாடகம் தானே ‘‘சத்தியம்’’ படத்தின் மூலக் கதை?’’

‘‘இல்லை. பெயரளவுக்குத் தான் ‘‘விதி’’. நாங்கள் ரொம்ப மாற்றிவிட்டோம்...’’

‘‘‘விதி’யின் தலைவிதி அப்படியாகி விட்டதா?’’ என்று சிரித்தபடியே கேட்டு விடை பெற்றுக் கொண்டேன்.

— கார்த்தன்



நெஞ்சை விட்டு நீங்காத காட்சி


படித்தோம், சொல்கிறோம்!



ருக்மிணி பார்த்தசாரதி



ரா. அ. பத்மநாபன்



ஸௌந்தர்ய லஹரி

ஸ்ரீ சங்கர பகவத் பாதர்கள் இயற்றிய 'ஸௌந்தரிய லஹரி' அலை அலையாக அழகை எடுத்துக் காட்டுவதனால் 'அழகு அலைகள்' என்ற பொருத்தமான பெயரைப் பெற்றிருக்கிறது. இதில் முதல் நாற்பத்தொரு சுலோகங்கள் ஆனந்தலஹரி என்னும் பெயருடன் இன்ப அலைகளை உள்ளத்தில் பாய்ச்சுகின்றன. மற்ற ஐம்பத்தொம்பது சுலோகங்களும் தேவியின் லாவண்யங்களை வர்ணித்து அழகை வழிபடச் செய்கின்றன.

மெய்ப் பொருள், அருவப் பொருள்தான் என்றாலும் ஒரு பிடிப்புக்கு உருவப் பொருளாகவே வணங்கப்படுகிறது. உருவத்தில் அருவத்தைக் காணும் வழியையும் காட்டுகிறது.

மன்மதன் கதையை எடுத்துக் கொள்ளுங்கள். பூக்களாலான வில். விறைத்து நிற்பதல்ல; நாண் கயிறோ வண்டுகள். தொட்டால் ஓடி விடக் கூடியவை. மலர் அம்புகளும் கணக்காக ஐந்துதான். ஐந்து முறைகளும் தோல்வியைத் தழுவினால் ஆறாவது முறைக்குக் கையில் ஆயுதம் கிடையாது. போதாக்குறைக்கு மன்மதனுக்கு உருவமே கிடையாது. இருந்தும் அவனை வெல்லக்கூடிய ஆற்றல் யாருக்குமே கிடையாது என்ற நிலை. இந்தச் சக்தி அவனுக்கு எங்கிருந்து வந்தது? உன் அருட் பார்வையினால்தானே? அந்த அருள் நோக்கை என் மீது திருப்பினாயானால், நான் அவனையும் வெற்றி கொள்ள முடியும் அல்லவா? கேட்காமல் கேட்கிறார் ஸ்ரீ சங்கரர் தேவியிடம்.

இப்படி உள்ளத்தைத் தொடும் அருமையான சுலோகங்களுக்குத்தான் எத்தனை வியாக்கியானங்கள், விரிவுரைகள்! முப்பத்தைந்துக்கும் மேல் இருப்பதாகத் தெரிய வருகிறது. அவற்றில் ஒன்பது சமஸ்கிருத விரிவுரைகள் இந்த நூலில் இடம் பெற்றுள்ளன. அதோடு, சுலோகங்களுக்கு மட்டும் ஹிந்தி மொழிபெயர்ப்பும் தரப்பட்டிருக்கிறது.

அநுபந்தமாக ஆங்கில, தமிழ் மொழி பெயர்ப்புக்களும் இடம் பெற்றுள்ளன. கவிராஜ பண்டிதர் இயற்றிய தமிழ்ப் பாக்கள் மூலத்தின் அடியொற்றி அதன் பெருமையைப் பறைசாற்றுகின்றன என்றால், ஸ்ரீ அ.வே.ரா. கிருஷ்ணசாமி ரெட்டியாரின் இலகுவில் விளங்கும் கவிதையாக்கம் மூலத்தை உணர்ந்து படிக்க உதவுகின்றது.

ஸ்ரீ வித்யா உபாசனைக்கு உகந்த நூலாகையால் அந்த வழிபாட்டு முறையும் வெகு நேர்த்தியாக விளக்கப்பட்டுள்ளது.

பலரது உழைப்பால் நேர்த்தியான முறையில், சகலத்தையும் உள்ளடக்கி உருவாகியுள்ள இந்த நூலுக்கு ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஸ்ரீமுகம் வழங்கியிருக்கிறார்கள். மத்திய அமைச்சர் டாக்டர் கரண் சிங் முன்னுரை அளித்துள்ளார்.

இது விலை மதிப்பிட முடியாத அரிய நூல் என்பதினால்தானோ என்னவோ, இதற்கு விலை குறிப்பிடவில்லை!

— ரா. வீ.

முகவரி: ஸ்ரீ எஸ். குஞ்சிதம், ஸ்ரீ சந்திர சேகரேந்திர சேவா சமாஜம், 8, நாகரத்தினம் காலனி, சுலிவன் கார்டன் ரோடு, மயிலாப்பூர், சென்னை. 600004.

சிவப்பு ரோஜா

குழந்தை உலகத்தின் தனிச் சிறப்பைப் பற்றிக் கவிச்சக்கரவர்த்தி கம்பர் சொல்கிறார்: 'அறையும் ஆடரங்கும் படப்பிள்ளைகள் தரையில் கீறிடில் தச்சரும்காய்வரோ!' என்று.

குழந்தைகள் தனி உலகில் தரைக் கீறல்கள் அரங்கமாகும்; சில தீப்பெட்டிகள் ரயிலாகும், துடைப்பக்குச்சி வில்லாகும். அபாரமான கற்பனை ஊற்று அங்கே பொங்கிப் பிரவகிக்கிறது. எனவே அவர்களுக்கு எழுதித் திருப்


அமரர்
கல்கி எழுதிய
பார்த்திபன்
கனவு
கல்கி
ஆகஸ்ட் 8 இதழில் ஆரம்பம்

திப்படுத்துவது — அதிலும் கவிதையால் கவர்வது சிரமம், ரொம்ப சிரமம்.

சிரமமான பணியை எளிய நடையில் இனிய சொற்களால் நிறைவேற்றியுள்ளார் தம்பி சீனிவாசன்.

இந்தக் கவிதைத் தொகுப்பில் குழந்தைகள் விரும்பும் ரோஜாப்பு, பம்பரம், சிலந்தி என்று பல பொருள்கள் பற்றிக் கவிதைகள் இடம் பெற்றுள்ளன. அனைத்துக்கும் பிரபல ஓவியர் கோபுலுவின் சித்திரங்கள் அழகூட்டுகின்றன.

குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா எழுதிய முன்னுரையில், "பழமையிலே பழகியவராகவும், புதுமையிலே நாட்டங் கொண்டவராகவும் விளங்குகின்ற திரு தம்பி. சீனிவாசன் அவர்களின் இந்த நூலில் புதிய சந்தங்கள், புதிய கருத்துக்கள் பல காணப்படுகின்றன!" என்கிறார்.

மாதிரிக்கு ஒன்று:

ஒருவர் மட்டும் தள்ளின் இத்தேர்
　ஓரடி கூடப் பெயராதே
இருபுறமும் பலர் ஒற்றுமையாக
　இழுத்தால் ஓடும் அதிவேகமே
ஊரில் நாட்டில் உள்ளோர் எல்லாம்
　ஒற்றுமை வாழ்வு பழகிடவே
தேரில் அமர்ந்தான் ஈசன் இன்றே
　தேர்வடம் இழுக்க வா வா வா!

— பி. எஸ். எம்.

பிரசுரம்: வானதி பதிப்பகம், பாண்டி பஜார், சென்னை—17; விலை ரூ. 4.

நானும் உன் குழந்தையே!

நல்ல சங்கீதக்கச்சேரியில், அரிய கீர்த்தனை நடுவில், ஓர் அபூர்வ சங்கதி விழுந்தால் ரசிகனுக்கு மெய்யெல்லாம் புல்லரித்து. "ஆகா!" என்பான். எதற்கு, "ஆகா" என்று பக்கத்திலிருப்பவர் கேட்டால் பதில் சொல்ல முடியாமல் திணறுவான். ஏறத்தாழ அந்த நிலைமையைத்தான் இந்த நவீனத்தைப் படிக்கும் இலக்கிய ரசிகன் அடைவான்.

ஒரு கோணத்திலிருந்து பார்த்தால் இது கதையே அல்ல என்று சொல்லலாம்; அதே சமயம் 'பேஷான கதை இருக்கிறதே' என்று சொல்லவும் தோன்றும். அதே போலத்தான் பாத்திரப் படைப்பு, சம்பவக் கோவை ஆகியவை பற்றியும் கூறத் தோன்றும்.

இச்சிறு நவீனத்தின் வாயிலாக ஸ்ரீமதி ருக்மிணி பார்த்தசாரதி இன்றைய இளம் தம்பதியரின் மனோ பாவங்களை வெகு அற்புதமாக நமக்கு வடித்துக் காட்டுகிறார்.

"எங்கேயோ படிச்சது இப்போ எனக்கு நினைவு வரது. கணவன்தான் மனைவியின் முதல் குழந்தையாம். மற்றக் குழந்தைகள் வளர்ந்து தத்தம் வாழ்க்கையைத் தேடிப் போனப்புறம்கூட, கணவன் மட்டும்' அவளுக்கு என்றும் குழந்தைதானாம்!" என்கிறாள் கல்யாணி.

கல்யாணியின் கூற்றை வெகு சாமர்த்தியமாக ஆசிரியை இந்த நவீனத்தின் மூலம் நிரூபிக்கிறார்.

நுட்பமான ஆண் பெண் மனோபாவங்கள்; சமுதாயம்பெண்களுக்குஇழைத்தஅநீதி ஆகிய அனைத்தும் இக்கதையில் ஆங்காங்கே பளிச் பளிச்சென்று ஒளிவிடுகின்றன. —எஸ்.வி.எஸ்.

பிரசுரம்: இமயம் பதிப்பகம், நாகப் பட்டினம். விலை: ரூ. 4.75.

பாரதி புதையல்

மகாகவி பாரதியின் எழுத்துக்களில் இது வரை அச்சேருதவை, அல்லது எப்போதோ பத்திரிகைகளில் வெளிவந்து மறைந்து கிடப்பவை — இவற்றைத் தேடித் திரட்டி, நூல் வடிவில் தொகுத்து அத்தொகுப்புக்களுக்கு, "பாரதி புதையல்" என்று பெயர் தந்து வெளியிட்டு வருகிறார், திரு ரா. அ. பத்மநாபன்.

இந்நூல் மூன்றும் தொகுதி. இதில் பாரதியாரின் சிலிர்க்கச் செய்யும் சில கவிதைகளும் சிந்திக்க வைக்கும் கட்டுரைகளும்தவிர அவரைப் பற்றி அவரோடு நெருங்கிப் பழகிய பல நண்பர்கள் எழுதிய கட்டுரைகளும் இடம் பெற்றுள்ளன. பாரதியாரைப் பற்றிப் பலருக்கும் தெரிந்திராத சம்பவங்கள் இந்த நூலில் காணப்படுகின்றன.

இவைகளைத் தொகுத்து நூலாக வெளியிடுவதையே தமது தலையாய பணியாகக் கொண்டிருக்கும் பாரதிபக்தர் திரு ரா. அ. பத்மநாபன் தமிழர்களின் நன்றிக்கும், மதிப்புக்கும் உரியவர்.


இந்நூலில் திரு வ. வே. சு. ஐயர், அரவிந்தர், சுப்பிரமணிய சிவா ஆகிய பாரதியார் காலத்துத் தேசபக்தர்களைப் பற்றிய பல அரிய விவரங்களையும் காண முடிகிறது.

"பாரதியாரின் கடைசி நாள்" என்ற பகுதியில் மகாகவியின் இறுதி மூச்சு எவ்விதம் அடங்கிற்று என்பது விவரமாகக் காணப்படுகிறது. அது கல்நெஞ்சையும் கரையச் செய்யும். — ஸோமாஸ்

பிரசுரம்: அமுதநிலையம், லிமிடெட், 1—45, ராயப்பேட்டை ஹைரோடு, சென்னை — 14; விலை: ரூ. 12.

ஆதிசங்கரர்　　　　காமாக்ஷி





திருமலை செல்லும் யாத்திரிகர் கவனிக்க:

திருமலையிலும் திருப்பதியிலும் தங்கும் வசதிகள்

அநேகத் தர்ம சத்திரங்களைத் (தர்மசாலைகள்) திருப்பதியிலும், திருமலையிலும் திருமலை – திருப்பதி தேவஸ்தானம் கட்டி யிருக்கிறது.

திருமலையில் நூற்றுக்கணக்கான அழகிய குடில்கள் (காட்டேஜ்) மிகக் குறைந்த வாடகையில் கிடைக்கின்றன. பாதிப் பகுதிக் குடில்களுக்கு வாடகை ரூ. 5/- முதல் ரூ. 9/- வரையில்; முழுக் குடில் வாடகை ரூ. 10/- முதல் ரூ. 16/- வரையில். ஐந்து உறுப்பினர்கள் கொண்ட ஒரு குடும்பம் பாதிப் பகுதிக் குடில்களிலும், 12 பேர் கொண்ட குடும்பம் முழுக் குடிலிலும் வசதியாகத் தங்கலாம்.

இத்தனை வசதிகளுடன் 10,000 முதல் 15,000 யாத்திரிகர் வரையில் திருமலையில் தங்க முடியும். ஆனால் அநேக சமயங்களில் கோயிலைத் தரிசிக்க வரும் பக்தர்களின் எண்ணிக்கை 25,000யும் தாண்டி விடுகிறது. கடைசி நிமிஷத்தில் இடம் கிடைக்காமல் திண்டாடுவதைத் தவிர்க்க, முன்கூட்டியே குடில்களுக்கு ரிஸர்வ் செய்து கொண்டு வருமாறு யாத்திரிகரை வேண்டுகிறோம். வரவேற்பு அதிகாரி, திருமலை – திருப்பதி தேவஸ்தானம், திருமலை (போன் : 2571) என்ற விலாசத்துக்கு ஒரு வாரம் முன்பே எழுதி ரிஸர்வ் செய்து கொள்ள வேண்டும். தங்கும் வசதி கோரி எழுதும் எல்லா விண்ணப்பங்களுடனும் ரூ. 20/-க்கு டிமாண்ட் டிராப்டோ, மணியார்டரோ சேர்த்து அனுப்ப வேண்டும். கிடைக்கக்கூடிய தங்குமிடங்களை ரிஸர்வ் செய்து தரப்படும்; அதிகப்படி கட்டணம் திருப்பித் தரப்படும்.

டிமாண்ட் டிராப்டோ, மணியார்டரோ திருமலைக்குக் கிடைத்தவுடன், விண்ணப்பித்தவர்களுக்கு ரிஸர்வேஷன் கார்டு ஒன்று அனுப்பப்படும். தங்குமிடங்களைப் பெற அந்த ரிஸர்வேஷன் கார்டையோ, மணியார்டர் அல்லது டிமாண்ட் டிராப்ட் ரசீதுகளையோ திருமலை விசாரணைக் காரியாலயத்தில் காட்ட வேண்டும்.

பொதுவாக ரிஸர்வேஷன் ஒரு நாளைக்கு மட்டுமே வழங்கப்படும். மேலும் நீடிக்க வேண்டினால், தங்குமிடங்கள் கிடைப்பதை அனுசரித்தே கொடுக்கப்படும்; உறுதி கூற முடியாது.

யாத்திரிகர் தங்கள் உடைமைகளை ஜாக்கிரதையாக வைத்துச் செல்லத் திருமலையிலும் திருப்பதியிலும் தேவஸ்தானக் 'காப்பு அறை' வசதிகள் உள்ளன. யாத்திரிகர் சமையல் செய்ய விரும்பினால் தேவையான பாத்திரங்களைத் தேவஸ்தானத்திலிருந்து குறைந்த டிபாஸிட் கட்டிப்பெறலாம். யாத்திரிகர் ரூ. 30/- டிபாஸிட் கட்டினால் காட்ரெஜ் பூட்டுகள் கொடுக்கப்படும்.

திருப்தியான தாவர உணவு வகைகளை நியாய விலையில் அளிக்கும் பல உணவு விடுதிகளைத் திருமலை – திருப்பதி தேவஸ்தானம் திருமலையில் நடத்துகிறது.

நிர்வாக அதிகாரி

திருமலை – திருப்பதி தேவஸ்தானம், திருப்பதி

அமரர் கல்கி

அத்தியாயம் 21

பயங்கரக் கனவு

சில நாட்களாக உமாகாந்தன் கல்லூரிக்கு வரவேயில்லை. பவானி அவனை வழக்கமாகச் சந்திக்கும் இடத்தில் காத்திருந்து காணாமல் கலங்கினாள். கல்லூரி முழுவதும் தினம் ஒரு முறை சுற்றி வந்து தனது சித்திரக் கண்களின் வட்டக் கருவிழிகளைக் கள்ளத்தனமாகச் சுழல விட்டுத் தேடினாள். அகப்படவில்லை. நெடு மூச்சுக்கள் நெஞ்சை வாட்ட அவனது வகுப்புக்கே கூடப் போய் ஜாடையாகப் பார்த்தாள். ஊஹூம், அங்கேயும் அவன் இல்லை.

'ஏதாவது அவசர காரியமாக ஊருக்குப் போக நேர்ந்திருக்கும். நாளை அல்லது மறு தினம் வந்துவிடுவார்' என்று சமாதானப் படுத்திக் கொண்டாள். 'லீவு லெட்டர் ஏதாவது வந்திருக்கிறதா ?' என்று கல்லூரிக் காரியாலயத்தில் விசாரிக்க அவளுக்குச் சங்கோசமாக இருந்தது. 'நீ யார் ? எதற்காகக் கேட்கிறாய்?' என்ற கேள்வி பிறந்தால் என்ன பதில் சொல்வது என்று குழம்பினாள்.

'ஒருவேளை அவருக்கு ஏதாவது உடம்பு அசௌக்கியமோ? கடுமையான ஜுரம் கண்டு படுத்த படுக்கையாக இருக்கிறாரோ?' என்று இரவெல்லாம் கற்பனைகளில் ஆழ்ந்து தூக்கம் பிடிக்காமல் தவித்தாள்.

ஐந்தாறு நாட்களுக்குப் பிறகு இந்த நிச்சயமற்ற நிலையை இனியும் தாங்கிக் கொள்ள முடியாது எனத் தீர்மானித்தவளாய் நேரே உமாகாந்தின் வீட்டுக்கே போய்ச் சேர்ந்தாள்.

அங்கே அவள் கேள்விப்பட்டது அவளை ஆச்சரியத்தில் ஆழ்த்தவில்லை. ஆனால் வருத்தமாய் இருந்தது. அதே சமயம் பெருமையாகவும் இருந்தது. உமாகாந்தின் அப்பா அவளை வரவேற்றார். கல்லூரி முதல்வருக்கே தாம் கடிதம் எழுதியிருப்பதாகச் சொன்னார்.

'' இருக்கலாம், ஸார் ! ஆனால் மாணவர்களுக்கு அந்த விவரம் ஏதும் தெரியவர நியாயமில்லையே ? அவர் ரொம்பப் 'பாப்புலர்'. அதனால் மாணவ மாணவியர் எல்லாருமே அவர் கல்லூரிக்கு வரக் காணுமே என்று கவலைப்படுகிறார்கள். விவரம் அறிந்து வர என்னைத் தேர்ந்தெடுத்து அனுப்பினார்கள்.''

''ரொம்ப மகிழ்ச்சி. உங்கள் எல்லோருக்கும் பெருமை தரக் கூடிய விஷயம் சொல்லப் போகிறேன். உமாகாந்த் கல்லூரிக்கு ஒழுங்காகப் போய் வந்தாலும் படிப்பில் சூரன் என்றாலும் புரட்சி உள்ளம் கொண்டவன் என்பது உங்களுக்குத் தெரிந்திருக்கும். அவன் குடும்பத்தினராகிய எங்களுக்கே தெரிவிக்காமல் ஏகாதிபத்தியத்துக்கு எதிராகச் சில ரகசிய வேலைகளில் ஈடுபட்டு வந்திருக்கிறான். ஸி.ஐ.டி.க்கள் அதை அறிந்து கொண்டு விட்டனர். அவனை அரெஸ்ட் செய்து இரண்டே நாட்களில் மாஜிஸ்திரேட் முன்னால் சாட்சியங்கள் சமர்ப்பித்து உள்ளே தள்ளிவிட்டனர். ஆறு வருஷ தண்டனை. மேல் கோர்ட்டில் அப்பீலுக்குப் போகக் கூடாதென்று உமாகாந்த் என்னைத் தடுத்துவிட்டான்!'' கருணாகரன் கண்களைக் கைக் குட்டையால் துடைத்துக் கொண்டார்.

''அஜாதீர்கள், ஸார் ! இப்படிப்பட்ட புதல்வனைப் பெற்றதற்காக ரொம்பப் பெருமைப்படலாம் நீங்கள்'' என்றாள் பவானி. அவன் எழுதிய சரித்திர வியாசம் பற்றிச் சொன்னாள். அதைக் கேட்டு இலேசாகச் சிரித்தார் உமாகாந்தின் தகப்பனார் கருணாகரன்.

''செய்யக் கூடியவன்தான்'' என்றார் பெருமிதத் தொனியில். ''எனக்குச் சிரிப்பதா அழுவதா என்றே புரியவில்லை !''

'' எங்கள் நிலையும் அதுதான் ஸார். மாணவர்களுக்கு என்றுமே உமாகாந்திடம் ரொம்ப மதிப்புண்டு. அவர்கள் அவர் சிறை புகுந்ததற்காக வருந்துகிறார்கள். அதே சமயம் அவரது துணிச்சல், வீரம், லட்சியப் போக்கு எல்லாம் எங்களை மேனி சிலிர்க்க வைக்கிறது.'' பவானி பொங்கிக் கொண்டு வந்த அழுகையைச் சிரமப்பட்டு அடக்கிக் கொண்டாள்.

மாமா குணசேகரனிடம் தற்போது தனக்குத் திருமணத்தில் நாட்டமில்லை என்று உறுதியாகவும் இறுதியாகவும் கூறிவிட்டு மாடியில் தன் தனி அறைக்கு வந்து சேர்ந்த பவானி, உமாகாந்தனைக் குறித்த இந்தப் பழைய சம்பவங்களையெல்லாம் நினைவுபடுத்திக் கொண்டாள்.

கூடவே சமீபத்திய மர்மமான நிகழ்ச்சிகளின் மீதும் அவள் சிந்தனை திரும்பியது. உமாகாந்தனுக்கும் மாஜிஸ்திரேட் கோவர்த்தனனுக்கும் இடையே உள்ள விசித்திரமான உருவ ஒற்றுமையை அவள் எண்ணிப் பார்த்தாள். கோவர்த்தனன் கண்ணாடி போட்டிருக்கிறார், மீசை கிடையாது, உடை விஷயங்

களில் வேற்றுமை உண்டு. எல்லாம் சரிதான். ஆனாலும் முகத்தில் உமாகாந்தனின் ஜாடை நிறைய இருக்கத்தான் செய்கிறது. கோவர்த்தனன்பால் தான் ஈர்க்கப்பட்டிருப்பதற்கும் நெருங்கிப் பழகி நட்பை வளர்த்துக் கொள்வதற்கும் அது ஒரு காரணம் என்பதை மறுக்க முடியாது.

'இந்த மலைச் சாரல்களில் ஸி. ஐ. டி.கள் தப்பி ஓடிய கைதி ஒருவனைத் தேடுகிறார்கள். அவர்கள் கரத்தில் இருந்த புகைப்படத்தைப் பார்த்தேன். கோவர்த்தனன் போலவே இருந்தது. மாஜிஸ்திரேட் ஒரு வேஷதாரி. மூக்குக் கண்ணாடி போட்டுக் கொண்டு மீசையையும் எடுத்துவிட்டார் என்றாலும் அந்தப் படத்தில் இருந்தது கோவர்த்தனனே தான்' என்று அழுத்தம் திருத்தமாக அன்று கல்யாணம் கூறியதை அவள் எண்ணிப் பார்த்தாள்.

அன்று அவள் எப்படிப் பதறிப்போனாள்? கோவர்த்தனனிடம் அவள் ஏற்கனவே உமாகாந்தனின் சாயலைக் கண்டிருந்தாள். ஆகவேதான் அப்படிக் கலவரம் அடைந்தாள். சிறையிலிருந்து தப்பி ஓடி வந்திருக்கும் அந்தக் கைதி உமாகாந்தனாகவே இருப்பாரோ என்ற வலுவான சந்தேகம் ஏற்பட்டது. 'அவர் ஒருவேளை நான் இங்கிருப்பதை அறிந்து கொண்டு இந்த வட்டாரத்தில் ஒளிந்து வாழ்கிறாரோ? என்னை ரகசியமாக ஓரிடத்தில் சந்திக்கச் சமயம் பார்த்திருக்கிறாரோ' என்றெல்லாம் கற்பனை செய்தாள். அதனால்தான் கல்யாணத்தினிடம் ஸி. ஐ. டி.க்களைச் சந்தித்து, புகைப்படத்தைப் பார்த்தது முதலான விவரங்களை யாரிடமும் கூறக் கூடாது என்று மன்றாடிக் கேட்டுக் கொண்டு கையடித்துச் சத்தியமும் பெற்றுக் கொண்டாள் பவானி.

இப்போது எண்ணிப் பார்த்தபோது எல்லாமே அசட்டுத்தனமான முடிவுகளாக அவளுக்குத் தோன்றியது. 'ஆறு ஆண்டு தண்டனை முடிய இன்னும் இரு ஆண்டுகள் இருக்கின்றன. இந்தச் சமயத்தில் போய் உமாகாந்தன் சிறையிலிருந்து தப்பி ஓடி வருவாரா? அவரைப் போன்றவர்கள் சிறை செல்வதைத் தியாகம் என்றும் கௌரவம் என்றும் கருதுபவர்கள் ஆயிற்றே? திருட்டுக் குற்றம் புரிந்தவன் தப்பி வர முயலலாம். தியாக வேள்வி நடத்துபவன் சிறையின் துயரங்களுக்கு அஞ்சுவானா? கல்யாணம் பார்த்த புகைப்படம் உமாகாந்தனாய் இருக்கவே முடியாது. வேறு யாராவதுதான் இருக்க வேண்டும்.

'அப்படி ஒரு வேளை உமாகாந்தன் தப்பி வந்தது உண்மையானால் தேசபக்தர்களின் நோக்கில் அது தகாத காரியமாகிவிடுமே? அத்தகைய காரியத்தில் அவரை இறங்கத் தூண்டியது எது? சிறைச்சாலை அளித்த துயரங்களா? அல்லது காந்திய மார்க்கங்களில் அவர் நம்பிக்கை இழந்தது காரணமா? சிறைக்கு வெளியே இருந்தால்தான் தேசத்துக்கு அதிகமாகத் தொண்டாற்ற முடியும் என்று அவர் கருத ஆரம்பித்துவிட்டாரா? இவையெல்லாம் இல்லையென்றால் வேறு என்ன? பவானியைப் பார்க்க வேண்டும் என்ற அடக்க முடியாத ஆசையா?'

இப்படி நினைத்ததுமே பவானிக்கு மேனியெங்கும் சிலிர்த்தது. அவளுடைய வாளிப்பான உடல் நெளிந்து புரண்டதில் படுக்கை விரிப்பு கசங்கியது. நாணத்தில் சிவந்த முகத்தை மறைத்துக் கொள்ள அவள் தலையணையைத் தஞ்சம் புகுந்தபோது அது படாதபாடு பட்டது!

அவள் மெல்ல மெல்ல முகத்தைத் திருப்பிக் கட்டிலுக்குப் பக்கத்தில் இருந்த டிரெஸ்ஸிங் டேபிள் நிலைக் கண்ணாடியில் தன் முகத்தையும் முடிந்தவரை தன் உருவத்தையும் பெருமிதம் பொங்கப் பார்த்துக் கொண்டாள். "உமாகாந்த்! இத்தனை அழகும் உங்களுக்காகத்தான் காத்திருக்கிறது. சீக்கிரம் வாருங்கள். அள்ளிக் கொள்ளுங்கள்" என்று மிருதுவான குரலில் சொன்னாள்.

அவள் கரம் தயக்கத்துடனேயே நீண்டு டிரஸ்ஸிங் டேபிளின் சிறிய இழுப்பறை ஒன்றைத் திறந்தது. அதில் மேலாக இருந்த கைக்குட்டைகள், உள்ளாடைகளுக்கு அடியிலிருந்து ஓர் உறையைக் கள்ளத்தனமான பாவனையோடு வெளியே எடுத்தது. மெல்ல அதனைப் பிரித்த விரல்கள் உள்ளேயிருந்து ஒரு புகைப்படத்தைச் சிறிது சிறிதாக வெளியே உருவின. அறையின் கதவு தாளிடப்பட்டிருக்கிறதா என்று நிச்சயப்படுத்திக் கொண்டு அப்புகைப்படத்தைத் தன் அதரங்களில் ஒற்றி எடுத்தாள், பவானி. பிறகு



அதனை அப்படியே தன் நெஞ்சில் தவழவிட்டுக் கொண்டு தூங்கிப் போனாள்.

தூக்கத்திலே ஒரு விசித்திரமான கனவு கண்டாள், பவானி. அந்தக் கனவிலும் அவள் தூங்கிக் கொண்டிருந்தாள். அவள் அருகில் வந்து உமாகாந்தன் நின்று, "பவானி! பவானி!" என்று அழைத்தான். அவள் எழுந்திருக்காதது கண்டு அவனுக்குக் கோபம் வந்தது. "ஆம், உனக்காகத்தானே, உன் பிரிவாற்றாமையால்தானே நான் சிறையிலிருந்து தப்பி ஓடி வந்தேன். இப்படி என்னை அலட்சியம் பண்ணுகிறாயே! என்னை ஸி. ஐ. டி.க்கள் துரத்தி வருகிறார்கள். சீக்கிரம் எனக்கு அடைக்கலம் தந்து மறைத்து வைத்துக் காப்பாற்று. தூங்கியது போதும், விழித்தெழு!" என்றான்.

பவானி விழித்துக் கொண்டாள். ஆனால் எழுந்திருக்க அவளால் முடியவில்லை. இரண்டு

ஸி. ஐ. டிக்கள் சற்றுத் தொலைவில் தெரிந்தார்கள். அவர்கள் உமாகாந்தனைச் சுட்டிக் காட்டியபடி ஓடி வந்தார்கள். உமாகாந்தன் ''பவானி! பவானி!'' என்று அவள் நெஞ்சக் கதவை ஓங்கித் தட்டினான். பவானி எழுந்து இதய வாசலைத் திறக்கத்தான் முயன்றாள், முடியவில்லை! அவளை எழுந்திருக்கவே விடாமல் அவள் தோள்களை அழுத்திப் பிடித்தன இரு கரங்கள். அவள் முகத்தை இரு அகன்ற சிவந்த கண்கள் வெறித்து நோக்கின. அந்தக் கண்களும் கரங்களும் மாஜிஸ்திரேட் கோவர்த்தனனுடையவை. அந்தக் கண்கள் பெரிதாகிப் பெரிதாகி அவளையே விழுங்கப் பார்த்தன. பவானி தன்னை விடுவித்துக் கொண்டு உமாகாந்தனின் உதவிக்குப் போக முயன்று போராடினாள்; பலிக்கவில்லை. ஸி.ஐ.டிக்கள் இருவரும் விலங்குகளோடு உமாகாந்தனை அணுகிவிட்டனர். ''பவானி! காப்பாற்று'' என்று அலறினான் உமாகாந்தன், அவள் இதய வீட்டின் வெளியே இருந்தவாறு. ''உமாகாந்த்!'' என்று இயலாமைக்



குரலில் விளித்தான் பவானி, உள்ளே கட்டிலில் கிடந்தவாறு.

பவானி திடுக்கிட்டு விழித்துக் கொண்டாள். அவள் மேனியெல்லாம் வியர்த்துக் கொட்டிக் காற்றில் சலசலக்கும் அரச இலை மாதிரி நடுங்கிக் கொண்டிருந்தது.

நெஞ்சின் மீதிருந்த உமாகாந்தின் படத்தை எடுத்துப் பார்த்தவாறே இரவெல்லாம் விசித்து விசித்து அழுதாள்.

அத்தியாயம் 22

கிணற்றில் கமலா!

கமலா அடுப்பு ஊதினாள். புகை வந்ததே தவிர நெருப்புப் பற்றவில்லை. "சனியனே! இரு. இரு ! சண்டித்தனமா பண்ணுகிறாய்? என்றாவது ஒரு நாள் என்னிடம் நாலு நோட்டுக் கிடைக்காமல் போகாது. அப்போ கள்ளச் சந்தையிலே பாட்டில் கிரசின் வாங்கி அத்தனையையும் உன் தலையிலே அபிஷேகம் பண்ணி நெருப்பு வைக்கிறேன்" என்று கறுவிக் கொண்டாள் கமலா, கண்களைக் கசக்கியபடியே.

"பள்ளிக்கூடத்துக்கு நேரமாச்சே, சாப்பாடு ரெடியா ?" என்று கேட்டுக் கொண்டே வந்தான் விசு.

"விரட்டறதிலே ஒண்ணும் குறைச்சல் இல்லே. காலமேயே வந்து கொஞ்சம் கூட மாட ஒத்தாசை பண்ணப்படாதா ?" என்றாள் கமலா.

"எனக்கு 'ஹோம் ஒர்க்' இருந்தது."

"இல்லாட்டா உதவி பண்ணிக் கிழிச்சிருவாக்கும் ?"

"நான் ஏன் உதவணும் ? நீ இழுக்கிற இழுப்புக்கெல்லாம் வளைந்து கொடுக்க நான் என்ன கல்யாணம் மாமாவா? உன்னைக் கல்யாணம் பண்ணிக்கப் போறேனா ?"

"தடி ராஸ்கல் ! உனக்குச் சோறு கிடையாது. போ ! பழையதுதான்" என்று பொய்க் கோபத்துடன் சீறினாள் கமலா. அவன் கூறியதை அவள் மனம் வருடித் தந்து கொஞ்சியது.

"பழையதுதான் உடம்புக்கு நல்லது ; அதோடு சட்டித் தயிரையும் வடுமாங்காயையும் எடு."

அவனை மகிழ்விக்க ஆடைத் தயிராக எடுத்துப் போட்ட கமலா, "ஏண்டா, கொஞ்ச நாளா கல்யாணம் மாமாவையே காணுமே ? ஏன் வரதேயில்லை ?" என்று கேட்டாள்.

"அவருக்குக் கல்யாணம் !"

"என்ன? எங்கே ? எப்போது?" என்று பதறினாள் கமலா.

"நிஜக் கல்யாணம் இல்லே, அக்கா. நீ பயப்படாதே. நாடகத்திலேதான்!" என்றான் விசு.

"ஓ ! ஏதோ பர்மா அகதி, அது இது என்றார்களே."

"ஆமாம், ஆமாம் ! அந்த அது இதுக்காகத்தான் நாடகம்!" என்று கூறி எழுந்த விசு, புத்தகப் பையை இடது கரத்தில் தூக்கிக் கொண்டு, ஓடினான். "இரண்டு நிமிஷம் லேட்டானாலும்கூட அந்த இரட்டை மண்டை பெஞ்சு மேலே ஏற்றி விடுகிறது !" என்று அவன் தன் உபாத்தியாயரை முற்றத்திலிருந்து வாழ்த்துவது கமலாவின் காதுக்கு எட்டியது.

"பர்மா அகதி, பர்மா அகதி!" என்று முணு முணுத்துக் கொண்டாள் கமலா. "பர்மாவிலிருந்து வந்த அகதிகளுக்குத்தான் மவுசு. உள்ளூர் அகதியாக இருந்தால் யார் லட்சியம் பண்ணுகிறார்கள்?" என்று தன்னைத் தானே கோபத்துடன் கேட்டுக் கொண்டு குடத்தை எடுத்து இடுப்பில் வைத்துக் கொல்லைப்புறம் நடந்தாள். அதைப் புளி போட்டுத் தேங்காய் நாரினால் அழுந்த அழுந்தத் தேய்த்தாள். "பர்மா அகதிகளாம், நாடகமாம், நாடகத்தில் ஒரு கல்யாணமாம். இந்த ஏழையின் ஞாபகம் அவருக்கு எங்கே வரப் போகிறது !"

அவளுக்குக் கோபம் வந்தது. குடத்தைக் கழுவியதோடு தண்ணீர் தீர்ந்து விட்டது. தாம்புக் கயிற்றில் குடத்தை மாட்டி, விருட்டென்று சுருக்கை இழுத்து ஆத்திரத்துடன் சரேலென்று கிணற்றில் இறக்கினாள். அந்த வேகத்தைச் சமாளிக்க முடியாமல் கயிறு ஜகடையிலிருந்து நழுவிச் சிக்கிக் கொண்டது.

"தரித்திரம் ! நான் பெண்ணாய்ப் பிறந்ததே அடுப்புப் புகையுடனும் கிணற்று ஜகடையுடனும் போராடத்தான்" என்று அலுத்துக் கொண்டு கயிற்றைச் சரி செய்ய முயன்றாள்; எட்டவில்லை. கிணற்று மதில் மீது ஏறினாள். சாய்ந்தாள்.


அதே சமயம் வாசலில், "ஸார் ! ஸார்!" என்ற குரல் கேட்டது. அது கல்யாணத்தின் குரல்தான் !

'ஐயோ ! அவர் என்னை இந்தக் கோலத்தில் பார்த்துவிடக் கூடாதே' என்று எண்ணிய மாத்திரத்தில் கமலாவின் உடல் பதறியது.

மாசிலாமணி பதில் குரல் தராதது கண்டு அடுத்தாற்போல் கல்யாணம், "கமலா!" என்று அழைத்தபடி முற்றத்தைத் தாண்டி வந்தான்.

'கமலா' என்று அவன் அழைப்பது கேட்டதோ இல்லையோ, இவள் மேனியின் மயிர்க் கால்களிலெல்லாம் லட்சோப லட்சம் குரல்கள் — கல்யாணத்தின் குரல்கள் — 'கமலா' என்று அன்பும் உரிமையும் ததும்ப அழைக்கும் குரல்கள்—புகுந்தன. அந்த இன்ப ஹிம்சையைத் தாள முடியாமல் அவள் நடுங்கினாள். முதலில் ஏற்பட்ட கூச்ச பயம் அடுத்து உண்டான இன்ப வேதனை இரண்டும் அவளை உலுக்கி எடுத்து உள்ளே தள்ளி விட்டன !


கமலா கிணற்றுக்குள் 'தொபீர்' என்று விழுந்தாள். "ஐயோ !" என்று அவள் அலறுவது அதற்கு முன்பாகவே கேட்டது. அப்புறம் நிசப்தம்தான் ! (தொடரும்)




திருவனந்தபுரத்தில் உள்ள மருத்துவ மையம் செயற்கை இருதய வால்வு ஒன்றினைத் தயாரிக்கப் போகிறது. இதே வால்வினை வெளி நாட்டிலிருந்து இறக்குமதி செய்தால் அதன் விலை ரூ. 5000. இந்தியாவிலேயே தயாரிக்கப் போவதால் இந்த இருதய வால்வின் விலை ரூ. 500 மட்டுமே!

தகவல்: "வீஎல்லார்"

அன்றும் இன்றும் சிலருக்கு அதே இளந்தளிர் மேனி!





கனிவான பியர்ஸ் சோப்பினால் காத்திடுவீர்
உங்கள் மேனி மெருகை. மாணிக்கப் படிகம்போல்
மிளிரும் ஒவ்வொரு வில்லையிலும் ஒரு நூறாண்டு
கால சோப்-உற்பத்தி அநுபவம் உள்ளிறங்கியுள்ளது.
பிஞ்சு மென்மை கொஞ்சும் பியர்ஸ்—தூய்மைக்
கொழுந்து—கண்கூடாக நீங்கள் ஊடுருவிப்
பார்க்கக்கூடிய உன்னதத் தூய்மை.

பியர்ஸ் சருமக் களை...
கன்னிப் பருவக் களை


இந்துஸ்தான் லீவரின் தரமான தயாரிப்பு. லின்டாஸ்-FS. 56-140 TM

ஜூலை 11ஆ கல்கி இதழ் ஆரம்பம்

நா. பார்த்தசாரதி எழுதும்

புது உலகம் கண்டேன்!

ரஷ்யா, கிழக்கு ஐரோப்பிய நாடுகள், பிரிட்டன் ஆகியவற்றில் பயண அனுபவங்கள்



சுஜாதா

எழுதும்

விஞ்ஞானக் கதைகள்

இது தொடர்பாகக் கல்லூரி மாணவ மாணவியருக்கு ஒரு கட்டுரைப் போட்டியும் உண்டு



சித்திரத் தொடர்

பாடுவோம் பாப் மியூசிக்!

கதை: சாருகேசி/தமயந்தி

சித்திரம்: ராஜு

அமோக பரிசுகள்
கார்பொரேஷன் பாங்கின்
பவழ விழா
ரொக்கப் பத்திரங்களை
இன்றே வாங்குங்கள்

கார்பொரேஷன் பாங்கின் பவழ விழாப் பத்திரம் தனிச் சிறப்பு வாய்ந்தது. இதுவரை நீங்கள் கண்டிராத மூன்று ஒப்பற்ற அம்சங்களைக்கொண்ட ஒரே பத்திரம். கவர்ச்சி மிக்க ரொக்கப் பரிசுகள். அன்பளிப்புச் சீட்டுகள். ஆண்டு ஒன்றுக்கு 10 சதவிகித வட்டி.

1 61 மாதங்களுக்கு ரூ. 500 முதல்அதன் மடங்குகளில் பத்திரங்கள் வழங்கப்படுகின்றன. ரூ. 500 மதிப்புள்ள பத்திரம் கால முடிவில் ரூ. 755 பெறுமானம் அடைகிறது.

2 ரூ. 500 முதலீட்டுப் பத்திரத்திற்கு ஒரு அன்பளிப்புச் சீட்டு வழங்கப்படும். ரூ. 5,000 முதலீட்டுப் பத்திரத்திற்கு 10 அன்பளிப்புச் சீட்டுகள் கொடுக்கப்படும். இந்தச் சீட்டுகளை வங்கியினர் அங்கீகாரம் பெற்ற கடைகளிலோ சிறப்பு அங்காடிகளிலோ கொடுத்து சீட்டுகளின் மதிப்புக்குத் தகுந்த பொருள்களை வாங்கிக் கொள்ளலாம்.

3 1977 ஜூலை 31க்குப் பிறகு வங்கியரால் குலுக்கல் தேதி அறிவிக்கப்படும். இந்தத் தேதிக்கு முன்னர் வாங்கப்பட்ட பத்திரங்கள் மட்டுமே குலுக்கலில் இடம் பெறும். குலுக்கலுக்கு ரூ. 500 மதிப்புள்ள பத்திரம் ஒரு எண்ணாகவும் ரூ. 5000 மதிப்புள்ள பத்திரம் 10 எண்ணாகவும் கருதப்படும்.

ரொக்கப் பரிசு விவரங்கள்:

1 முதற் பரிசு - ரூ. 1 லட்சம்

5	இரண்டாவது பரிசுகள்	ரூ.	25,000	ஒவ்வொன்றும்
100	மூன்றாவது பரிசுகள்	ரூ.	1,000	,,
1000	நான்காவது பரிசுகள்	ரூ.	100	,,
1500	ஆறுதல் பரிசுகள்	ரூ.	50	,,

மற்ற விவரங்களுக்கு உங்கள் அருகிலுள்ள எங்கள் கிளை வங்கியை அணுகுங்கள்.

ESTD. 1906

கார்பொரேஷன் பாங்க் லிமிடெட்

—சிநேக மனப்பான்மையுடன் விளங்கும் வங்கி


PLATINUM JUBILEE CORPORATION BANK LIMITED 1976

பதிவு அலுவலகம்: உடுப்பி

தலைமைச் செயலகம்: மங்களூர்

தலைமை இயக்குனர்: N. N. பை

maa / CBL / 149 / TAM



சேரமான் காதலி

கண்ணதாசன்

அத்தியாயம் 13

அரங்கன் அழைக்கிறான்

திருக்கண்ணபுரத்துக்குக் குலசேகர ஆழ்வார் வந்ததில் இருந்து, சோழ நாடே அங்கு திரள ஆரம்பித்தது.

தென்னந் தோப்புகளும், பசுமை நிறைந்த வயல்களும் பொங்கிப் பொலிந்து காணப்படும் அந்தச் சிற்றூர், மக்களை ஈர்க்கும் திருத்தலமாயிற்று.

மக்களைக் காணக் காண ஆழ்வாரின் மனத்தில் புதிய தெம்பும், உற்சாகமும் உண்டாயிற்று. ஆயினும் நாடி நரம் பெங்கும் ஓடிப் பாயும் ரத்த பாசம், அத்தனை மக்களுக்கிடையேயும் பெற்ற மகளையே சிந்தித்தது.

இல்லறங் கண்டு துறவறம் பூண்ட ஆழ்வார், தம் சொல்லறத்தினால் மக்களை நல்லறத்துக்குத் திருப்பினார்.

எனினும் அவர் மனிதர்.


மனசை உடையவன் என்ற பொருளில்தான், 'மனுஷ்யன்' என்ற வார்த்தை பிறந்தது.

அவர் அரண்மனையைத் துறந்தார். அரியணையைத் துறந்தார். அணிமணிகளைத் துறந்தார். மகுடத்தைத் துறந்தார். மனத்தைத் துறக்க முடியவில்லை.

குற்றவாளியையும், நிரபராதியையும் கூடவே இருந்து குழம்ப வைக்கும் மனக் காய்ச்சல் அவரைப் படாத பாடு படுத்திற்று.

அங்கணெடு மதிள்புடை சூழ்
　　அயோத்தி என்னும்
அணிநகரத் துலகனைத்தும்
　　விளக்கும் சோதி
வெங்கதிரோன் குலத்திற்கோர்
　　விளக்காய்த் தோன்றி
விண்முழுதும் உயக்கொண்ட
　　வீரன் றன் —

—கதையைக் கேட்டுத் தன்னை மறந்து, காடு புகுந்தானைப் பின்பற்றி நாடு துறந்து, அஞ்ஞானத்திலிருந்து மக்களை



மீட்கப் புறப்பட்ட அவரால், அன்பில் இருந்து மனத்தை மீட்க முடியவில்லை.

தடவரைத் தோள் தசரதனே பின்னைப் பாசம் தாளாது உயிர் நீத்தான் எனில், குலசேகர ஆழ்வாரின் நிலை என்ன ?

நெற்றியில் கோபியிட்டுக் கூடிநின்று 'பற்றற்றவனே பாசத்தை வென்றவனே' என்று மக்களெல்லாம் கோஷிக்கும் போது, அவர் தமக்குள் சிரித்துக் கொள்வார்.

'பாசத்தில் சிக்காதவனே, பாசத்தை வென்றவன்' என்று, தமக்குத்தாமே கூறிக் கொள்வார்.

'பாதுகாப்பான ஏற்பாடுகளோடு பட்டம் துறந்தும், அத்தனை பாதுகாப்பும் மனித முயற்சியின் பலவீனமாகவே ஆகி விட்டதே' என்ற கவலையிலிருந்து அவரால் மீள முடியவில்லை.

'பத்துத் திசைகளிலும் தேர் நடத்திய தசரதன், பல நாடுகளையும் வென்று காட்டிய குலசேகர ஆழ்வார்' என்று ஒரு பெரியார் அவரைப் புகழ்ந்த நேரத்தில் அவர் மகிழ்ந்ததுண்டு.

தசரதனோடு தம்மை ஒப்பிட்ட அந்தப் பெரியாரை ஆழ்வார் திருக்கண்ணபுரத்திலேதான் நினைவு கூர்ந்தார்.

தசரத புத்திரன் காடு சென்றதற்காவது ஒரு காலவரம்பு இருந்தது.

ஏழிரண்டாண்டில் நாடு திரும்புவான் என்ற எண்ணம் இருந்தது.

மார்த்தாண்ட வர்மனின் நிலை அப்படி இல்லையே!

காட்டில் அடித்த கூடாரத்தில் சீதை வடிவாய்த் தோன்றிய சிவப்பு மூக்குத்திக்காரி, அகஸ்தீஸ்வரம் காட்டில் மார்த்தாண்ட வர்மன் இருப்பதாகச் சொல்லி யிருந்தாள்.

அங்கே போய் மகனைப் பார்க்க வேண்டும் போல அவருக்குத் தோன்றிற்று.


வந்தெதிர்த்த தாடகை தன் உரத்தைக் கீறி வல்லரக்கர் உயிருண்ட ராமனைப் போல், மார்த்தாண்டவர்மனும் பகையை வெல்ல மாட்டானா?

வஞ்சியின் மக்கள் எவ்வளவு வஞ்சகர்கள்?

அபகரிக்கப்பட்ட அரியணைக்கும் அவர்கள் தலை தாழ்ந்து வணக்கம் செலுத்துகிறார்கள்.

அரசுரிமையை யார் ஏற்றாலும் அவர்களுக்கொரு வாழ்த்துப் பாடுகிறார்கள்.

ஆழ்வார் பரம்பரை போதித்த எளிமையும் அலைந்து மக்களிடமும் செல்லவில்லையே.




— அவர் நினைத்தார், நினைத்தார்; நெஞ்சுருக நினைத்தார்.

ஊனுருக உளமுருக, உயிரெல்லாம் நெக்குருக அரங்கனைப் பாடி மகிழ்ந்த அவர், இப்போது உண்மையிலேயே உடலுருகத் தொடங்கினார்.

திருக்கண்ணபுரம் திருவரங்கில் அவர் தினமும் தோன்றினார்.

அங்கே அவர் மக்களுக்கு உபதேசிக்கும் சில நாழிகைகளே, அவருக்கு நிம்மதியளிக்கும் நாழிகைகள்.

கனவில் தோன்றிய காரிகையை நினைவுக்குக் கொண்டு வர முடியாமல் தடுமாறிய அவர், அவள் தந்த உணர்ச்சிகளால் உந்தப்பட்டு அன்றைய அரங்குக்கு வந்தார்.



அரங்கத்தின் முன்னால். மக்கள் நிரம்பி வழிந்தனர்.

ஆயிரக்கணக்கான மாதர் குழாங்கள் கைகட்டி நின்றன.

பேதையர், பெதும்பையர், பேரிளம் பெண்களெனப் பலவகை மாதரும் பல்கிக் கிடந்தனர்.

திறந்த திருமேனியோடு வீற்றிருந்த பக்தர்கள் பல்லாயிரம்.

அவர்களுக்காக ஆங்காங்கு நிறுவப் பட்டிருந்த இரவு நேர அங்காடிகளின் விளக்கு வெளிச்சமே, அவையைச் சோதி மயமாக்கிக் கொண்டிருந்தது.

ஆழ்வார் அரங்கில் தோன்றியதும் அந்த மாபெரும் கூட்டமும் தலைக்கு மேல் கரம் கூப்பி அவரை வணங்கிற்று.

மக்களின் வணக்கமும், வாழ்த்தும் அவரது மன நோயைச் சற்று மறையச் செய்தன.

''அவையை நிரப்பிய பக்த கோடிகளே,''

— அவர் குரல் மெதுவாகவே ஒலித்தது.

ஏன் விழுந்தாலும் ஒலி கேட்கும் அளவுக்குக் கூட்டம் அமைதியுற்றிருந்தது.

''அன்பே வடிவாய் அமர்ந்திருக்கும் உங்களைக் காண, எம்பெருமான் கண்ணபுரத்தான் எனக்களித்த வாய்ப்புக்கு அவனுக்கு நன்றி சொல்கிறேன்.''

இந்த ஒரு வரியிலேயே அவருக்கு மேல்மூச்சு வாங்கிற்று. சில வினாடிகள் அமைதியுற்றிருந்தார்.

''பாண்டிய நாட்டு மலையிலே பிறந்த கல்லொன்று, சோழ நாட்டுக் கோவிலிலே சிலையாக நிற்கிறது.

ஒரு கல்லின் யாத்திரை அதன்மூலம் நிரந்தரமான புனிதத்துவம் பெற்று விட்டது.

அவ்வண்ணமே வஞ்சியில் தோன்றிய இச்சிறிய கல் தனது யாத்திரையைத் திருக்கண்ணபுரத்தில் புனிதமாக்கப் போகிறது.

மரணம் வெல்ல முடியாதென்பதை அறிந்தும், மனிதர்கள் மரணத்தை எண்ணிக் கலங்குகிறார்கள்.

எனது மூதாதையர் மரணத்தை வென்றதில்லை. ஆகவே, நானும் வெல்லப் போவதில்லை. அதனால் எனக்கு மரண பயமில்லை.

இறைவனுக்கு இரண்டு பெயர்கள் உண்டு.

ஒன்று 'பயத்தை உண்டாக்குகிறவன்' என்பது. இன்னொன்று, 'பயத்தைப் போக்குகிறவன்' என்பது.

ஆக்கும் சக்தியுடையவனே அழிக்கும் சக்திக்கும் நாயகன்.

பிறப்புக்கு எவன் மூலமோ, இறப்புக்கும் அவனே மூலம்.

இதில் மனிதன் செய்யக் கூடியது காலத்தை எதிர்பார்ப்பதே!

திருமால் இயக்கத்தில் சங்கும், சக்கரமும் முக்கியமானவை.

சக்கரம் சுற்றுகிறது; சங்கு ஒலிக்கிறது.

அதன் தத்துவம், உலகம் சுற்றிக் கொண்டிருக்கிறது; உயிர்கள் ஒலித்துக் கொண்டிருக்கின்றன.

அவன் சங்கொலிப்பது நின்றாலும், சக்கரம் சுழல்வது நிற்காது.

இயக்கி விட்டவன் கவனித்துக் கொண்டிருக்கிறான்; இயங்குகிறவர்கள் ஓடியாடிக் கொண்டிருக்கிறார்கள்.

இதோ நீங்கள் அமர்ந்திருக்கும் மண்ணிலே எத்தனை காலடிச் சுவடுகள் பதிந்திருக்கின்றன!

அவற்றைப் பதித்த கால்கள் எங்கே?

கால்களைக் காணோம், சுவடுகள் தென்படுகின்றன.

இங்கே சில சுவடுகளில் இருந்து மட்டுமே கம்பீரமான ஒலி தட்டுப்படுகிறது.

அது வாழ்வாங்கு வாழ்ந்த தெய்வீக புருஷர்களின் காலடி.

மானிட தர்மத்தை மறக்காமலும், தெய்வ இயக்கத்தை மறுக்காமலும் அவர்கள் பாலம் போல் நின்றார்கள்.

கால காலங்களாகப் போதிக்கப்பட்டும் இன்னும் மானிட தர்மம் போதனைக்குரியதாகவே இருக்கிறது.

வேதனைக்குரிய எதுவும், போதனைக்குரியதுதான்.

சோதனைக்குரியது எதுவும், வேதனைக்குரியதுதான்.

இன்னதுதான் நடக்கும் என்று ஏற்கனவே ஒரு விதி இருக்கும் போது கண்ணீருக்கு அர்த்தமென்ன?

எனக்கும் தெரிகிறது; ஆனாலும் கண்ணீர் வருகிறது.

எப்படி அமைதியடைவது?

அழுவதற்கும் சேர்த்துத்தானே கண்களை அவன் கொடுத்தான்! அவை தன் கடமையைச் செய்யட்டும் என்று விட்டு விடுவது.

கால்கள் நடக்க விரும்புகின்றன; குழந்தைகள் அதைக் கட்டிப் பிடிக்கின்றன.

கைகள் வணங்க விரும்புகின்றவை; வயிறு அதை வேலை செய்யச் சொல்கிறது.

விலங்குகளைப் பூட்டிக் கொண்டு நாட்டியமாடுவது லௌகிக வாழ்வு.

இதிலிருந்து விடுபட முடியாவிட்டாலும், 'கண்ணபுரத் திருமாலே, அடுத்த பிறப்பிலாவது என்னை விலங்குகள் இல்லாத குழந்தையாகப் பிறக்க வை' என்று வேண்டிக் கொள்வதே நமது கடமை.

காய்கறிகளை நாம் பயிரிடுவோம்; அதன் விலையை அவன் நிர்ணயிக்கட்டும்.

கர்மத்தை நாம் செய்வோம், அதன் பலனை அவன் கையில் விட்டு விடுவோம்.''

— ஆழ்வாருக்கு மேல் மூச்சு வாங்கியது; சிந்தனை குழம்புவது போல் தோன்றிற்று.

மெது மெதுவாக இளைத்திருந்த அவரது மேனி, நல்ல காற்றோட்டமான அந்த இடத்திலும் வியர்த்தது.

''எனக்கு மயக்கம் வருவதுபோல் தோன்றுகிறது'' என்றார் அவர்.

அவையில் பரபரப்பு எழுந்தது.

அரங்கில் ஏறிச் சீடர்கள் பலர் அவர் உடம்பைத் துடைத்தனர்.

கைத்தாங்கலாக அவரை எழுப்பினர்.

பல்லக்கு பக்கத்திலேயே கொண்டு வரப்பட்டது.

''ராமா! கிருஷ்ணா!'' என்ற குரல், அவை முழுவதும் எழுந்தது.

ஆழ்வார் பல்லக்கில் உட்கார வைக்கப்பட்ட போது, அவை கண்ணீர் சொரிந்தது.

அந்தப் பல்லக்கு அவர் தங்கும் இடத்துக்கு வந்து சேர்ந்தபோது கூட்டத்தில் பெரும் பகுதியும் முண்டியடித்துக் கொண்டு அங்கே வந்திருந்தது.

சிறிது மயங்கிய நிலையில் ஆழ்வார் படுக்க வைக்கப்பட்ட போது கூட்டத்தில் ஊடுருவிக் கொண்டு அங்கதன் உள்ளே நுழைந்தான்.

அவன் மார்த்தாண்ட வர்மனின் மரணச் செய்தியைக் கொண்டு வந்திருந்தானா?

ஆழ்வாரின் மரணச் செய்தியைக் கொண்டு போக வந்திருந்தானா?

ஆழ்வாரின் கையைப் பிடித்துப் பார்த்தார், அவசரமாக வந்த மருத்துவர்.

''இப்போதைக்குப் பயமில்லை'' என்று மட்டுமே அவர் சொன்னார்.

அத்தியாயம் 14


கண்ணகியின் ஆத்மா

கல்யாணி மூர்ச்சித்து விழுந்த கோலம், மெல்லிளங் கோதையையும் கலங்க வைத்து விட்டது.

ஆரோக்கியமான உங்கள் கேசத்தின் சுகம்...அதுவே அவளது விருப்பம்!

உங்கள் தலையிலுள்ள கேசம் வளமாக இருப்பதுடன் அழகுறவும் ஆரோக்கியமானதாகவும் இருக்க வேண்டும். அடிப்பூட்டுவதாகவும் வசீகரமானதாகவும் இருக்க வேண்டும். தலையை வாரும்போது உங்கள் விருப்பத்திற்கேற்றவாறு படியவேண்டும்.

அதற்குத் தேவை புரதம் செறிந்த பிரில்க்ரீம். அது கேசத்திற்கு ஆரோக்கிய மூட்டுவதோடு, அதை நன்கு படியவும் வைக்கிறது.



பிரில்க்ரீம் 'பிசுபிசு'வென்று ஒட்டுவதில்லை. எண்ணைப் பிசுக்கற்றது. அது கேசத்தை அழகுறப் படிய வைக்கிறது. விளைவு, அவளது விரல்கள் உங்கள் அழகான கேசத்தை அன்போடு வருடத்துடிக்கின்றன.

கேசத்தின் வேர்களுக்கு வலிவூட்டுவதற்கும் ஊட்டமளிக்கவும் பிரில்க்ரீமில் புரதம் சேர்க்கப் பட்டுள்ளது. கேசம் ஆரோக்கியத்துடன் இருந்தாலே அதை அழகுற வாரிப் படிய வைக்க முடியும்.

மிடுக்காகத் தோற்றமளியுங்கள்.

புரதம் செறிந்த பிரில்க்ரீம் உபயோகியுங்கள்.



புரதம் செறிந்த

பிரில்க்ரீம்


அழகான முடிக்கு ஆரோக்கியமான வழி.

BRL-9811

புதிய

உடனடி-உபயோக

டிக்-20



மண்ணெண்ணை
கலப்பதற்கான
மேற்படி செலவு
கிடையாது!



கலக்க வேண்டிய தொல்லை கிடையாது. திறந்து நேராக உபயோகிக்க வேண்டியதுதான். உடனடியாக மூட்டைப் பூச்சிகளை ஒழிக்கிறது. பிளவுகள், பொந்துகள், மெத்தைத் தையற்குழிகள், ஃபர்னிச்சர் ஜாயிண்ட்டுகள், சுவர்களிலுள்ள சட்டங்களின் அடி பாகங்கள் போன்ற பல இடங்களிலும் புதிய டிக்-20 உபயோகியுங்கள்.

புதிய டிக்-20 இப்போது அதிக பாதுகாப்பானது. வீட்டில் வைக்கலாம். காரணம் அது மீண்டும் புதுப்பிக்கப் பட்ட ஃபார்முலா கொண்டதாகும். முன் கூட்டியே மண்ணெண்ணை கலக்கப்பட்டு உடனடியாக உபயோகிக்க வசதியாக தயாரிக்கப்பட்டுள்ளது. சர்க்காரின் புதிய நிர்ணயங்கள்படி உள்ளது. உபயோகிப்போரின் பாதுகாப்பை உறுதி செய்கிறது.

இன்றே டிக்-20 வாங்குங்கள் இன்றிரவே நன்றாக உறங்குங்கள்.

ஒரு ராலிஸ் இந்தியா தயாரிப்பு

RADEUS/R/T-I

மார்த்தாண்ட வர்மன் வேஷத்தில் கொல்லப்பட்டவன் கிருஷ்ணன் நம்பூதிரி! கல்யாணி அழாமல் யார் அழக் கூடும்?

ஆனால், அவளைவிட அதிகமாகக் குமுறி அழுதவன் மார்த்தாண்டவர்மன்.

தந்தை இரண்டாம் சேரமான் பெருமாளின் ஆட்சி எத்தனை விசுவாசமிக்க குடிமக்களை உருவாக்கி இருக்கிறதென்பதை அன்றுதான் அவன் கண்டான்.

துரோகிகளையே பார்த்துச் சலித்த அவன் கண்களுக்கு, அந்தத் தியாகியின் வடிவம் தெய்வ தீபம் போல் தோன்றிற்று.

'நாம் அவனுக்கு என்ன செய்தோம்? நமக்காக அவன் உயிரை விடவும் சித்தமானானே' என்று எண்ணியபோது ராமனுக்கு வாய்த்த குகனின் உருவமே அவன் கண்முன் நின்றது.

சடலத்தை வீரர்கள் தூக்கிக் கொண்டு போனதும், ''ஓம் நமோ நாராயணா'' என்ற ஓரே குரலோடு அமைதியுற்றிருந்தார் ஸ்ரீவல்லபர்.

மெல்லிளங்கோதை கண்ணீர் உகுத்த படியே அவர்களைக் கட்டியிருந்த கயிறுகளை அவிழ்த்து விட்டாள்.

மூர்ச்சித்து விழுந்த கல்யாணியின் தலையை மடியில் தூக்கி வைத்துக் கொண்டாள்.

சீடர்கள் ஒரு பாத்திரத்தில் தண்ணீர் கொண்டு வந்தார்கள். மெல்லிளங்கோதை அவள் முகத்தில் அதைத் தெளித்தாள்.

மெதுவாகக் கண்விழித்த கல்யாணி, ''சுவாமி! சுவாமி!'' என்று புலம்பினாள்.

அந்தக் கிருஷ்ணன் கோவிலின் கிருஷ்ணவிக்கிரகம் அசைவற்று நின்றது.

ஆம்; கிருஷ்ணன் நம்பூதிரியின் சடலம் எப்படித் தெய்விக வடிவெடுத்ததோ, அப்படியே அந்த விக்கிரகமும் நின்று கொண்டிருந்தது.

கல்யாணிக்கு யார் ஆறுதல் கூற முடியும்?

மார்த்தாண்ட வர்மன் மயங்கிய நிலையில் நின்றான்.

மெல்லிளங்கோதை விம்மி விம்மி அழுது கொண்டிருந்தாள்.

ஞானசிரியர் ஸ்ரீவல்லபரோ நாயக னின் லீலையில் இதுவொரு கட்டம் என்று எண்ணிக் கொண்டிருந்தார்.

சிலை வடிவாக நின்ற பரந்தாமனோ யுத்தம் மூண்டாலொழியத் தன் சக்தி யைக் காட்ட மாட்டான்.

அந்தச் சோகப் படலத்தில் சில விநாடிகள் கழிந்தன. அதிலிருந்து முத லில் மீண்டவர் ஸ்ரீவல்லபர்.

''கல்யாணி! கவலைகளை வளர்ப்பதன் மூலமே, இறைவன் நண்பர்களைத் தேர்ந்தெடுக்கிறான். கண்ணீர் வற்றிய பின்பே, அவன் கருணையெனும் தண் ணீர் கண்ணுக்குத் தெரிகிறது. சோதனை யைத் தாங்கிக் கொள்ளும்படி போதிக்க எனக்குச் சக்தி யிருக்கிறது. ஆனால், நானே நீயாக இருந்தால், நானும்தான் இப்படிக் கதறி அழுதிருப்பேன்.

''இதயம் அவரவருக்கென்று தனித் தனியாகப் படைக்கப்பட்டு விட்டது. வேதனைகளைப் பரிமாறிக் கொள்ள முடி யுமே தவிர, இன்னொருவருக்காகத் தாங்கிக் கொள்ள முடியாது.

''கிருஷ்ணன் நம்பூதிரி ஒரு தியாகத் திருவிளக்கு. ஆழாக்கு அரிசியை ஓர் ஆண்டிக்குப் போட்டு விட்டு, அதன் பலனை ஆயுள்காலம் வரைக்கும் எதிர் பார்க்கும் உலகத்தில், ஆயுளையே அர்ப் பணித்து விட்டுப் பலனை எதிர்பாராமல் போய் விட்டான் கிருஷ்ணன் நம்பூதிரி. ஆய்ந்தோய்ந்து பாராமல் வணிக மக னைக் கொன்ற பாண்டிய மன்னனைப் போல், கிருஷ்ணன் நம்பூதிரியின் உயி ரையும் பறித்துக் கொண்டு விட்டன ரவிவர்மனின் படைகள்.

''இந்தத் துயரத்துக்கிடையேயும் ஒரு நிம்மதி, சேர நாட்டின் முறையான வாரிசை உன் கணவன் காப்பாற்றியதே.

''உன் நாயகன் உயிரை யாரும் ஈடு செய்ய முடியாதென்றாலும், இந்தச் சேர நாட்டின் உயிரைக் காப்பாற்றிய வனின் மனைவி என்ற பெருமை உனக்கு உண்டு.

''நீயும் எங்களுடன் வா. ரவிவர்ம னின் கொடுமைக்கு ஓர் இலக்கணமாய் எங்களைத் தொடர்ந்து வா. எல்லோரும் ஸ்ரீ குலசேகர ஆழ்வார் இருக்கும் இடத் துக்குச் செல்லுவோம். அவரைத் தரிசிப் பதன் மூலம் உனக்கோர் ஆத்மசாந்தி கிட்டும்.''

— என்றார் ஸ்ரீவல்லபர்.

''மாமா திருக்கண்ணபுரத்தில் இருப் பதாக என் கனவில் வந்த சிவப்பு மூக்குத்திக்காரி சொன்னாள்'' என்று, விம்மியபடியே கூறினாள் மெல்லிளங் கோதை.

''நல்லது. இனி நாம் அவரை அண் டிப் பரிகாரம் தேடுவதைத் தவிர, வேறு வழி எனக்குத் தோன்றவில்லை'' என்றார் ஸ்ரீவல்லபர்.

தலைவிரிகோலமாகத் திடீரென்று எழுந்து நின்றாள் கல்யாணி.

''இல்லை. 'காய் கதிர்ச் செல்வனே, என் கணவன் கள்வனோ' என்று கேட்டு மதுரையை எரித்தாள் கண்ணகி. நாயகன் கொலைக்குப் பழிக்குப் பழி வாங்கினாள் கண்ணகி. நானும் வஞ்சிமா புரத்துக்குச் செல்வேன். எங்கள் குல அவையைக் கூட்டுவேன். முடியுமானால் வஞ்சியின் அரண்மனையையே எரிப் பேன். எங்கே என் நாயகன் சடலம் போயிருக்கிறதோ அங்கேயே நானும் மடிவேன். பரசுராமன் மீது ஆணை'' என்று உரத்த குரலில் சூளுரைத்தாள் கல்யாணி.

''கல்யாணி, அவசரப் படாதே. இந்த நேரத்தில், இந்தச் சூழ்நிலையில் நீ வஞ்சிக்குச் செல்வது சரியல்ல. கொல் லப்பட்டது மார்த்தாண்ட வர்மனல்ல என்பது இந்நேரம் ரவிவர்மனுக்குத் தெரிந்திருக்கும். அதையே அவனொரு அவமானமாகக் கருதியிருப்பான். பொறி யிலே நீயும் சிக்கிக் கொண்டால் உன் கற்புக்குக் கூடக் களங்கம் நேரக்கூடும். இந்த அளவுக்குத் துணிந்த ரவிவர் மன், இனி அந்த அளவுக்கும் செல்ல மாட்டான் என்பது என்ன நிச்சயம்?'' என்று அமைதிப்படுத்தினார் ஸ்ரீவல்லபர்.

''என் கற்புக்குச் சக்தியுண்டாயின் அந்தக் கனல் ரவிவர்மனை மட்டுமல்ல, அவனுக்குத் துணை புரிந்த அனைவரது குடும்பத்தையும் வேர் அறுக்கும், வில் லால் முடியாத வீரத்தை ஒரு சொல் லால் நடத்தினாள் கண்ணகி. சிவந்த கண்களில் தீ பறக்கும். விரித்த கூந்த லில் காற்றடிக்கும். அந்தத் தீயை அந் தக் காற்று வளர்க்கும். அசோக வனத் துச் சீதை அமைதியுற்றிருந்தாள்; தன் நாயகனின் கோதண்டம் தன்னைக் காக்குமென்று. என் இதயத்து நெருப்பு என்னையும் காக்கும்!'' என்று ஓங்கி உரைத்தாள் கல்யாணி.

பேசப் பேச அவள் முகம் சிவந்தது. அவள் உருவமே மாறுவதுபோல் மெல் லிளங்கோதைக்குத் தோன்றிற்று.

'இது யார் கல்யாணிதானா? அகஸ் தீஸ்வரம் காட்டுக் குடிசையில் தோன் றிய சிவப்பு மூக்குத்திக் காரியைப்போல் இப்போது காட்சியளிக்கிறாளே!'

மெல்லிளங்கோதை திகைத்தாள்; ஸ்ரீவல்லபர் வாயடைத்துப் போனார்.

(தொடரும்)

ஆக்பா ஐஸோலி-II



**உள்ளது உள்ளபடி
உங்களை உயிரோவியமாகப்
பதிவாக்கும் காமெரா**



ஆக்பா-ஐஸோலி-II, நீங்கள் காத்திருந்து கையடையும் காமெரா. 120 சைஸ் சுருள் பிலிமிலே பளிச்சென்ற 16 படங்களை எடுத்திட நுட்ப நவீனச் சிறப்புக்கள் பலவற்றை உடையது. பாருங்கள் இதோ அச் சிறப்புக்களில் சில:

- அழகிய வடிவம்.
- சக்தி மிகுந்த ஆக்பா கலர்-ஆக்னர் f 5.6 லென்ஸ்.
- மூன்று ஷட்டர் வேக கதிகள்: B,1/30 & 1/100.
- 5 அபெர்ச்சர் துளையமைப்புகள்: 5.6,8,11,16 மற்றும் 22.
- யூனிவர்ஸல் ஃப்ளாஷ் காண்டேக்ட் பின்.

ஆக்பா-ஐஸோலி-II பற்றி மேலும் விவரமறிய, அருகிலுள்ள ஆக்பா-கேவார்ட் விற்பனையாளரிடம் விசாரிக்கவும். மகிழ்ச்சியோடு அவர் இலவசமாக இயக்கிக் காட்டுவார்.

ஆக்பா-படமெடுப்பீர் ஆசைதீர!



செய்யப்பட்ட
சில்லறை விலை
ரூ. 225/-

SIMOES/AG/12/75A TM

AGI

விநியோகஸ்தர்கள் :
ஆக்பா-கேவார்ட் இந்தியா லிமிடெட்

நியூ இந்தியா இண்டஸ்ட்ரீஸ் லிட்,

பொன்னியின் புதல்வர்



சுந்தா

39. கடைசி நாட்கள்

மீற முடியாதது ஒன்றுண்டு அதனை
மாற்றவும் முடியாது ஒரு சிறிதும்

இந்த வரலாற்றின் நாயகர் வாழ்ந்த கடைசி ஆண்டான 1954ல், ''பொன்னியின் செல்வன்'' தொடர் நாவலின் கடைசி அத்தியாயம் மே 16ம் தேதியக் கல்கி இதழில் வெளியாயிற்று. அந்தக் கடைசி அத்தியாயத்தின் கடைசியில், ''அருள்மொழி வர்மனின் அருமை நண்பனே!'' என்று, கதாநாயகன் வந்தியத் தேவனை ஆசிரியர் விளித்து, ''நீடுழி நீ வாழ்க!'' என்று வாழ்த்தினார். அந்த வாழ்த்தினை அடுத்த வாக்கியத்தில், ''வீரத் தமிழரின் மரபில் உன் திருநாமம் என்றும் நிலைத்து விளங்குவதாக'' என்று விரிவுபடுத்தி அவனுக்கு விடை கொடுத்தார்.

இதே சொற்களில் இல்லா விட்டாலும் இதே விதத்தில் இந்த வரலாற்றின் நாயகர் பொன்னியின் புதல்வருக்கு நாம் விடை கொடுக்க வேண்டிய இறுதிக் கட்டம் இப்போது வந்திருக்கிறது.

அந்த ஆண்டின் கடைசி மாதம் ஐந்தாம் தேதி அதிகாலையில், கல்கியின் மானிட வாழ்வு ஐம்பத்தைந்தாவது வயதில் முடிவுற்றது. அந்த முடிவே அவருடைய அமர வாழ்வின் ஆரம்பமாய் இருந்ததாலும், அது நிகழ்ந்து இத்தனை ஆண்டுகள் கடந்து விட்டதாலும், அதைப் பற்றிச் சோகம் பொங்க எழுதி வாசகர்களைத் துயரத்தில் ஆழ்த்த வேண்டியதில்லை. அந்த முடிவில்லாத முடிவு நேர்ந்தது வரை நிகழ்ந்தவற்றில், இந்த வரலாற்றின் நிறைவுக்கு வேண்டியவைகளை மட்டும் ஒரு செய்திக் கோவையாகச் சொன்னாலே போதும்.

அந்த வருடத் தொடக்கத்திலிருந்தே நலிவுற்ற உடல்நிலை காரணமாய், அலுவலகக் காரியங்களைப் பெரும்பாலும் தமது காந்தி நகர் வீட்டிலிருந்தே கல்கி கவனிக்கலானார். செய்ய வேண்டியவற்றையும் திருத்தங்கள் முதலானவற்றையும் டெலிபோன் மூலமும் தெரிவித்துக் கொண்டிருந்தார். அவசியமானபோது மட்டும் சில பிற்பகல் வேளைகளில் அலுவலகம் சென்று வந்தார்.

ஜூலை மாத மத்தி வாக்கில், ''அமர தாரா'' தொடர் கதைக்கு வேண்டிய யோசனைகளிலும் ஆயத்தங்களிலும் கல்கி ஈடுபட்டார்.

செப்டம்பர் ஐந்தாம் தேதிய இதழில் தொடங்கிற்று அந்தக் கதை — நெஞ்சைப் பிழியும் சோகக் கதை; தாயையும் தந்தையையும் இழந்து, அநாதையாகும் இந்துமதியின் கதை; வெள்ளித் திரையில் அவள் அமர தாராவாய் ஒளி வீசிக் கொண்டிருக்கையில் அபாண்டமாய்க் கொலைக் குற்றத்துக்கு உள்ளாகும் கதை; மரண தண்டனை அடைந்து சிறையில் தவிக்கும் கதை.

இந்துமதியே சொல்வதாய் அமைந்த இந்தக் கதையில் அவளுடைய வளர்ப்புத் தந்தையான மந்திரமூர்த்தி அன்பே உருவான பண்பாட்டுச் செல்வர்; கடவுளிடம் உண்மையான பக்தி கொண்டவர்.

அவருடைய பக்தி எத்தகையது என்பது பற்றி மூன்றும் அத்தியாயத்தில் சில வரிகள் உள்ளன:

இறைவன் வகுத்தபடியே இவ்வுலகிலே எல்லாக் காரியங்களும் நடக்கின்றன என்றும்,



அவனன்றி ஓரணுவும் அசையாது என்றும் அவர் உறுதியாக நம்பினர். ஆதலின், கடவுளைப் பிரார்த்திப்பதிலே கூட, ''எனக்கு இம்மாதிரி கருணை செய்; இந்தப் பாக்கியத்தைக் கொடு!'' என்று கேட்பது அறியாமை என்று சொல்வார். நமக்கு எந்த விதத்தில் அருள் புரிய வேண்டும் என்பது, எல்லாம் அறிந்த அண்டவனுக்குத் தெரியாதா? நாம் சொல்லித்தான் அவருக்குத் தெரிய வேண்டுமா? கஷ்டமோ சுகமோ, துன்பமோ, இன்பமோ எது வந்தாலும் கடவுளுடைய சித்தம் என்று நம்பி அனுபவிக்க வேண்டும். இந்த நம்பிக்கை ஒருவருக்கு இருக்குமானல், அதிர்ஷ்டம் வரும்போது அடக்கத்துடன் அநுபவிக்கலாம்; துர்ப்பாக்கியம் நேரும்போது அதைப் பொறுமையுடன் சகித்துக் கொள்ளும் சக்தி உண்டாகும். கடவுளைப் பிரார்த்திப்பது ஏதோ ஒரு லாபத்தை நாடி அல்ல ஆலயத்துக்குப் போவது ஆண்டவனிடம் வரம் வேண்டுவதற்காக அல்ல. ''ஈசனே! உன் சித்தம் எதுவோ அதுவே என் பாக்கியம்!'' என்பதுதான் உண்மையான பிரார்த்தனை.

இதே வகையான கடவுள் பக்தியைத்தான் கல்கி கொண்டிருந்தார். தாம் கொண்டிருந்ததைத்தான் மந்திர மூர்த்தி கொண்டிருந்ததாக இந்துமதியின் சொற்களில் புலப்படுத்தினர். அவருடைய பக்தி மூட நம்பிக்கை கலவாத பக்தி; ''எல்லாம் உன் அடிமையே, எல்லாம் உன் உடைமையே, எல்லாம் உன்னுடைய செயலே'' என்ற ஞானத் தெளிவுடன் கொண்ட அடைக்கல பக்தி.

கல்கியின் இத்தகைய உத்தம பக்தி அவருடைய இறுதி நாட்களில் முன்னிலும் அதிகமாய்த் துலக்கமாயிற்று.

''அமரதாரா'' தொடர்ந்து கொண்டிருக்கையில் கல்கியின் உடல் நிலை மேலும் குலைந்து போயிற்று; நெடுநாளைய ஆஸ்துமாவுடன் ''ப்ளூரஸி''யும் வேறு கோளாறுகளும் தோன்றி வருத்தலாயின. டாக்டர்களின் யோசனைப்படி, சிகிச்சைக்காகவும் வெவ்வேறு வைத்திய சோதனைகளுக்காகவும் அக்டோபர் முதல் வாரத்தில் பொது மருத்துவ மனையில் அவர் சேர்ந்து கொண்டார். அங்கே ஒரு தனி அறையில் (ஸ்பெஷல் வார்டில்) இருந்தபடியே அவசியமான வேலைகளையும் செய்து வந்தார். முன் குறிப்பிட்ட அசாதாரண ''மயில் விழி மான்'' கதையை அங்கிருந்துதான் தீபாவளி மலருக்காக எழுதினர்.

சதாசிவம் நாள்தோறும் வந்து அவரைக் கவனித்துக் கொண்டார். தொடர்ந்து இறுதிவரை நண்பருக்கு வேண்டிய உதவிகளையெல்லாம் பரிவுடனும் பணியாற்றலுடனும் செய்தார்.

- தாம் எந்த வகையான கடவுள் பக்தியைக் கொண்டிருந்தாரோ அதனை அமரதாராவில் இந்துமதியின் தந்தை மந்திரமூர்த்திக்கு ஏற்றிச் சொன்னர் கல்கி.
- மருத்துவமனையில் வாரியார் வந்து பார்த்தபோது தம் நெற்றியில் திருநீறு பூசுமாறு கோரினர் கல்கி.
- நண்பர் 'கல்கி'க்கு வேண்டிய உதவிகளையெல்லாம் பரிவுடனும் பணியாற்றலுடனும் செய்தார் சதாசிவம்.
- ''பகவான் நம்மைச் சோதிக்கலாம்; ஆனல் நாம் பகவானைச் சோதிக்கக் கூடாது'' என்று கல்கி கூறியதைக் கேட்டு நெகிழ்ந்த ரங்கநாத சாஸ்திரிகள்.
- கல்கியின் இறுதி ஆசையைப் பூர்த்தி செய்ய இரவோடு இரவாகப் பாலாறு நோக்கிப் பயணப்பட்ட திரு வரதப்பன்.
- பத்திரிகாசிரியர் 'கல்கி' வாசகர்களுக்கு அளித்த இறுதிக் காணிக்கை இதழின் மேலட்டை.
- '' அம்மாவைப் பார்க்க ஆசையா இருக்கு. அம்மா ஏன் இன்னும் வந்து சேரலே ?'' என்று கேட்டார் கல்கி.













அவசியம்தானா?

ஸ்டேட்ஸ்மன் - பாபு

மாண்ட்ரியால் ஒலிம்பிக் பந்தயங்களில் கலந்து கொள்ள நமது நாட்டிலிருந்து 37 விளையாட்டு வீரர்கள் போகிறார்கள். இவர்களைக் கவனித்துக் கொள்ள 11 அதிகாரிகள் போகிறார்களாம்!



ராஜேந்திரனும் மருமான் கோபாலனும் இரவுகளில் முறை வைத்துக் கொண்டு அந்த அறையில் தங்கிக் கல்கிக்குப் பணிவிடை செய்தார்கள். அவர்கள் வெகு நேரம் விழித்திருந்து அவருக்குக் கால் பிடித்து விட வேண்டியதாய் இருந்தது. ''என்னால் உங்களுக்கெல்லாம் எவ்வளவு கஷ்டம்'' என்று சொல்லிக் கொண்டே இருப்பாராம்.

மாலை வேளைகளில், அனுமதியுடனும் தடையை மீறியும் எத்தனையோ பேர் அவரைப் பார்க்க வந்தார்கள். சிலரிடம் தமது உடல் நிலை பற்றி வேடிக்கையாகவே கல்கி பேசுவாராம். உதாரணமாய், அப்போது இளம் கார்ட்டூனிஸ்டாய் இருந்த உமாபதியிடம், ''நான் சரியாகக் கவனிப்பதில்லை என்று என் உடம்புக்குக் கோபம், அதனால்தான் அது படுத்துகிறது'' என்று சொன்னாராம்.

அப்போது வடநாட்டுக்கு யாத்திரை செல்லவிருந்த கிருபானந்த வாரியார், கல்கியைக் காண வந்தபோது, தம் நெற்றியில் திருநீறு பூசும்படி அவரைக் கேட்டுக் கொண்டாராம். ''நீங்கள் திரும்பி வந்ததும் பெரிய சொற்பொழிவு விழா ஒன்றுக்கு ஏற்பாடு செய்யப் போகிறேன்'' என்று உற்சாகமாய்ச் சொன்னாராம்.

தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் துணைத் தலைவர் நாரண துரைக்கண்ணன் அடுத்துச் கல்கியைப் பார்க்க வந்தபோது, ''வாரியார் யாத்திரை முடிந்து வந்ததும் அவருக்கு மாபெரும் வரவேற்பு அளிக்க வேண்டும்'' என்று அவரிடம் கூறினாராம்.

சுமார் இரண்டு வாரங்களுக்குப் பிறகு, முழு ஆரோக்கியத்துடன் இல்லாவிட்டாலும், முழு மனத் தெம்புடன் வீடு திரும்பினார் கல்கி. பிரபல டாக்டர்களான அருணாசலமும் கே. எஸ். சஞ்சீவியும் அவரை நன்கு குணப்படுத்துவதில் முனைந்து அக்கறையுடன் சிகிச்சை செய்தார்கள்.

தீபாவளி சமயத்தில் ஓரளவு குணம் அடைந்த கல்கி குடும்பத்தாருடன் உற்சாகமாய்ப் பண்டிகை கொண்டாடினார். பேத்தி கௌரிக் கண்மணி புத்தாடையில் புது அழகுடன் விளங்கியதை ''பேஷ் பேஷ்'' என்று பாராட்டி ரசித்தார்; பொறி பறக்கும் மத்தாப்பும் கையுமாக அவள் குதித்துக் கூத்தாடியதை, ''ஜாக்கிரதை! ஜாக்கிரதை!'' என்று எச்சரிக்கை செய்து கொண்டே கண்டு மகிழ்ந்தார்.


உடம்பில் எவ்வளவு வேதனை இருந்தாலும் அதைக் கல்கி பொருட்படுத்தாமல் பேத்தியுடன் கொஞ்சிப் பேசி விளையாடினார் — முன்னிலும் அதிகமாகவே. ''தாத்தா'' என்று கூப்பிட்டுக்கொண்டே அவள் படியேறித் தம் அறைக்கு வருவதற்காக அவர் ஆவலுடன் காத்திருப்பார். தினம் நாலைந்து தரமாவது அவளுடைய வருகையை எதிர்பார்த்தார். அப்படி வரவில்லை என்றால், ''அவளைத் தடுத்து வைத்திருக்கிறீர்களா என்ன?'' என்று மற்றவர்களிடம் கேட்டுக் கோபித்துக் கொள்வார்.

தீபாவளி மலரை அக்டோபர் 24ம் தேதியன்று வெளியிட்ட கையோடு, மற்றொரு சிறப்பு மலருக்கான ஆயத்தங்களில் கல்கி ஈடுபட்டார். — ராமகிருஷ்ண பரமஹம்ஸரின் பத்தினி, சாரதாமணி தேவியின் நூற்றாண்டு விழா மலர். அதற்கென, முன்பே அவர் எழுதிக் கேட்டிருந்ததின் பேரில், ஃபிஜி தீவிலிருந்து, ராமகிருஷ்ண மடத்தின் தலைவர் சுவாமி ருத்ரானந்தா—பால பருவத்தில் அவருடைய அருமை நண்பராயும், இளமைப் பருவத்தில் ஆத்மீகத் தோழராயும் இருந்து, பின்னர் காவிக் கோலம் பூண்டு, தெய்வப் பணியில் ஈடுபட்டவர்—''அன்னை சாரதா மணி'' என்ற தலைப்புடன் சிறப்புக் கட்டுரை ஒன்றை வரைந்து அனுப்பியிருந்தார்.

அந்த மலருக்கு ஓவியர் சந்திராவைக் கொண்டு தம் வக்கணைப்படி அட்டைச் சித்திரம் வரையச் செய்தார் கல்கி. அந்த வண்ணச் சித்திரத்தில் நட்சத்திரங்கள் மின்னும் ஆகாயப் பந்தலில் பரமஹம்ஸ தம்பதியர் தரிசனம் தருகிறார்கள். அதற்கு விளக்கமாய் எழுதிய கட்டுரையில், பாரத நாட்டில் தோன்றிய மகா பக்தர்களின் பெருமையையும், தம் அகத்தே பொங்கிய பக்திப் பெருக்கையும் கல்கி வெளியிட்டார். அந்த மலரைச் ''சாரதா தேவிக்குப் பாத காணிக்கை'' என்று வர்ணித்தார்.

சாரதா மணிக்கு மட்டும் அல்லாமல் இந்நாட்டுப் பக்த மணிகள், ஞான மணிகள் எல்லாருக்குமே அது காணிக்கை; அவர்கள் தேடிக் கண்ட

புதிய ரெக்ஸோனா உங்கள் மேனியை மென்மையோடு மெருகு மிளிர வைத்திருக்கும் சோப்



ஆரோக்கியம் திகழும் மேனியை அடைய, சரும கவினைப்பெற நவீனகால மங்கையர் நாடுவது புதிய ரெக்ஸோனா. உங்கள் மேனியை மழமழ மென்மையோடு, அங்கமெங்கும் தங்க மெருகு மிளிர வைத்திருக்கும் சோப். குளித்திடுங்கள் ரெக்ஸோனா சோப்பினால்—உங்கள் சருமத்திற்கு இதுவே நல்லது.



புதிய ரெக்ஸோனா உங்கள் சருமத்திற்கு நல்லது

அறிமுகம் இதோ
ஹை பவர் ஸர்ஃப்



நீங்கள் பார்த்தறியாத வெள்ளைவெளேர் சலவைக்கு !

புதிய ஹை பவர் ஸர்ஃப் சலவைச் சக்தியே சக்தி: வேறெந்த சலவைப் பவுடரையும் விட
அதிக சக்தி படைத்துள்ளது. அதனால்தான், சக்தி ஓங்கிய அதன் நுரை நீடித்துநின்று,
ஆழ ஊடுருவித் துலக்குகிறது...உன்னதமான வெள்ளைவெளேர்
உடைகள் உங்கள் குடும்பத்திற்கு.

ஒப்பற்ற வெள்ளைவெளேர் சலவைக்கே புதிய ஹை பவர் ஸர்ஃப்...இது வெட்டவெளிச்சம் !

இந்துஸ்தான் லீவரின் தரமான தயாரிப்பு. அட்டைப்பெட்டிகளிலும், சீலிட்ட பைகளிலும் மட்டுமே வருகின்றன. உதிரியாக விற்பதில்லை.

லின்டாஸ்–SU. 191-140 TM

மறைமா மணிக்கும் பாடிப் போற்றிய பரமானந்த மணிக்கும் காணிக்கை.

அதுவே கல்கியின் ஆஸ்திகப் பற்றுக்கு ஓர் அடையாளக் காணிக்கையாகவும் ஆயிற்று; பத்திரிகாசிரியராய் அவர் வாசகர்களுக்கு அளித்த இறுதிக் காணிக்கையாயும் ஆயிற்று. அத்துடன் அந்த மலரின் வெளியீட்டுத் தேதியே கல்கி அமர மணியான தேதியாயும் ஆயிற்று.

இதே மலரை இப்போது பார்க்கையில் இந்தப் பொருத்தத்தை எண்ணி மெய் சிலிர்க்கிறது. ஆனால் அப்போதோ பல்லாயிரக் கணக்கான வாசகர்களைத் துயர அதிர்ச்சிக்கு இது உள்ளாக்கிற்று. வழக்கம்போல் வெளியீட்டுத் தேதிக்கு இரண்டு நாள் முன்னதாக விநியோகமாகி விட்ட இந்த மலரில் ''அமரதாரா'' இருபத்தாறும் அத்தியாயத்தின் அடியில் கல்கியின் உடல் நிலை பற்றி நம்பிக்கை ஊட்டும் குறிப்பு ஒன்று வெளியாகி யிருந்தது. நவம்பர் மாத இறுதியில் அவர் அடைந்த அபாய நிலையை ''இறைவன் அருளாலும் வைத்தியர்களின் உதவியாலும் கடந்து துரிதமாக முன்னேற்றம் அடைந்து வருகிறார்'' என்று அது அறிவித்திருந்தது. அது தோற்றுவித்த நம்பிக்கை இரண்டே நாட்களில் ஏமாற்ற அதிர்ச்சியாய் மாறிப் போயிற்று.

கல்கியின் உடல்நிலை பற்றிய அந்தக் குறிப்பின் வாசகம் கல்கியின் வாசகமே! எத்தனையோ விந்தையான அனுபவங்களில் கடைசியாய் ஒன்றாகத் தம் உடல் நிலை பற்றித் தாமே அதில் படர்க்கையில் குறிப்பிட்டுக் கொண்டார். அந்தக் குறிப்பையும், அந்த மலரில் வந்த ''அமரதாரா'' அத்தியாயத்தையும், தம் கையால் அவரால் எழுத முடியவில்லை. இரண்டையும் படுத்திருந்தவாறே அவர் சொல்ல, தாம் எழுதி அச்சுக்கு அனுப்பியதாக ராஜேந்திரன் தெரிவிக்கிறார்.

முப்பது வருடங்களாய் எழுதிக் குவித்த கை, பல மணி நேரம் ஒரே அமர்வாய்ச் சளைக்காமல் எழுதக்கூடிய கை ஒரேயடியாய் ஓய்ந்து போயிற்று. அந்த ஓய்வு நவம்பர் கடைசி வாரத்தில் ஒரு நாள் திடீரென உண்டான இதயத் தாக்குதலை அடுத்து நேர்ந்தது.

''நெஞ்சை வலிக்கிறதுடா'' என்று மார்பை அழுத்திக் கொண்டு வேதனையுடன் கல்கி கூவியதைக் கேட்டு, ராஜேந்திரன் பதறிப்போய், வழக்கமாகக் கவனிக்கும் டாக்டர்களுக்கு ஃபோன் செய்தான். அவர்கள் உடனே அகப்படாததால், தந்தையின் யோசனைப்படி, சாந்தோமிலிருந்த டாக்டர் கிருஷ்ணசுவாமியைக் கூப்பிட்டான். அந்த டாக்டர் விரைந்து வந்து அளித்த சிகிச்சையால் தற்காலிகமாய் வலி தணிந்தது. பின்னர் டாக்டர் அருணாசலமும், டாக்டர் சஞ்சீவியும் வந்து, தொடர்ந்து செய்ய வேண்டியவற்றைக் கவனித்தார்கள். அவர்களாகவே டாக்டர் குருசுவாமியையும் டாக்டர் பி. ராமமூர்த்தியையும் ஆலோசனைக்கும் துணைக்கும் கூப்பிட்டுக் கொண்டார்கள்.

அந்த நாலு டாக்டர்களின் கூட்டுப் பொறுப்பில் தீவிர சிகிச்சை நடந்தது. அவ்வப்போது செய்ய வேண்டிய பணிவிடைகளுக்கென இரண்டு நர்ஸ்களைச் சதாசிவம் நியமித்தார். ஏதேனும் நெருக்கடி நேர்ந்தால் சிறிதும் தாமதமின்றிக் கவனிப்பதற்கென்று டாக்டர் கோபாலகிருஷ்ணன் என்ற அனுபவசாலியைக் கல்கி வீட்டிலேயே தங்கி இருக்கச் செய்தார்.

கல்கியின் உடல்நிலை பற்றிய செய்தி பரவியதிலிருந்து அவருடைய எண்ணிலா நண்பர்களும் அன்பர்களும் — ஆட்சியாளர்கள், அரசியல் தலைவர்கள், சக பத்திரிகாசிரியர்கள், எழுத்தாளர்கள், வியப்பாளர்கள் முதலானோர் — காலை முதல் இரவு வெகு நேரம் வரை அவரைப் பார்ப்பதற்காக வந்த வண்ணம் இருந்தார்கள். அவர்களில் யார் யாரை அவர் படுத்திருந்த மாடி அறைக்கு அனுப்புவது என்பது குடும்பத்தாருக்கு மிகச் சங்கடமான ஒரு பிரச்னையாகி விட்டது. முழு ஓய்வு வேண்டும் என்ற டாக்டர்களின் உத்தரவைச் சொல்லிப் பலருக்கு அனுமதி மறுத்ததன் காரணமாய் அவர்களுடைய பொல்லாப்புக்கு உள்ளாக நேர்ந்தது.

தமக்கு எவ்வளவோ தைரியமூட்டி டாக்டர்கள் பேசியபோதிலும், மிகவும் பலவீனமான தமது உடல் நிலையில் மீண்டும் ஒரு தரம் இதயத் தாக்குதல் நேர்ந்தால் தாம் பிழைப்பது அரிது என்பதைக் கல்கி உணர்ந்திருந்தார். அப்படி நேர்ந்தால் அதை இறைவனின் ஆணையாய் ஏற்க வேண்டும் என்ற அடைக்கல மனப் பக்குவத்தை அவர் அடைந்து விட்டார். அந்த மன நிலை காரணமாயும், எதையும் ஒழுங்காகச் செய்து வைக்கும் பழக்கத்தினாலும், தமது உலக உடைமைகளின் பிற்காலப் பாத்தியதை பற்றி உயில் எழுதி வைக்கத் தீர்மானித்தார். உடனேயே, அது பற்றிப் பேசுவதற்கென தமது நிறுவனத்தின் ஆடிட்டர் எஸ். சூரிய நாராயணனை வரவழைத்தார். வழக்கறிஞர் சி. வி. மகாலிங்கத்துடன் வந்த அவரிடம் தமது சொத்துக்களின் விவரங்

களையும் அவற்றைப் பகிர்ந்தளிப்பது பற்றிய தமது விருப்பத்தையும் தெரிவித்து விரைவிலேயே உயில் பத்திரம் வரைந்து கொண்டு வரும்படி கேட்டுக் கொண்டார்.

அவர்கள் சென்ற சிறிது நேரத்துக்கெல்லாம், நெடு நாளைய இலக்கிய நண்பரான பி. ஸ்ரீ. ஆசார்யா கல்கியைக் காண வந்தார். வேண்டுமென்றே அவர் கல்கியைப் பேச விடாமல் தாமே பேசிக் கொண்டிருந்தார். அடுக்குத் தலையணைகளில் சாய்ந்தபடியே கேட்டுக்கொண்டிருந்த கல்கி, அத்தமிழ் அறிஞர் வெளியிட்ட கருத்து ஒன்றைப் பற்றிக்கொண்டு, அதை ஒரு மடக்கு மடக்கி, ''நிலையாமை என்பதுதான் இந்த உலகில் நிலையான உண்மை'' என்று சொன்னார். அது ஒரு சமண ஞானியின் வாக்கு.

பி. ஸ்ரீ. விடைபெற்றுச் சென்றதும், கல்கி வீட்டு வைதீக காரியங்களுக்கு குருவான ரங்கநாத சாஸ்திரிகள் வந்தார். மந்திரத்தின் பொருள் அறிந்து ஓதுகிறவரும், ஓரளவு சம்ஸ்கிருத பாண்டித்தியம் வாய்ந்தவருமான அவர், கல்கியின் எழுத்து வன்மையையும், வாக்கு வன்மையையும் வெகுவாக ரசித்துக் கொண்டாடியவர்.

கவலையுடனும் பரிவுடனும் அவர் கல்கியைப் பார்த்து, ''ஒன்று சொல்லலாமோ?'' என்று அனுமதி கேட்டார்.

''பேஷாய்ச் சொல்லுங்கள்'' என்றார் கல்கி.

''ஒரு நிமிஷம்கூட ஓயாமல் வேலை செய்கிற நீங்கள் இப்படி முடங்கிக் கிடக்கிறதைப் பார்க்க வருத்தமாய் இருக்கு. இது மாதிரி உங்களுக்கு நேர்ந்ததற்குக் கிரக தோஷம் ஏதேனும் காரணமாய் இருக்குமோன்னு எனக்குச் சந்தேகம். உங்கள் ஜாதகத்தைக் கொடுக்கச் சொன்னால் என்ன தோஷம்னு கண்டுபிடித்து அதற்குத் தக்க பரிகாரம் செய்து விடலாம். ஔஷத பலத்துடன் மந்திர பலத்தையும் நாடலாம்னு நினைக்கிறேன்.''

கொஞ்ச நேரம் மௌனமாய் இருந்துவிட்டுக் கல்கி சொன்னார்:

''என் மேலே உண்டான அன்பினாலேதான் இப்படிச் சொல்றேள். இந்த அன்பே போதும். மணி மந்திர ஔஷதம்னு சொல்றது உண்டுதான். ஆனால் எனக்கு என்னமோ உங்கள் யோசனைப்படி செய்யறது சரியாகப் படவில்லை. பகவான் நம்மைச் சோதிக்கலாம்; ஆனால் நாம் பகவானைச் சோதிக்கக் கூடாது. பகவான் சித்தப்படி நடக்கட்டும்னு சரணாகதி நிலையில் இருக்கேன் நான்.''

இதைக் கேட்டு சாஸ்திரிகள் வருத்தமுற்றதைக் கண்ட கல்கி மேலும் சொன்னார்:

''நீங்கள் சொன்னபடி நான் கேட்கவில்லையே என்று வீணே வருத்தப்பட வேண்டாம். கடவுள் கிருபையாலே நான் பிழைத்து எழட்டும். அப்புறம் அவருக்கு நன்றி செலுத்துகிற முறையிலே என்ன வழிபாடு செய்ய வேண்டும் என்றாலும் சம்மதிக்கிறேன்.''

அதைக் கேட்டு சாஸ்திரிகள் சமாதானம் அடையாவிட்டாலும், மறுத்து வாதாட விருப்பமின்றிக் கீழே இறங்கினார். அங்கே பலர், கனிக் காணிக்கையுடன் உயரே செல்லக் காத்து நிற்பதைக் கண்டார்.

டிசம்பர் மூன்றாம் தேதி காலையில், கணவருக்கு ஆகாரம் கொண்டு போன ருக்மிணி அம்மாள், அவருடைய கண்கள் செருகினாற்போல் இருந்ததைக் கவனித்து, ''என்ன இப்படி?'' என்று பயந்து போய்க் கேட்டார்.

அவர் கண்களைக் கசக்கி விட்டுக் கொண்டு, ''ஒன்றுமில்லை, பயப்படாதே'' என்று சமாதானப்படுத்தினார். ''நீ பயப்பட்டால் குழந்தைகளும் பயப்படுவார்கள்'' என்றார்.

எட்டு மணிக்கு டாக்டர் சஞ்சீவியும் டாக்டர் அருணாசலமும் கல்கியைச் சோதித்துப் பார்த்துவிட்டு, கீழ்க் கூடத்தில் நின்றபடி ஏதோ மெல்லப் பேசிக் கொண்டிருந்தார்கள். ருக்மிணி அம்மாள் பதற்றம் அடைந்து அவர்களை வலம் வந்து வணங்கி, ''எப்படியாவது அவரைக் காப்பாற்றிக் கொடுங்கள்'' என்று வேண்டினார். ''எங்களால் ஆனதைச் செய்து கொண்டுதான் இருக்கிறோம்'' என்று அவர்களில் ஒருவர் சொன்னார். ''கடவுள் அனுக்கிரகம் வேண்டும்'' என்று சொன்னார் இன்னொருவர்.

அன்று மாலை ராஜாஜி வந்து, தமக்காக நெடுங்கிலும் போராடிய ''மெய்க் காவலர்'' அப்படிச் சோர்ந்து படுத்திருப்பதைக் கண்டு மிகவும் வருத்தமுற்றார். ஆயினும் அதை வெளிக்காட்டிக் கொள்ளாமல், தைரியம் ஊட்டிப் பேசிவிட்டுச் சென்றார்.

சற்றுப் பொறுத்துக் கவர்னர் ஸ்ரீ பிரகாசா வந்தார். அவரிடம், காந்தி மண்டப நிதிக்குத் தாம் திரட்டிய பணத்தில் கடைசித் தொகைக்கான செக்கையும், அதன் கணக்கு



ஆசிரியர் : உங்க புனைபெயர் என்ன ?

எழுத்தாளர் : சக்ராச்சாரியார்

ஆசிரியர்: Part I ஆ ? Part II ஆ?

'' என் கேள்விக்கு என்ன பதில்'' நாடகத்திலிருந்து — டி. வி. பாலு

கழுதைப் பாலில் குளிக்க எத்தனை கழுதைகள் தேவை?

சக்கரவர்த்தி நீரோவின் ஆட்சிக் காலத்தில் ரோமப் பேரரசு ஐந்நூறு கழுதைகளை அரசாங்கச் செலவில் பராமரித்து வந்தது; அரசி தன் அழகைப் பாதுகாக்கக் கழுதைப் பாலில் குளித்து வந்த காரணத்தால்!
— கோதிலா



விவரத்தையும் கல்கி கொடுத்தார். ''மண்டபம் கட்டி முடிந்து என் கண்ணுலே பார்ப்பேனே என்னவோ?'' என்று ஏங்கினர். ''கட்டாயம் பார்ப்பீர்கள்'' என்று அவரைத் தேற்றினர் கவர்னர்.

அவரை அடுத்துத் திருப்புகழ் மணி கிருஷ்ணசுவாமி அய்யர் வந்து, கந்தர் அலங்காரப் பாடல்கள் சிலவற்றைப் பாடி, கல்கியின் நெற்றியில் விபூதிஇட்டு ஆறுமுகனின் அருளை வேண்டினர்.

மறு நாள் சனிக்கிழமை காலையில், தம் குடும்பத்தார் அனைவரையும் தம் அறைக்கு வரும்படி நர்ஸ் மூலம் கல்கி சொல்லி அனுப்பினர். அவர்கள் வந்ததும், ''சும்மாதான், உங்களை எல்லாம் சேர்ந்து பார்க்க வேண்டும் போல் இருந்தது'' என்றார். ''அம்மாவையும் பார்க்க வேண்டும் போல் இருக்கு; ஏன் இன்னும் வந்து சேரவில்லை?'' என்று கேட்டார்.

புத்தமங்கலத்திலிருந்து அவருடைய தாயார் ஏற்கனவே புறப்பட்டு, அப்போது திருச்சியில் சுப்புணி வீட்டில் இருந்தார்; சுப்புணியே அவரைச் சென்னைக்குக் கூட்டி வருவார், அல்லது, தக்க துணையுடன் அனுப்பி வைப்பார் — இந்த விவரத்தைக் கல்கி கேட்டுவிட்டு, ''எப்போ இன்னிக்கு வரலையோ, நாளைக்கு வரலாம்'' என்று சொல்லிக் கொண்டார்.

அன்று பிற்பகலில், முன்னேற்பாட்டின்படி வந்த பத்திரப் பதிவாளரின் முன்னிலையில் தமது உயிலில் கல்கி ஒப்பமிட்டார்.

அந்தக் காரியம் முடிந்ததும், அவருடைய மனத்தில் தோன்றிய அமைதி முகத்திலே தெரிந்தது.

மாலையில் திருச்சியிலிருந்து தந்தி வந்தது — அன்று ராத்திரி ரயிலில் தாயார் புறப்பட்டுக் காலையில் சென்னைக்கு வருவார் என்று. அதை அறிந்ததும் அவருடைய முகம் மேலும் தெளிவுற்றது. காலையில் எழும்பூருக்குக் காரைக் கொண்டு போய் அம்மாவை அழைத்து வரும்படி சொன்னர்.

சற்றைக்கெல்லாம், குடும்ப நண்பர் வரதப்பன் (எம். பக்தவத்ஸலத்தின் மருகர்) வந்தார். அவரிடம் கல்கி, ''எனக்கு ஓர் உதவி செய்ய முடியுமா?'' என்று கேட்டார்.

''எதுவானுலும் செய்கிறேன்'' என்றார் அவர்.

''திடீரென்று ஓர் ஆசை — பாலாற்றுத் தண்ணீர் குடிக்க வேண்டும்போல் இருக்கு. ரொம்ப தூரம் செங்கல்பட்டு வரை போய் அல்லவா அதைக் கொண்டு வர வேண்டும்? சிரமமான காரியம்தான்.''

''இதென்ன பிரமாத சிரமம்?'' என்று வரதப்பன் சொல்லிவிட்டு, அவருடைய வேட்கையைத் தீர்ப்பதற்காகப் புறப்பட்டார். தம் வீட்டுக்குப் போய்ப் பெரிய குடம் ஒன்றைக் காரில் எடுத்து வைத்துக் கொண்டு, செங்கல்பட்டை நோக்கிப் பயணமானர்.

(கல்கி வெகுவாக ரசித்தவைகளில் ஒன்று பாலாற்றுத் தண்ணீர். அதன் தனி ருசியை, அந்த ஆற்றின் கரையில் அமைந்த இந்து மத பாடசாலையை 1938ல் முதல் தடவையாக அவர் பார்வையிட்டபோது முதல் தடவையாக அனுபவித்தார். அந்த அனுபவத்தை அடுத்துத்தான், ''பாலாறும் பகற் கனவும்'' என்ற பிரபலமான கட்டுரையை — அந்தக் குருகுலத்தைப் பிரபலப்படுத்தியதுமான கட்டுரையை — அவர் எழுதினர்.

பாலாற்றில் அபூர்வமாய் ஓடும் தண்ணீரைவிட அதன் ஊற்றுத் தண்ணீரே சுவை மிக்கது. மணலை வருடினுல் போதும், இன்சுவைத் தண்ணீர் கசிந்து சுரக்கும். இதை எண்ணித்தான், ''தாயைப் போல் பால் சுரக்கும் பாலாறு'' என்று பொருள்படும்படி சேக்கிழார் பாடி இருக்கிறர்.)

இத்தகைய பாலாற்றை நோக்கி, பனிக் கால முன்னிரவில் வரதப்பன் சென்று கொண்டிருக்கையில், கல்கியின் அறையில் சதாசிவம் தம்பதியர் கட்டிலுக்கு அருகே அமர்ந்திருந்தார்கள். ''முகம் தெளிந்திருக்கிறது, இனி சீக்கிரமே குணம் அடைந்துவிடுவீர்கள்'' என்று அவரிடம் சொல்லிக் கொண்டிருந்தார்கள்.

அவர்களுடைய இத மொழியையும் அன்பையும் கல்கி பாராட்டிவிட்டு, சுப்புலக்ஷ்மியை நோக்கி, ''உங்கள் பாட்டைக் கேட்டு நாளாச்சு, கொஞ்சம் பாடுங்களேன்'' என்றார்.

அதற்கிணங்க அவரும் பாடினர் — இனிய குரலுடன் இதய நாதமும் இணைந்த பாடல்கள்; உள்ளம் உருகத்

தெய்வங்களின் அருள் வேண்டும் பாடல்கள்; வெவ்வேறு ராகங்களின் வண்ண மணிக் கோலங்கள்.

கண்களை மூடி, காலத்தையும் சூழலையும் தம்மையும் மறந்து கேட்டுக் கொண்டிருந்தவர், கானப் பொழிவு நின்றதைக் கவனித்து, "இன்னும் ஒரே ஒரு பாட்டு, முருகன் பேரில் ஒன்று" என்று கேட்டுக் கொண்டார்.

"ஒரு தரம் சரவண பவ" என்ற பாட்டுப் பொங்கி எழுந்து பரவிற்று. படுத்திருந்தவர் கண்ணீர் மல்க அதைக் கேட்டுக் கரைந்து உருகினார். கானம் இசைத்தவரும் சதாசிவமும் விலகிச் சென்று வெகுநேரம் ஆன பின்பும், அந்தப் பக்தி இசையின் நினைவு இழைகளிலே அவர் லயித்திருந்தார்.

பாலுடன் மனைவி வந்தபோதுதான் அந்த லயிப்பிலிருந்து அவர் விடுபட்டார். துளித் துளியாய்ச் சுவைத்துப் பாலைப் பருகினார்.

மனைவி சென்றதும் மகள் வந்தாள்.

அன்று முழுதும் பேத்தியைப் பார்க்காதது பற்றித் தமது மனக் குறையை அவளிடம் சொல்லி, " இப்போது தூங்குகிறாளாக்கும்?" என்று கேட்டார்.

" ஆமாம், மணி பத்துக்கு மேல் ஆகிறதே !" என்றாள் ஆனந்தி.

" ஏதேனும் பாடு" என்று அவர் கேட்டுக் கொண்டார். " எனக்குத் தூக்கம் வருகிறவரை பாடிக் கொண்டே இரு" என்றார்.

"ஆரூரர் ஆசைப்படார்" என்பதுடன் தொடங்கி இரண்டு மூன்று பாட்டுக்களை அவள் பாடி முடித்ததும், தம்முடைய சொந்தப் பாட்டுக்களைப் பாடச் சொன்னார்.

அதற்கிணங்க அவள் முதலில் பாடியது: "மறவேன் மறவேன் என்று வேலின் மேல் ஆணையிட்ட மன்னரும் மறப்பாரோ — நீலமயிலே!"

அவர் படைத்த சிவகாமி அபிநயித்து ஆடுவதற்கென அவரே இயற்றி, ஆனந்த பைரவியில் அவரே மெட்டும் அமைத்த பாடல் அது.

"பேஷ், பேஷ் !" என்று சொல்லிக் கொண்டு அதை ரசித்தார் கல்கி. முன்பு கற்பனை செய்து எழுதிய அந்த ஆடல் காட்சியை மீண்டும் அவர் கற்பனையில் கண்டார் போலும்.

அடுத்ததாக எதைப் . பாடலாம் என்று ஆனந்தி யோசித்துக் கொண்டிருக்கையில், "பூங்குழலியின் கடல் பாட்டுப் பாடு" என்று அவரே சொன்னார்.

அதை அவள், தானே காவடிச் சிந்து மெட்டில் அமைத்தபடி பாடினாள் :

அலை கடலும் ஓய்ந்திருக்க
அகக் கடல்தான் பொங்குவதேன்?
நில மகளும் துயிலுகையில்
நெஞ்சகந்தான் விம்முவதேன்?...

கோடிக்கரையிலே, அமைதியான அந்தி நேரத்தில் கடலழகி இசைத்த தான அப்பாடல், மேலே மேலே விம்மிக் கொண்டிருக்கையில், மெல்ல மெல்லக் கண் அயர்ந்தார் கல்கி. பிள்ளைப் பருவத்தில் தண்ணீரில் மூழ்கித் தவித்துப் பிழைத்தது முதல், அவ்வப்போது அவருடைய உள்ளத்தில் எழுந்து கொண்டிருந்த அலை ஓசை, அந்த நள்ளிரவு வேளையிலும் எழுந்திருக்கும்; ஆனால் அப்போது அது, முன்பு கேட்டதற்கெல்லாம் முற்றிலும் வேறானதாய் இருந்திருக்கும்.

அவர் ஆழ்ந்து துயில் கொள்ளத் தொடங்கியதும் ஆனந்தி பாட்டை நிறுத்திக் கொண்டு, அவரை ஜாக்கிரதையாய்க் கவனித்துக் கொள்ளும் படி நர்ஸிடம் சைகை காட்டிவிட்டுக் கீழே சென்றாள்.

அதே வேளையில், கல்கியின் தாயார், ரயில் பிரயாணத்தில் பாதி வழி கடந்திருந்தார்.

பாலாற்றுத் தண்ணீருடன் நடுநிசியில் சென்னைக்குத் திரும்பிய வரதப்பன், அந்த அகால வேளையில் அதைக் கல்கியிடம் கொடுக்க வேண்டியதில்லை என்று எண்ணி, நேரே தம் வீட்டுக்கே சென்று குடத்தை இறக்கி வைத்துக் கொண்டார்.

விடிவதற்குச் சுமார் ஒரு மணி நேரம் இருக்கையில், திடீரென வேதனையினால் கல்கி முனகினார். படுக்கை அருகே விரைந்த நர்ஸ், கைநாடியைப் பார்த்துவிட்டுக் கீழே ஓடி, டாக்டரை எழுப்பி அழைத்து வந்தாள். இருவரும் அவசரம் அவசரமாய்ச் சிகிச்சைகள் செய்து, ஓய்ந்து கொண்டிருந்த உயிரை மீட்க முயன்றார்கள்...

விடிந்தபின் வந்த தாயார், மகனின் உயிரற்ற உடலைத்தான் பார்த்தார்.

அந்த உடலை நீராட்டத்தான் பயன் பட்டது பாலாற்றுத் தண்ணீர்.

(அடுத்த இதழில் முற்றுப் பெறும்)



பாடும் எலிகள்

எலி மிக உரத்த குரலில் இசை பாடுமாம் !.......ஆனால் நமக்குக் கேட்பதில்லை! ஏன் தெரியுமா ? காற்றில் மிதந்து வரும் ஒலி அலைகளை நமது காது கிரகித்துப் புரிந்து கொள்கிறது. விநாடிக்கு 20க்கு மேலும் 20,000க்கு உட்படவுமுள்ள ஒலி அலைகளைத்தான் மனித செவிகள் கிரகிக்கவல்லன. எலி 20,000க்கும் மேற்பட்ட ஒலி அலைகளைப் பரப்பிப் பாடுகிறது. எந்தப் பாடகராலும் அந்தமாதிரிக் குரலில் பாட முடியாதாம். — கோதிலா


இப்பொழுது நடைபெறுகிறது
சென்னை
சாந்தம் A/C
(4 காட்சிகள்)
11. 2-30. 6-15 - 9, 10 p.m.
ஸ்ரீகிருஷ்ணா
உமா • கமலா
3 காட்சிகள்
மற்றும் தென்னாடெங்கும்
மக்கள் திலகம்
எம்.ஜி.ஆர்
அளிக்கும்
கே.சி.பிலிம்ஸின்
உழைக்கும் கரங்கள்
வண்ணப்படம்
டைரக்ஷன்
K.சங்கர்
ARIES
தயாரிப்பு
கோவை செழியன்
கதை-வசனம்
நாஞ்சில் கி.மனோகரன்

"ஹை... தீபா! உன் ஹீரோ வந்தாச்சுடி !'' மாலு கீச்சுக் குரலில் கத்தினாள்.

'' உஷ் ! சும்மா இருடி...! உன் தொணதொணப்பு... நீயோ !''

உடனே தீபாவைச் சுற்றி அமர்ந்திருந்த பெண்கள் அனைவரும் திரும்பி ஆர்வத்துடன் பார்த்தனர்.

காலேஜ் கேட்டின் அருகில் வந்து நின்ற ஸ்கூட்டரிலிருந்து சரயு குதித்து இறங்கினாள். புத்தகப் பையை எடுத்துச் சரியாகத் தோளில் மாட்டிக் கொண்டு அவள் ஏதோ சொல்ல... ஸ்கூட்டரை ஓட்டி வந்த பிரபு, தலையைக் கம்பீரமாகத் திருப்பி ஏதோ பதில் அளிக்க, இருவரும் வாய்விட்டுச் சிரித்தனர்.



மறுநிமிடம் ஸ்கூட்டர் பறந்தது. சரயு அலட்சியமாகத் திரும்பி ஒயிலாக நடந்து உள்ளே வந்தாள்.

மரத்தடியில் அமர்ந்திருந்த பெண்கள் எல்லோரும் மௌனமாக இந்தக் காட்சியைப் பார்த்துக் கொண்டிருந்தனர். ஒவ்வொருவர் உள்ளத்திலும் பிரபுவைப் பார்த்ததில் ஒருகிளுகிளுப்பு! அதே சமயம்..... சரயு போல் அதிர்ஷ்டம் செய்யவில்லையே என்ற அருவை !

காலில் ஹை ஹீல்ஸ் சப்திக்க... சரயு அழகாக நடந்து, கையைத் தூக்கி எல்லோருக்கும் பொதுவாக அசைத்துவிட்டு அடி பிசகாமல் கம்பீரமாக நடந்து சென்றதை எல்லோரும் கண் கொட்டாமல் பார்த்தனர்.

எல்லாப் பெண்களிடமிருந்தும் கிளம்பிய பெருமூச்சு... அங்கு நிலவிய நிசப்தத்தையே கலைப்பது போல் இருந்தது.

மாலு தலையைக் குலுக்கிக் கொண்டு, ''ஏண்டி..... தீபா ! பிரபு உனக்கும் உறவு தானே ! சரயுவுக்கு மட்டும், அதிர்ஷ்டம் அடிப்பானேன் ?'' என்று தன் ஏமாற்றத்தை மறைத்துக் கொண்டு தீபாவைத் தூண்டினாள்.

தீபாவும், சரயுவும் பிரபுவுக்குத் தூரத்து உறவினர்கள்தான். இரு குடும்பத்தினருடனும் பிரபு சகஜமாகத்தான் பழகி வந்தான். ஆனால் சமீப காலமாக அவன் சரயுவுடனும், அவள் குடும்பத்தினருடனும் ஒட்டிப் பழகி... அது... சரயு — பிரபு காதலாகப் பரிணமித்திருக்கிறது.

பிரபு பணக்காரன் மட்டும் அல்ல; ஆண் அழகன்கூட...! சிறு வயதிலிருந்தே எல்லா வகுப்புக்களிலும் முதலாவதாகத் தேறிப் பல பரிசுகளை வாங்கிக் குவித்தவன். இருபத்தைந்து வயதிலேயே ஒரு பெரிய கம்பெனியில் இரண்டாயிரம் ரூபாய் சம்பளம் வாங்கும் வேலையில் இருப்பவன்.

தீபாவின் குடும்பத்தினரும், சரயுவின் குடும்பத்தினரும் பிரபுவை மாப்பிள்ளையாக அடைவதற்குப் போட்டி போட்டதில் ஆச்சரியம் இல்லை. ஆனால் அந்த அழகனின் பார்வை அழகியின் மேல்தானே விழுந்தது !

சரயு நல்ல அழகிதான் ! ஆனால் தீபா அழகற்றவள் என்று சொல்ல முடியாது. பார்க்கப் போனால் சரயு மாநிறம்தான். தீபா நல்ல வெளுப்பு ! ஆனால் இருவரையும் பார்ப்பவர்கள், சரயுவைவிட்டுப் பார்வையை அகற்றச் சிறிது நேரமாகும்.

காரணம் அவளுடைய அழகிய நீண்ட கண்கள் ! அந்தக் கண்களைச் சுழற்றித்தான் அவள் பிரபுவை மயக்கி இருக்க வேண்டும் என்று தீபா எண்ணிக் கொண்டாள்.

விரைவில் பிரபுவுக்கும், சரயுவுக்கும் கல்யாண நிச்சயதார்த்தம் நடக்கப் போகிறது. இரண்டு மாதங்களாக அவன் ஸ்கூட்டரில் தான் சரயு கல்லூரிக்கு வருகிறாள். அவர்களைப் பார்க்கவென்றே — அப்படிச் சொல்லுவதுகூடத் தப்பு — பிரபுவைப் பார்க்க வேண்டும் என்றே... கல்லூரி கேட்டினருகில் ஒரு கும்பல் உட்கார்ந்து காத்திருக்கும் நிலைமை உருவாகிவிட்டது.

கம்... செப்டம்பர்!

வாயாடி மாலு மட்டும் சும்மா இருக்க மாட்டாள்: ''ஏண்டி, தீபா! பார்த்தாச்சா! இனிமேல் இடத்தைக் காலி பண்ணலாமே.... ஹீரோவும் போயாச்சு.... ஹீரோயினும் மறைந்தாச்சு....'' என்று கூறிக் கொண்டே மாலு தீபாவின் கையைப் பிடித்து இழுத்தாள்.

'' ஏண்டி, மாலு.... என் மன நிலை தெரிந்தும்...நீகூட என்னைக் கிண்டல் செய்கிறாயா?'' என்று கூறும்போதே தீபாவின் ஏமாற்றம் அனைத்தும், அவள் கண்களில் கண்ணீராகத் திரண்டுவிட்டது.

மாலு பதறியவளாக, ''சீச்சீ ! என்னடி, இதுக்கெல்லாம் அழறே...! முகமெல்லாம் சிவந்து போச்சு. வா, வா! குளுமையாகத் தண்ணீர் சாப்பிட்டுவிட்டு கிளாஸுக்குப் போகலாம்'' என்று கூறவே இருவரும் 'வாட்டர் கூலர்' வைத்திருந்த இடத்தை நோக்கி மௌனமாக நடந்தனர்.

திடீரென்று தீபா மாலுவின் கைகளைப் பிடித்துக் கொண்டாள்.

''மாலு!..... நிஜம்மாச் சொல்லு, நான் அழகாயில்லையா ?''

மாலுவும் தன் கேலியையெல்லாம் ஒதுக்கி வைத்து விட்டுப் பரிதாபமாகத் தீபாவை உற்றுப் பார்த்தாள்.

''தீபா ! நீ இவ்வளவு தூரம் பிரபுவை விரும்பறேன்னு நான் நினைக்கலேடி! ஏதோ எங்களைப் போல் ஒரு சுவாரசியத்துக்காகத் தினமும் அவனைப் பத்திப் பேசறேன்னு நினைச்சேன். உண்மையாகச் சொல்லட்டுமா? சரயு உன் கால்தூசுக்குச் சமமாகமாட்டாள். அழகு மட்டும் இருந்தால் போதுமா ?..... படிப்பிலே சூனியம் ! ஏதோ இதுவரைக்கும் தட்டுத் தடுமாறிப் பாஸ் மார்க் வாங்கிண்டு வரா.... நீயோ எல்லாத்திலேயும் முதல் ! பிரபுவுக்குச் சமதையா மெடலும், கப்பும் வாங்கிப் பீரோ பீரோவா அடுக்கி வைச்சிருக்கே ! பிரபுவுக்குச் சமதையான அறிவு உங்கிட்டத்தான் இருக்கு. பிரபு ஒரு முட்டாள்! அவன் அறிவை மதிக்கல்லே. அழகைப் பார்த்து மயங்கிவிட்டான்! சரயு வெறும் உல்லாசப் பொம்மை ! உழைப்பின் பெருமையே தெரியாது.... ஏதோ தான் படித்து என்ன ஆக வேண்டும், தன் கணவனாக வருபவன் படித்திருப்பதே போதும் என்று கர்வத்துடன் அலட்சியமாக இருக்கிறாள்.... நான் சொல்றேன் தீபா ! நிச்சயமாகப் பார். சரயுவால் பிரபுவுக்கு ஈடுகொடுக்கவே முடியாது...... மோகம் முப்பது நாள் என்ற கதையில்தான் முடியும். விதம் விதமாக டிரஸ் செய்து கொண்டு சுற்றினால் போதுமா ? காதலன் மனத்தில் தன்னைப் பற்றிய உயர்ந்த எண்ணத்தை முதலிலேயே உண்டாக்க வேண்டும் என்று தெரிய வேண்டாம் ! சாதாரணமாகவே பாஸ் செய்யப் 'பல்டி' அடிப்பாள். இப்போ காதல் விவகாரம் வேறு... கண்டிப்பாக இந்தத் தடவை அவள் செப்டம்பர் தான் ! பாரேன், என் ஜோஸியம் உண்மையாகப் போறது !''

உடனே.... தீபா இடைமறித்து, ''இன்னொண்ணு தெரியுமாடி ! சரயுவின் அம்மாவும் அப்பாவும் அவள் படித்தது போதும், கல்யாணத்தை உடனே பண்ணிவிடலாம்னு அவசரப்பட்டாளாம். பிரபுதான் சரயு கண்டிப்பாகப் படித்து முடிக்க வேண்டும், பிறகு



உறைபனியில்

உல்லாச நேரம்!



வெண்பனியில் மலைச்சரிவில் சறுக்கி வருவது "ஸ்கீயிங்". உறை பனியில் சம தரையில் அலங்கார ஒய்யாரத்துடன் சறுக்குவது ஸ்கேட்டிங்.

சென்னை ஹோட்டல் சோழாவில் (Chola) ஸ்கேட்டிங் வசதி இருக்கிறது. ஜில்லென்று இருக்கும் (பதினைந்து டிகிரி ஃபாரன்ஹைட்) உப்பு நீரை ஸ்கேட்டிங் தளத்தின் அடிவாரத்தில் அமைந்துள்ள குழாய்களில் செலுத்துகிறார்கள். இதன் மீது நீரைத் தெளித்தால் அது உறைந்து ஐஸ்கட்டியாகிறது. ஒன்றேகால் அங்குல ஐஸ் உருவான பிறகுதான் ஸ்கேட்டிங் செய்யலாம்.

அலங்காரங்களுடன் கூடிய இந்த ஸ்படிகக் குகையை அமைக்க ஆன செலவு ரூபாய் நாலரை லட்சம்!

ஸ்கேட்டிங் கற்கும்போது "தொபீர்" என்று விழுந்து எழுவது சகஜம், வெட்கப்படக் கூடாது; வெகு சீக்கிரம் கற்றுத் தேர்ந்துவிடலாம்.

ஹோட்டல் சோழாவில் திரு டோனி டால்பாட், மிஸ் கரன் சிங் ஆகிய இருவரும் கற்றுத்தரக் காத்திருக்கிறார்கள்.

அட்டைப்படத்தில் குமாரி கரன்சிங் ஒரு சிறுமிக்குப் பயிற்சி தருகிறார்.

வண்ணப்படம்: எஸ். என். ராவ்

✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱

தான் கல்யாணம் என்று சொல்லிவிட்டாராம்!'' என்றாள்.

''பார்த்தாயாடி, தீபா! இதிலிருந்தே தெரியல்லே, பிரபுவும் அறிவை விரும்பறான்னு! சரயுவின் சுய ரூபம் விரைவில் தெரியும். பிறகு செப்டம்பரில் சரயு பரீட்சை எழுதுவாளா? இல்லே, கல்யாணம் செய்துப்பாளா? பார்க்கலாம்...'' என்று சொல்லவும் மணி கணகணவென்று அடித்தது.

இருவரும் குளிர்ந்த நீரை 'மடக் மடக்' என்று குடித்துவிட்டுத் தங்கள் வகுப்பை நோக்கி ஓடினர்.

மாலை காரிலிருந்து இறங்கிய சரயு ஏன் இவ்வளவு மௌனமாக வீட்டுக்குள் நுழைகிறாள் என்பது அவள் தாயார் பவானிக்குப் புரியவில்லை.

பவானி வாயைத் திறந்து விசாரிப்பதற்கு முன்பு சரயுவே, ''அம்மா! பிரபு போன் செய்தால் நான் சினிமாவுக்கு வரவில்லே. தலைவலின்னு சொல்லிடு.... எனக்குப் பசியே இல்லே. காண்டீனிலேயே எல்லாம் சாப்பிட்டாச்சு.... நான் என் அறைக்குப் போறேன்'' என்று கூறிச் செருப்பைக்கூடக் கழற்றாமல் மாடிப் படியில் ஏறி மறைந்தாள்.

பவானிக்கு ஒன்றுமே புரியவில்லை. பிரபுவுடன் சரயுவுக்கு என்ன கோபம்? எப்படிக் கேட்பது?

பிரபு எல்லா விதத்திலும் உசத்தியான பிள்ளை. நாகரிக யுகத்தில் பிறந்திருந்தாலும் அளவுக்கு மீறிச் சரயுவுடன் அவன் பழகுவதில்லை என்பதை அந்தத் தாய் உள்ளம் நன்கு உணர்ந்திருந்தது. சரயு எல்லாவிதத்திலும் பாக்கியசாலிதான்!

டெலிபோன் மணி பவானியின் சிந்தனையைக் கலைத்தது. பிரபுதான்!

சரயுவுக்குத் தலைவலி என்றதும், அவன் நிதானமாக, ''அப்படியென்றால் இன்னொரு நாள் சினிமாவுக்குப் போனால் போதும். அவளை நன்றாக ஓய்வு எடுத்துக் கொள்ளச் சொல்லுங்கள். நாளைக் காலையில் பார்க்கிறேன்.....!'' என்று கூறியது பவானிக்குத் திருப்தியாக இருந்தது.

படுக்கையில் அமர்ந்திருந்த சரயுவுக்கு உண்மையாகத் தலையை வலித்தது. அன்று காலை காலேஜில் நுழைந்து சிறிது தூரம் போனதுமே யார் கண் பட்டதோ படிக்கட்டில் காலை இடறிக் கொண்டாள். வலி தாங்காமல் அங்கேயே அமர்ந்து காலை நீவி விட்டாள்.

அவள் அமர்ந்திருந்த இடம் வாட்டர் கூலர் வைக்கப்பட்டிருந்த இடத்துக்கு அருகில் உள்ள தூணின் பின்னால்தான்!

அதனால் தனிமையில் இருக்கிறோம் என்ற எண்ணத்தில் மாலுவும் தீபாவும் அவளையும் பிரபுவையும் பற்றிப் பேசிய பேச்சுக்கள் அவளுக்குத் தெளிவாகக் காதில் விழுந்தன.

தீபாவும் மாலுவும் போன பிறகும் மணி அடித்தது கூடத் தெரியாமல் சரயு வெகு நேரம் தூண் மறைவிலேயே உட்கார்ந்திருந்தாள். சாதாரண விஷயமாக இருந்தால் ''என்னடி! வம்பா பேசறீங்க...!'' என்று சண்டை போடக் கிளம்பி விடுவாள். ஆனால் இது அவள் காதல் பிரச்னையாதலால் மனத்தை வெகுவாகப் பாதித்து விட்டது.

திரும்பத் திரும்பப் பிரபுவுக்குத் 'தான் ஏற்றவளில்லை' என்ற எண்ணமும் 'செப்டம்பர்... செப்டம்பர்' என்ற வார்த்தையுமே அவள் காதில் ஒலித்துக் கொண்டிருந்தது.


குழம்பிய மனத்துடன் சரயு அதுவரை மார்புடன் அணைத்திருந்த புத்தகப் பையைக் கட்டிலில் போட்டாள். அத்துடன் காரில் அவள் தகப்பனார் எப்போதும் வைத்திருக்கும் ''வெற்றியின் ரகசியம்'' என்ற புத்தகமும் கீழே விழுந்தது. இதுவரை சரயு அதைப் பிரித்துப் பார்த்ததில்லை.

இன்று சரயு ஆர்வத்துடன் புத்தகத்தைப் பிரித்தாள். பிரித்த பக்கத்தில் ''மாணவர்களுக்காக'' என்ற தலைப்புக் காணப்பட்டது.

சரயு தீவிரமாகப் படித்தாள்.

''படிப்பு என்பது எளிதான விஷயமல்ல. அதற்கும் நல்ல உழைப்பு அவசியம். வாழ்க்கையில் உயர அறிவு மட்டும் இருந்தால் போதாது. உழைப்பே... உயர்வுக்குக் காரணம். உழைப்பின் பெருமை படிப்பில் மார்க்குகளாக வெளிப்படுகிறது. வாழ்க்கையில் எல்லா மாணவ மாணவிகளும் படிப்பின் மூலம் காட்டும் உழைப்புத்தான் அவர்கள் எதிர்கால மாளிகைக்குக் கட்டப்படும் உறுதியான அஸ்திவாரம். படிப்பு... நம் உழைப்பின் பெருமையை அருமையை உணருவதற்குச் சிறு வயதிலேயே ஏற்படும் ஒரு நல்ல அனுபவம். இதில் உழைத்து அறிவை வளர்த்து வெற்றி கண்டவன், வாழ்க்கையில் மற்ற உழைப்புக்களுக்கு அஞ்ச மாட்டான்.''

குவாலியர் ரேயானின் மகத்தான 26 ஆண்டு காலப் பணி



தன்வலிமை பெறும் கனவை நனவாக்கி வரும் பணி.

ரேயான் துணிகள், ஸ்டேபிள் இழை, ரேயான்-கிரேடு பல்ப் (கூழ்), ரேயான் ஸ்டேபிள் நூலிழைத் தொழிற்சாலைகளுக்கான எந்திர சாதனங்கள் ஆகிய எல்லாவற்றையும் நம் நாட்டிலேயே உற்பத்தி செய்து கொள்வதற்கென குவாலியர் ரேயான் செய்துவரும் முயற்சிகள், நாடு சுதந்திரம் எய்திய நாளிலேயே தொடங்கிவிட்டன.

மூங்கில் மற்றும் இதர கெட்டி மரங்களிலிருந்து கரை திறனுள்ள ரேயான்-ரகக் கூழ் தயாரிப்பு, மற்றும் ரேயான், பல்ப், இவை சார்ந்த தொழிற்சாலைகள் ஆகியவற்றுக்கான நுட்பமயமான எந்திர சாதனங்களின் உற்பத்தி முதலியவற்றிலே குவாலியர் ரேயான் முன்னோடியாக விளங்குவதனால், ரேயான் தொழிலிலே நம் நாடு தன்வலிமை பெற வழியமைந்துள்ளது.

இன்று, குவாலியர் ரேயானின் ஸ்டேபிள் நூலிழை உற்பத்தியளவு, 520 லட்சம் பேருக்கு ஆடை வழங்கப் போதுமானதாக உள்ளது. மரக் கூழ் உற்பத்தியோ, ஆண்டு தோறும் ஒரு லட்சம் டன்களுக்கு மேல்; இது செல்லுலோஸ் இழையளவிலே கணக்கிட்டால், 5.2 லட்சம் பருத்தி பேல்களுக்கு ஈடாகும்.

கடந்த பத்தாண்டுகளில், குவாலியர் ரேயான் நம் நாட்டின் பொக்கிஷத்திற்கு, வரிகளும் தீர்வைகளுமாக ரூ. 90 கோடி செலுத்தியுள்ளதோடு, அதே காலத்தில் ரூ. 360 கோடி அந்நிய செலாவணியை மிச்சப்படுத்தியுள்ளது: இதை நோக்கும்போது, தன்வலிமை வாய்ந்த பொருளாதார அமைப்புக்கு குவாலியர் ரேயான் செலுத்திவரும் மகத்தான பணியின் பெருமை தெளிவாக விளங்கும்.

குவாலியர் ரேயான்—
தேச முன்னேற்றமே முதன்மை எனக் கருதுவோர்.

தி குவாலியர் ரேயான் ஸில்க் மானுபாக் (வீவிங்.) கோ. லிட்., பிர்லாகிராம், நாக்தா (ம.பி.)



ஸிங்கர்*
ஆல்-பர்ப்பஸ்
ஆயில் மட்டுமே
எண்ணெய்ப்பசை
ஊட்டும் போதே
பாதுகாப்பையும்
அளிக்கிறது
ALL-PURPOSE
HIGH QUALITY
SINGER OIL
FOR USE AT HOME AND INDUSTRY
எண்ணெய்ப் பசையூட்டிப்
பாதுகாத்துப் பணத்தையும்
மிச்சப்படுத்துகிறது
எங்கும் கிடைக்கிறது
*ஸிங்கர் கம்பெனியின் ட்ரேட் மார்க்
ஸிங்கர் அளிப்பவை
சிறந்த பொருட்களே
ஸிங்கர் ஸுயிங் மெஷின் கம்பெனி, 207, டி.என். ரோடு, பம்பாய் 400 001
msa. S S M-43 TM

சரயு இந்த வரிகளைத் திரும்பத் திரும்பப் படித்தாள்.

மறுநாள் காலை ஐந்து மணிக்கு அலாரம் அலறிய ஓசை கேட்டுப் பவானி திடுக்கிட்டு எழுந்தாள். அந்த ஓசை சரயுவின் அறையிலிருந்து வருகிறது என்று உணர்ந்ததும், அவளுக்கு ஆச்சரியமாக இருந்தது.

தினமும் காலை ஏழு மணி வரை புரண்டு புரண்டு தூங்கும் சரயு காலை ஐந்து மணிக்கே அலாரம் வைத்து எழுந்திருப்பானேன்? என்ன காரணம்? பரீட்சைக் காலங்களில் கூட சரயு அப்படி எழுந்ததில்லையே!

அன்று மட்டுமா? தொடர்ந்து தினமும் சரயுவின் அறையில் அலாரம் ஒலிப்பதையும் சரயு உடனே எழுந்து விளக்கைப் போட்டுக் கொண்டு படிப்பதையும் பார்த்து அவள் பெற்றோர் ஆச்சரியம் அடைந்தனர்.

இந்தத் திடீர் மாற்றத்துக்குக் காரணம் என்ன என்பதை அறிந்துகொள்ளும் ஆர்வம் இருந்தாலும் அதைச் சரயுவிடம் நேரிடையாகக் கேட்பதில் பிரயோசனமில்லை என்பது அவர்களுக்குத் தெரியும்.

பிரபுவுக்கும் சரயுவின் மாற்றம் தெரிந்தது. இப்பொழுதெல்லாம் தனக்கு ஸ்பெஷல் கிளாஸ் இருப்பதாகச் சொல்லிச் சரயு, பிரபு வரும் நேரத்துக்கு முன்பே காலேஜுக்குப் போய்விடுகிறாள். மாலையிலும் அவனுடன் வெளியில் செல்வது வெகுவாகக் குறைந்து பிறகு அடியோடு நின்றுவிட்டது.

பவானிக்கு மட்டும் மனத்தில் ஏதோ சந்தேகம். சரயு இவ்வளவு வருடங்கள் கஷ்டப்பட்டுப் படித்ததே இல்லை. அவளுக்கும் பிரபுவுக்கும் ஏதோ பெரிய மனஸ்தாபம் ஏற்பட்டிருக்க வேண்டும். அதை மறைப்பதற்கே சரயு மும்முரமாகப் படிப்பது போல் பாவனை செய்கிறாள் என்று எண்ணிக் கொண்டாள்.

தீபாவுக்கும் மாலுவுக்கும் மற்ற தோழிகளுக்கும் இப்பொழுது மரத்தடியில் வேலையில்லை. ஹீரோவைப் பார்க்க முடியாத ஏக்கம் எல்லோர் மனத்திலும் இருந்தது.

பரீட்சை நெருங்கிக் கொண்டிருந்தது. மரத்தடிக் கும்பல் கலைந்து விட்டது. சரயுவைப் புத்தகமும் கையுமாகப் பார்த்த மாலுவும் தோழிகளும் கேலியாகச் சிரித்துக் கொண்டனர். சில சமயம் அவள் காது கேட்கவே குறும்புத்தனமாக 'சிலபேர் செப்டம்பர் பரீட்சைக்கும் சேர்த்து இப்பவே படிக்கிறார்கள்' என்று கூறிச் சிரித்தனர்.

கடைசி நாள் பரீட்சையும் முடிந்தது. நன்றாகப் பரீட்சை எழுதி முடித்த திருப்தியுடன் வீட்டினுள் நுழைந்த சரயு பவானியிடம் தனிமையில் "அம்மா! பிரபு இப்பொழுதெல்லாம் இங்கே வரதே இல்லை. போனும் செய்யறதில்லை. நான் நல்லாப் படிக்க அவருக்குச் சமதையா பாஸ் செய்யணுங்கிற ஆர்வத்திலே அவரை அலட்சியம் செய்திட்டேன். இது தப்பாம்மா...?" என்று கேட்டபோது துக்கம் அவள் தொண்டையை அடைத்தது.

பவானி வியப்புடன் "அடி அசடே... இதுதானா காரணம்?... பிரபு ஒண்ணும் முட்டாள் இல்லை, உன் படிப்பு ஆர்வத்தைத் தடுக்க. இதை முதலிலேயே அவன் கிட்டே விளக்கிச் சொல்லியிருக்கலாமில்லே... அதனாலே ஒண்ணும் குடிமுழுகிப் போகல்லே... ஸ்பெஷல் டிரெயினிங்குக்காகப் பிரபு டில்லி போயிருக்கான். வர இரண்டு மாதம் ஆகும்னு உங்கிட்டச் சொல்லச் சொன்னான்" என்றாள்.

சரயுவின் விடாமுயற்சியின் பயன் விரைவில் தெரிந்தது. அவள் முதல் வகுப்பில் பாஸ் செய்தது மல்லாமல் எல்லாப் பாடங்களிலும் தீபாவை விட நிறைய மார்க்குகள் வாங்கி இருப்பதைப் பார்த்துக் கல்லூரித் தோழிகள் வாயைப் பிளந்தனர்.

சரயு தன் வாழ்நாளில் இதுபோன்ற சந்தோஷத்தை இப்போதுதான் முதல் தடவையாக அனுபவிக்கிறாள். அவள் உழைத்துப் படித்ததற்கு இவ்வளவு பலனா? எவ்வளவு பாராட்டுக்கள்? அவள் மதிப்பே உயர்ந்து விட்டதே! அவளை நேசிப்பவர்கள் எல்லாரும் சந்தோஷத்தில் பூரித்திருக்கிறார்களே.

அவளைக் கேலியாகப் பார்த்த பெண்கள் இப்பொழுது மரியாதையாகப் பார்க்கிறார்கள். உழைப்பின் பெருமையை முதல் தடவையாக ருசித்துச் சரயு திணறிப் போனாள்.

ஆனால் மனத்தில் மட்டும் பிரபுவின் நினைவு ஓயாமல் உறுத்திக் கொண்டே இருந்தது.

தோழிகளிடம் மார்க்குகளைக் காட்டி மகிழ்ந்து நின்ற வேளையில் படபடவென்று அவளருகில் ஸ்கூட்டர் வந்து நின்றது. நிமிர்ந்து பார்த்த சரயு பிரபுவைக் கண்டு மலைத்தபோது மாலு தணிந்த குரலில் "ஹை ஹீரோம..." என்று கூறுவது கனவில் கேட்பது போல் இருந்தது.


உற்சாகத்துடன் இறங்கிய பிரபு சரயுவின் கையைப் பிடித்துக் குலுக்கினான்.

"கங்கிராஜுலேஷன்ஸ் சரயு டியர்!" என்று அவள் காதருகில் முணுமுணுத்தான்.

பிறகு கம்பீரமாக நிமிர்ந்து அவள் தோழிகளைப் பார்த்து, "வருகிற வெள்ளிக்கிழமை எனக்கும் சரயுவுக்கும் நிச்சயதார்த்தம் நடக்கப் போகிறது. எல்லோரும் கண்டிப்பாக வரவேண்டும்" என்று கூறி சரயுவைப் பெருமையுடன் திரும்பிப் பார்த்தான்.

சரயுவின் அழகிய கண்களில் இப்பொழுது அறிவும் சுடர் விட்டது. பிரபுவின் அன்புப் பிடியினுள் அடங்கியிருந்த அவள் கை 'நீ பிரபுவுக்கு ஏற்றவள்தான்' என்ற செய்தியை அவள் உடலெல்லாம் பரவச் செய்து புல்லரிக்க வைத்தது.

"நிச்சயதார்த்தம் இப்பொழுது; ஆனால் கல்யாணம் மட்டும் கமிங் செப்டம்பரில்தான்" என்று அழுத்தம் திருத்தமாகக் கூறிய சரயு, தீபா–மாலுவின் முகம் போன போக்கைக் கண்டும் காணாதவள் போலத் தலையைத் திருப்பிக் கொண்டாள்.



நியாயமான தள்ளுபடி!

புடவை கடைக்குள் நுழைந்த ஒரு பெண்மணி கடைக்காரரிடம் கேட்டாள்: "நான் ஒருமணி நேரத்துக்குள் புடவையைத் தேர்ந்தெடுத்து வாங்கினால் எனக்கு ஏதாவது விலையில் சலுகை கிடைக்குமா?"

— சாமி


ஆடையில்
பெண்மையின்
இழையோடும் போது
பெண்மைப் பேரழகு
புன்னகை புரியும்!
நிச்சயமாக, மபத்லால் க்ரூப்
அளிப்பவை நேர்த்தியான
துணிமணிகள்தான்!
MAFATLAL GROUP
TM

குட்மார்னிங் டாக்டர்: கருவுற்றிருக்கும் போது…



"டாக்டர்! நீங்கள் தயவு செய்து என் வீட்டுக்கு வர முடியுமா?" என்றார் வேணு.

"என்ன விஷயம்?"

"என் மனைவி கருவுற்றிருக்கிறாள். அவள் வயிறு அளவுக்கு மீறிப் பெரிதாக இருக்கிறது. இரட்டைக் குழந்தையாக இருக்கலாம் என்று யாரோ பக்கத்து வீட்டில் சொன்னார்களாம்!"

"இப்போது என்ன மாதம்?" என்று கேட்டவாறு வேணுவுடன் அவர் வீட்டுக்குப் புறப்பட்டேன்.

○ மேற்கு ஜெர்மனியில் அறிவுக் கூர்மை படைத்த மழலைச் செல்வங்களைப் பெற மருத்துவர்கள் ஆய்ந்து வருகிறார்கள். கர்ப்பிணிகள் விண்வெளிப் பயணிகள் அணிவதுபோன்ற காற்றுப் புகாத இறுக்கமான பிளாஸ்டிக் உடையை வயிறுவரை அணிந்துகொண்டு சுவாசித்தால் 'கொழு கொழு' என்றும், கூர்ந்த மதிநுட்பத்துடனும் குழந்தை பிறக்கும் என்று கருத்துத் தெரிவித்திருக்கிறார்கள். - யூ.பி.எஸ்.



"ஏழாவது மாதம்."

வேணுவின் மனைவியைப் பார்த்தவுடனேயே அவன் கவலைப்பட்டது நியாயமே என்பது புலப்பட்டது. சில 'கிளினிகல்' சோதனைகளும் 'எக்ஸ்-ரே' படமும் எடுத்து வந்து காட்டும்படி சீட்டு எழுதிக் கொடுத்து விட்டுத் திரும்பினேன்.

சோதனைகளின் முடிவு நான் எதிர்பார்த்த படியே இருந்தது. வேணுவின் மனைவிக்கு இரட்டைக் குழந்தைகள் பெறும் வாய்ப்பு இல்லை. வயிறு மிகப் பெரிதாக இருக்கக் காரணம் கூடுதலான திரவம் கர்ப்பப் பையில் நிரம்பி யிருந்ததுதான். மிகுதியாக இருந்த திரவத்தை ஊசி மூலம் எளிதில் வெளிப்படுத்திவிட முடியும். அப்படி வெளிப்படுத்திய பிறகு வேணுவின் மனைவிக்கு வயிற்றுப் பருமன் குறைந்து. 'ஒரு பெரிய சுமை இறங்கியதுபோல் நிம்மதியாக இருக்கிறது' என்று கூறினாள்.

"கருவுற்றிருக்கும் பெண்கள் கருத்தரித்துள்ளது தெரிந்ததுமே மருத்துவரைச் சந்தித்து யோசனை பெற வேண்டுமா?"

"ஐந்தாவது மாதமே மருத்துவரிடம் செல்ல வேண்டியது அவசியம். அடுத்து அவ்வப்போது மருத்துவர் குறிப்பிடும் நாட்களில் சென்று பரிசோதனை செய்துகொள்ள வேண்டும். இதன் மூலம் பேறு காலத்தில் ஏற்படும் சில அபாயங்களைத் தவிர்க்க முடியும். உதாரணமாக, சில சமயம் கருவிலிருக்கும் சிசுவின் தலை மிகப் பெரிதாகவோ அல்லது மிகச் சிறியதாகவோ இருப்பது உண்டு. பல்வேறு காரணங்களால் இப்படியெல்லாம் ஏற்படுகின்றன. கருவுற்ற பிறகு டாக்டரின் மேற்பார்வையில் இருந்தால் பின்னால் மனத் துயரங்களைத் தவிர்க்கலாம்.

"சூலுற்றிருக்கும் பெண்ணின் கவனக் குறைவினாலோ அஜாக்கிரதையினாலோ பிறவி ஊனங்கள் ஏற்படுகின்றனவா?"

"இயற்கையாகவே சில ஊனங்கள் ஏற்படுவதுண்டு, அதாவது மனித யத்தனங்களையும் மீறி. ஆனால் பொதுவாகப் பல குறைபாடுகள் தாயின் கவனக் குறைவினால் ஏற்படுபவையே. ஆரோக்கியமுள்ள அன்னைக்குத்தான் ஆரோக்கியமான குழந்தை பிறக்கும். விடமின் 'ஏ' சத்து அன்னையின் உணவில் இல்லாததால் பிறந்த குழந்தை குருடாக இருப்பதுடன் அதன் தாயும் பார்வை இழக்க நேரிட்டதுண்டு."

"தாயாகப் போகும் பெண் இக்குறைபாடுகளைத் தவிர்க்க என்ன முன்னெச்சரிக்கைகளை மேற்கொள்ளலாம்?"

"தூக்க மாத்திரையோ தலைவலி மாத்திரையோ எந்த மருந்தானாலும் டாக்டர் ஆலோசனையைக் கேட்டுத்தான் சாப்பிட வேண்டும். கருவுற்றிருக்கும்போது மணல்வாரி அம்மை அன்னைக்கு வந்தால், அந்த வைரஸ் கிருமிகள் பிறக்கப்போகும் குழந்தையைப் பாதிக்கக் கூடும். சத்துள்ள உணவைப் புசித்து உடல் நலம் பேண வேண்டியது இன்றியமையாதது. காய்ச்சலுக்கு இடம் கொடுக்கக் கூடாது."

டாக்டர் விஷ்ணு சர்மா கூறக் கேட்டு எழுதியவர்: 'ஆர். பி.'

துவக்காமல் இருக்கமாட்டேன்! — தாஜா

"வா தம்பி வா!" என்று வாஞ்சையுடன் என்னை வரவேற்றார் தோழர் வலங்கிள்ளி இடங்கிள்ளி. (முன்னாள் எம்.எல்.ஏ.).

"எப்படி இருக்கிறீர்கள்? அரசியல் எல்லாம் எந்தமட்டில் இருக்கிறது?" என்று கேட்டு வைத்தேன்.

"மூச்! பேசாதே! குடும்ப விஷயம், கத்திரிக்காய் விலை, கராட்டே பயிற்சி, ராணி ஷேவர் இன கோழி வளர்ப்பு — இப்படி எது வேண்டுமானாலும் பேசு.... அரசியல் மட்டும் வேண்டாம்!..."

"ஏன்? உங்களுக்கு என்ன ஆயிற்று? அரசியல் குட்டையிலேயே ஊறிப் போன மட்டை நீங்கள்... இப்போது திடீரென்று விரக்தி ஏற்படக் காரணம் என்ன?"

"சொல்கிறேன்... அதற்கு முன்னால் இதைப் பார்!" என்று முண்டா பனியனை அவிழ்த்துப் போட்டார். "இதெல்லாம் என்ன தெரிகிறதா?"

"தியாகத் தழும்புகள் என்று சொல்வீர்கள்!...."

"கரெக்ட்! இது ஒவ்வொன்றுக்குப் பின்னாலும் ஒரு தொடர்கதையே இருக்கிறது...."

"அது வேண்டாம் எனக்கு... உங்கள் விரக்தி பற்றிய சிறுகதையே போதும்...."

"தம்பி!" என்று கூறி நிறுத்தி, ஒரு பாக்குவெட்டியை எடுத்துக் கொட்டைப் பாக்கைச் சீவிக் கொண்டே பேசினார்: "நான் எத்தனை பாடுபட்டிருப்பேன்.... எவ்வளவு காலம் உழைத்திருப்பேன்.... எப்படியெல்லாம் சிரமப்பட்டிருப்பேன்.... யாராவது இதையெல்லாம் லட்சியம் செய்தார்களா?"

"யாரைக் குறை கூறுகிறீர்கள்?"

"எங்கள் கட்சித் தலைவர்களைத்தான்.... எத்தனை திட்டங்கள் துவக்கினார்கள், எவ்வளவு கட்டடங்களைத் திறந்து வைத்தார்கள், எத்தனை விழாக்கள் நடத்தினார்கள்! என்னைத் தலைமை தாங்கச் சொல்ல வேண்டும் என்று தோன்றவே இல்லையே எங்கள் மூலவர்களுக்கு!..."

"வெயிட்! வெயிட்!... நீங்கள் தலைமை தாங்கி நடத்துவதாகப் பல அழைப்பிதழ்கள் பார்த்திருக்கிறேனே... நீங்கள் சொல்வதைப் பார்த்தால்...."

"ஐயோ! அந்த வயிற்றெரிச்சலை ஏன் கேட்கிறாய்? நடந்ததை ஒவ்வொன்றாகச் சொல்கிறேன், கேள்: தவிட்டிலிருந்து வெண்ணெய் தயாரிக்கும் தொழிற்சாலைக்கு நான்தான் அடிக்கல் நாட்டுவதாக இருந்தது... ஆனால் அது நடக்கவில்லை...."

"ஏன்?"

"அந்த அடிக்கல்லைத் தூக்கிக் கொண்டு வரும்போது கைத் தவறுதலாகக் கீழே போட்டு உடைத்து விட்டார்கள்!...எனவே, அடிக்கல் நாட்டப்படவே இல்லை..."

"அட கடவுளே!"

"கடவுளாவது! இயற்கை பண்ணுகிற கோளாறுப்பா அது... அதே போல் அகத்திக் கீரையிலிருந்து ஆல்கஹால் உற்பத்தி பண்ணும் தொழிற்சாலையில் முதல் கட்டு அகத்திக் கீரையை நான்தான் எவர்சில்வர் வாணலியில் போட்டு வறுப்பதாக இருந்தது... அதுவும் நடக்கவில்லை...."

"வாணலி தயார் ஆகவில்லையோ?"

"அதெல்லாம் இல்லை... வாங்கி வைத்திருந்த அகத்திக்கீரைக் கட்டுக்களை ஓர் எருமை மாடு தின்றுவிட்டது.... ஆகவே அந்த வாய்ப்பும் பறிபோய்விட்டது!..."

"எருமைக்குப் புத்தி கிடையாது என்பது சரியாகத்தான் இருக்கிறது.... என்ன அவசரம்?..... கொஞ்சம் பொறுத்திருந்தால் சாப்பிட ஆல்கஹாலே கிடைத்திருக்குமே!"

"அதுதான் போகட்டும் என்றால் இன்னொரு நிகழ்ச்சியும் நடந்தது.... ஒரு கூட்டுறவுத் தொழிற்சாலையில் தயாரான முதல் குரோஸ் தீப்பெட்டிகளை நான் விநியோகம் செய்வதாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது... நம்ம கட்சியிலே மற்றவங்களுக்கெல்லாம்கூட என் மீது பொறாமை.... என்ன ஆயிற்றென்றால், விழாவுக்கு முதல் நாள் அந்தத் தொழிற்சாலையே தீப்பிடித்து எரிந்து சாம்பலாகி விட்டது!...."

"உடனே அந்தச் சாம்பலை எடுத்துச் சாக்குப் பைகளில் போட்டு 'முந்தெனப் பயிர் வளர, சத்தான உரம்' என்று விளம்பரம் பண்ணி, உங்கள் கையாலேயே விற்றிருக்க வேண்டியதுதானே!"

"என்ன செய்வது! உன்னைப் போலச் சமயோசித புத்தி எனக்கு இல்லாமற் போய் விட்டது.... இயற்கை என்னை மோசம் பண்ணிவிட்டது!...."

"இன்னும் எந்தெந்த நிகழ்ச்சிகளில் தோல்வி அடைந்தீர்கள்?..."

"பொடிப் பசங்கள் நகத்தைக் கடிக்காமல் இருப்பதற்காகப் பள்ளி மாணவர்களுக்கு நகம் வெட்டும் கருவிகளை இலவசமாக வழங்கும் புரட்சிகரமான திட்டம் கொண்டு வந்தோமே! நினைவிருக்கிறதல்லவா? கன்னரக்குடியில் மொத்தம் நாற்றம்பது கருவிகளை

நான் வழங்குவதாக இருந்தேன். அதுவும் 'அம்பேல்' ஆகிவிட்டது.....''

''எப்படி ?''

'' விழாவுக்கு முதல் நாள் எங்கள் தலைவர் அந்தக் கருவியால் தமது நகத்தை வெட்ட முயன்றிருக்கிறார்..... நாசமாய்ப் போன அந்தக் கருவி அவருடைய விரல் நுனியையே வெட்டிப் போட்டு விடவும், 'நகம் வெட்டியும் வேண்டாம், மண்ணுங்கட்டியும் வேண்டாம்' என்று சொல்லி, திட்டத்தையே ரத்து செய்துவிட்டார் அவர்.....''

''கடவுள் ரொம்பத்தான் சோதிக்கிறார்!''

''இயற்கையின் விளையாட்டு அப்பா!.... அதை விடு.... 'வெறுங்கை முழம் போடாப் பாளையம்' என்ற ஊரில் ஒரு காட்டாற்றின் குறுக்கே பாலம் ஒன்று கட்டி, அதை நான் திறந்து வைப்பதாக இருந்தது... அது என்னடாவென்றால்.....''

''பாலத்தை ஆற்று வெள்ளம் அடித்துக் கொண்டு போய்விட்டதாக்கும்.....?''

''அப்படி ஆகியிருந்தாலும் பரவாயில்லையே !..... பாலம் கட்ட ஒப்புக் கொண்ட கண்டிராக்டர்கள், கொடுத்த பணத்தைச் சாப்பிட்டுவிட்டு, தலைமறைவாகி விட்டார்கள் !.... பாலமாவது, கோலமாவது!''

''சிவ சிவா !''

''இயற்கை செய்கிற கோளாறப்பா இதெல்லாம்.... நான் எதையுமே துவக்கி வைக்காத படிக்கு எல்லாமே நேர்ந்திருக்கிறது பார்.... இதையெல்லாம் பார்த்த பின்னராவது எங்கள் கட்சித் தலைவர்கள் கலபமாக நான் எதையாவது துவக்கி வைக்க ஏற்பாடு செய்திருக்க வேண்டுமா, இல்லையா?.... செய்யவில்லை அவர்கள்......''

''பாவம் சார் நீங்கள் !....''

'' என் ஆயுசுக் காலத்துக்குள் எதையாவது ஒன்றைத் துவக்கி வைத்துவிட்டுத்தான் மண்டையைப் போட வேண்டும் என்ற என் ஆசை அநியாயமானதா என்ன?''

''யார் சொன்னது? நூற்றுக்கு நூறு நியாயமானதே.... கவலைப்படாதீர்கள் சார். கடவுள் உங்களைக் கைவிடமாட்டார். எப்படியும் ஒரு சான்ஸ் கொடுப்பார்......''

''இயற்கை விட்ட வழி!''

இரண்டு நாட்களுக்குப் பிறகு ஒரு நாள் காலைப் பேப்பரைப் பிரித்த நான் திடுக்கிட்டேன் — ''முன்னாள் எம். எல். ஏ. வலங்கிள்ளி இடங்கிள்ளி காலமானார் !'' என்ற செய்தியைப் பார்த்ததும், என் மனம் அவருக்காகப் பச்சாத்தாபப்பட்டது. 'கடைசி வரையில் ஆசை நிறைவேறாமலே போய்ச் சேர்ந்து விட்டாரே !' என்ற அங்கலாய்ப்பே மிகுந்தது.

அன்று மாலையே இன்னொரு நண்பரைச் சந்தித்தேன். வலங்கிள்ளி இடங்கிள்ளியைப் பற்றிப் பேச்சு வந்தது. '' விஷயம் தெரியுமா உங்களுக்கு !... அவர் மண்டையைப் போட்டாலும் போட்டார், ஏகப்பட்ட மரியாதை அவரது பூத உடலுக்கு!....'' என்றார்.

'' கட்சியில் ரொம்ப நாட்களாக உழைத்திருக்கிறாரே !'' என்றேன்.

'' அதைச் சொல்லவில்லை நான்...... நம்மூர் இடுகாட்டில் எலெக்ட்ரிக் சிதை அமைத்திருக்கிறார்கள்..... அது இன்றுதான் துவக்கி வைக்கப்பட்டது..... யாரால் தெரியுமா...? நம்ம வலங்கிள்ளி இடங்கிள்ளியால்! அதையொட்டித்தான் அவர் உடலுக்கு மாலை மரியாதை, ஒரே அமர்க்களம்!....''

எனக்கு மனம் சமாதானம் அடைந்தது. வலங்கிள்ளி இடங்கிள்ளி உயிரோடிருந்த போது வராத வாய்ப்பு, இறந்த பிறகாவது கிடைத்ததல்லவா!.... 'கடவுள்' என்று கூடச் சொல்லமாட்டார் அவர். ''இயற்கை, இயற்கை'' என்றுதான் சொல்வார். அவர் இயற்கை எய்தியவுடன் அவருடைய வாழ்நாளைய ஆசை நிறைவேறிவிட்டதே !


எல்லாம் இயற்கையின் கருணை !







சவாலைச் சந்தித்தேன்!



சென்ற ஆண்டு பதினைந்தாம் தேதி சென்னை டெலிவிஷன் நிலையம் நிச்சயமாகச் செயல்படத் தொடங்கும் என்ற செய்தி வந்தது. அதே தினத்தில் ஒரு பிரமாதமான விழா நடத்திக் காண்பித்தால், வாடிக்கைக் காரர்களின் மனத்தை எளிதில் கவரலாம்; நிறைய டெலிவிஷன் செட்டுகள் விற்பனை யாகும் என்று சிலர் யோசனை சொன்னார்கள். நல்ல யோசனையாகப் பட்டது. ஆனால் அன்று ஆகஸ்ட் பத்தாம் தேதி. நான்கு நாட்களில் அத்தனை ஏற்பாடுகளையும் செய் தாக வேண்டுமே! இதை ஒரு சவாலாகவே எடுத்துக் கொண்டேன்.

நான் டென்னிஸ் கிருஷ்ணனைக் கலந்து பேசாமல் அச்சாபீசுக்குச் சென்று அவரே திறப்பு விழா நடத்துவார் என்று அழைப் பிதழ் அடிக்கச் செய்தேன். அத்துடன் விளம் பரமாகப் பிரபல திரைப்பட நடிகைகளின் பெயர்களைப் போட்டு, இவர்களும் அந்த விழாவில் கலந்து கொள்வார்கள் என்று சுவரொட்டி தயார் செய்யச் சொன்னேன். அப்புறம்தான் அந்தந்த நடிகைகளைப் போய்க் கேட்டுக் கொண்டேன். அவர்களும் இசைவு தெரிவித்தார்கள்.

பதினான்காம் தேதி காலையில்தான் திரு கிருஷ்ணனைச் சந்தித்து அழைப்பிதழையும் கொடுத்தேன். தாமும் தம் மனைவியும் வந்து கலந்து கொள்வதாக வாக்குக் கொடுத்தார்.

ஆகஸ்ட் பதினைந்தாம் தேதியை ஒட்டி ஆங்காங்கு ஒலி ஒளி ஏற்பாட்டுக்காரர்களுக் கும், பந்தல்காரர்களுக்கும் நிறைய வேலை இருக்கும் என்று தெரியும். ஆனாலும் நானும் என் உதவியாளர்களுமாக எப்படியோ ஓடி ஆடி ஆட்களைப் பிடித்தோம். ஆகஸ்டு 14ந் தேதி இரவு பத்து மணிக்கு மேல் பெரிய பந்தல் வேலை தொடர்ந்தது. அப்புறம் ஒலி ஒளி ஏற்பாடுகளும் நடந்தன. காலை ஐந்து மணிக்கு அலங்காரப் பந்தலும், ஆசனங் களும் தயார். இரவோடு இரவாக நடந்து முடிந்தது வேலை. ஆனாலும் என் மனத்துக் குள் ஒரு சந்தேகம் உண்டு. இந்தத் திரைப்பட நடிகைகள் சாக்குப் போக்குச் சொல்லாமல் சொன்னபடி வருவார்களா என்று!

காலை ஒன்பது மணிக்கே, 'க்ளோஸ்ட் சர்க்யூட்' முறையில் பந்தலில் ஆங்காங்கு டெலிவிஷன் மூலம் சில செய்திப் படங்களைப் போட ஏற்பாடு செய்தேன். நட்சத்திரங்கள் வருகிறார்களா இல்லையா என்று பார்க்கவே கூட்டம் கூடிவிட்டது.

நேரம் ஆக ஆக நிச்சயமாக வர ஒப்புக் கொண்ட ஒரு நடிகையைத் தவிர மற்ற எல்லாருமே வந்து விட்டார்கள்! 'ஷூட்டிங் இருக்கிறது' என்று தட்டிக் கழித்த சிலர்கூட வந்து நின்றார்கள். விழாத் தலைவரான திரு கிருஷ்ணனும் அவர் மனைவியும் பந்தலுக்குள் நுழைய முடியாதபடி கூட்டம். போலீஸார் உதவியுடன் அவர்கள் உள்ளே வந்தார்கள்.

விழா அமோகமாக ஆரம்பமாயிற்று. வாங்கி வைத்திருந்த பூமாலைகள்தாம் போத வில்லை. சாமர்த்தியமாக, சிலர் போட்டுக் கொண்டு கழற்றி வைத்த மாலைகளையே திருப்பி உபயோகித்தோம்! ஆரம்ப விழா நாளிலேயே எங்கள் நிறுவனம் ஒன்பது டெலி விஷன் செட்டுகளை விற்றது.

அமைந்தகரை 'வாசனு' நிறுவனத்தின் உரிமையாளர் திரு ஆர். தனஞ்சயனிடம் கேட்டு எழுதியவர்: பட்டினத்தார்.


47-A

ஒரு திருமணத்துக்குச் சென்றுவிட்டு அடையாறு திரும்ப பனகல் பார்க்குக்கு அருகே பஸ்ஸுக்கு நின்றுகொண்டிருந்தேன். சுமார் ஒரு மணி நேரம் நின்றும் 47, 47A பஸ்கள் வரவேயில்லை. கால்கள் கெஞ்சின. அப்போது தூரத்தில் இரண்டு பஸ் வரவும் எல்லோரும் ஆவலுடன் ஏறத் தங்களைத் தயார் செய்து கொண்டார்கள். கடைசியில் வந்த பஸ்கள் 36ம், 11Aவும். விரக்தியுடனும், ஏமாற்றத்துடனும் கூட நின்ற ஒருவர், "எல்லோரும் இரண்டு எண்களையும் கூட்டிக் கொள்ளுங்கள் 47A வரும்" என்றார்! வேதனையை மறந்து சிரித்தோம்.

- பானுசந்திரன்



இரு கண்களின் பார்வையிலே...



எஸ். லக்ஷ்மி சுப்பிரமணியம்

கல்யாணம் ஒன்றில், கற்கண்டு தட்டு ஒன்றை எடுத்துக் கொண்டு நான் வளைய வந்தபோது என் கண்ணில் பட்டவர்தான் ராஜேஷ். இன்னொரு புகழ் வாய்ந்த பெயர் தான். ஆனால் என் கவனத்தைக் கவர்ந்தது அதல்ல; அக்கா அருகில் இருந்தபோதும் என்னிடம் அவர் காட்டிய அக்கறைதான்.

அதற்குப் பிறகு இரண்டு தடவைகள் பஸ் ஸ்டாப்பில் சந்தித்துக் கொண்டோம். வேண்டும் என்றே அந்த நேரத்துக்கு வந்து காத்திருப்பாரோ? கொஞ்சம் பழகி, அவரை நான் சுவாதீனமாகப் பெயர் சொல்லிக் கூப்பிடும் அளவுக்கு ஓர் உரிமை ஏற்பட்டு விட்டது.

ஒரு நாள் இரவு நேரம். ஆங்கிலச் செய்தி அறிக்கையின் முன்னோடி வரிகள் முடிந்ததுமே, 'பட்'டென்று ரேடியோவை மூடிவிட்டு என் கட்டிலில் வந்து உட்கார்ந்தாள் மாலா. 'விருக்'கென்று உட்கார்ந்த வேகத்தில் கட்டில் கத்திற்று. இரு கை விரல்களும் என் இடையைச் சுற்றி ஒன்றுடன் ஒன்று பின்னிக் கொண்டன.

''ஹௌ இஸ் ராஜ்?'' — புன்னகை மாறாமல் சாதாரணமாகக் கேட்டு விட்டாள் என் அக்காள் மாலா. எனக்குத்தான் பதில் சொல்லத் தெரியவில்லை.

மாலாவுக்கு இதிலெல்லாம் அநுபவம் அதிகம். பதினைந்து வயதுப் பெண்ணாகப் பள்ளிக்கூட எல்லையைத் தாண்டாதபோதே அவளுக்கு பஸ்ஸில் பார்வை தொடர்ந்து வரும். கையெழுத்துப் போடத் தைரியம் இல்லாத கடிதங்கள் வீடு தேடியும் வரும். இன்னும் அவள் உல்லாசமாக உடை அணிந்து வெளிக் கிளம்பினால், வானை எட்டி பூச்சிதறக் குடை கவிழும் மத்தாப்புத்தான். என்னால் அப்படிச் சிறமுடியாது. நான் தரைக்கோலம். அவ்வளவுதான்.

''தெரியாது. அவருக்கு என்னைப் பிடித்திருக்கலாம்...'' என்று இழுத்தேன்.

''அது என்ன அப்படிச் சொல்லுகிறாய்? அவர் உன்னிடம் எதுவுமே சொல்லவில்லையா?'' என்று கேட்டாள்.

''இதுவரையில் இல்லை. பழக்கத்திலும் தெரியவில்லை.''

அன்று இருவருமாகத் திரைப் படம் பார்த்துவிட்டுத் திரும்பினோம்.

''பெஸண்ட் நகரில் ஒரு ஃப்ளாட் எனக்குக் கிடைக்கும் போல் இருக்கிறது. நல்ல காற்று. மாலை வேளையில் 'வாக்கிங்' போக, சுகமான கடற்கரை'' என்று என்னைப் பார்த்தார் ராஜேஷ். நான் பதில் பேசவில்லை.

''கறிகாய்ச் சாமான்கள் கிடைப்பதில் கூடச் சிரமம் இல்லை. பக்கத்திலேயே ஒரு மினி சூபர் மார்க்கெட் இருக்கிறது. அங்கே 'காஸ்' கூடக் கிடைக்கிறது....'' என்று இழுத்தார். அவர் என்னைப் பார்த்துப் பேசவில்லை. நானும் இன்னும் பதில் சொல்லவில்லை.

''நமக்குச் சௌகரியமாக இருக்கும்'' என்றார் திடீரென்று.

'' 'நமக்குச் சௌகரியமாக இருக்கும்' என்று எதற்காகச் சொல்கிறீர்கள்?'' என்று ஒன்றுமே விளங்காதவள் போலக் கேட்டேன். அவர் மேலே பேசாமலே இரண்டு நிமிடங்கள் நடந்து கொண்டிருந்தார்.

''ஏன்? நாம் குடித்தனம் செய்வதற்குத்தான். போதுமான இடம் இருக்கிறது. கடற் கரையைப் பார்த்தாற்போல் 'பெட்ரூம்'—''

நான் சட்டென்று திரும்பிப் பார்த்தேன். ''நாம் கல்யாணம் செய்து கொள்ளப் போகிறோம் என்ற 'ஐடியா' உங்களுக்கு எங்கிருந்து வந்தது?'' என்று கேட்டேன்.

ராஜேஷ் அதிர்ந்து போனார். என்னிடம் அவர் இப்படி ஒரு பதிலை எதிர்பார்க்கவில்லை. என் சம்மதத்தைக் கிடைத்து விட்ட ஒன்றாகவே அவர் ஒப்புக் கொண்டு இருக்க வேண்டும்; நான் நம்பியிருந்ததைப் போல.

''நீ என்ன சொல்கிறாய்?'' என்று தவிப்பது போலக் கேட்டார். இருட்டில் குரல்தான் கேட்டது. முகம் சரியாகத் தெரியவில்லை. கலக்கத்தில் அந்த முகம் குழம்பிச் சிவந்து போயிருக்க வேண்டும்.

''நீங்கள் சொல்வதுதான் எனக்குப் புரியவில்லை. 'என்னைக் கல்யாணம் செய்துகொள்ள உனக்கு விருப்பமா?' என்று ஜாடையாக வேனும் நீங்கள் இதுவரை கேட்டதில்லை. திடீரென்று நாம் இருவரும் சேர்ந்து குடித்தனம் நடத்தப் போகும் இடத்தைப் பற்றிப் பேசுகிறீர்கள்...''

''உன் சம்மதம் நீ வெளியிடாமலே கிடைத்து விட்டதாக எண்ணிக் கொண்டு விட்டேன். சரி, இப்போது நான் கேட்கிறேன்'' என்று குரல் தடுமாற என் பக்கம் திரும்பினார்.

''நான் இன்னும் தீர்மானம் செய்யவில்லை!'' என்றேன். கால் செருப்பு குதிகாலில் ஒலித்தது, வழக்கத்தை விடக் கெட்டியாய். நிறை கனமாக அழுத்தியதாலா? இல்லை வேணுமென்றேயா? தன் வெற்றியை ஸ்தாபித்துக் கொள்ள ஓர் இளம் முற்றாத, பக்குவமில்லாத ஆசை...

அப்புறம் ராஜேஷ் என் கண்ணில் ஒரு மாயமாகப் படவில்லை. எனக்குப் 'போன்' செய்வதும் இல்லை. என்னுள் ஒரு சிறு ஏக்கம். பெருமூச்சு விட்டபடி என் நினைவுகளை நானே உதறிக்கொள்வேன். வாய்தான் 'விட்டுத் தள்ளு' என்று சொல்லும். மனம் கட்டிப் பிடித்துப் பரிதவித்துக் கொண்டுதான் இருக்கும்.

நான் வேலை செய்யும் நர்ஸிங் ஹோமில் ஒரு டாக்டருக்குப் பதிலாகப் புதிதாக வந்து சேர்ந்தார் டாக்டர் சுரேஷ். டாக்டருக்கு மற்றவர்கள் என்னை "எங்கள் ஹேமா" என்று அன்போடு அறிமுகம் செய்தார்கள். "அவள் ஒரு 'ஜுவெல்'!" என்று பெருமையோடு சொன்னார் டாக்டர் விக்ரம்.

"உன் உதவி எனக்குத் தேவை. நான் ஊருக்குப் புதிது. இங்கே வருபவர்களையெல்லாம் நான் உன் மூலமாகத்தான் தெரிந்து கொள்ள வேண்டும். அதனால் நீ இங்கே வேலை செய்யும் பெண் மட்டுமல்ல. என் பிரைவேட் செக்ரட்டரி மாதிரி" என்றார் சுரேஷ்.

அந்த நர்ஸிங்ஹோமில் நான் வேலை செய்யா விட்டால், அவருக்கு ஒவ்வோர் அழைப்புக்கும் ஓடி வந்து உதவி செய்யா விட்டால், அவருடைய குறும்பையும் கேலியையும் புன்னகையோடு பொறுத்துக் கொண்டிருந்திராவிட்டால், சுரேஷ் என்னை மறுமுறை நிமிர்ந்து பார்த்திருக்க மாட்டார். எந்த வகையிலும் நான் அவருக்கு 'மாட்ச்' இல்லை. அவரும் மாலாவும்தான் இணை.

இருந்தும் நான் ராஜேஷுக்குப் 'போன்' கூடச் செய்யவில்லை. டாக்டர் சுரேஷிடமிருந்து எனக்குத்தான் 'போன்' வந்தது. மறு நாள் ஞாயிற்றுக்கிழமையானாலும் என்னை நர்ஸிங்ஹோமுக்கு வேலைக்கு வரச் சொல்லி இருந்தார். சாதாரணமாக நான் மறுத்திருப்பேன். வாரத்துக்கு ஒரு நாள் அருமை



யாகக் கிடைக்கும் ஓய்வை நான் இலேசில் நழுவவிடும் வழக்கம் இல்லை.

அன்று நான் அவர் கண்ணில் தனியாகப் படப் போகிறேன். வழக்கமான கூட்டம் அன்று இராது. அவருக்குக் கவனிக்க அதிகமாக வேலை இருக்காது. அவருடைய பார்வை என் மீது நிதானமாக விழுவதற்குச் சந்தர்ப்பம் உண்டு. பார்த்துப் பார்த்து நிதானமாய் அலங்காரம் செய்து கொண்டேன் நானும். நெஞ்சைக் கிளறும் நாணம் கலந்த மகிழ்ச்சியில் ஒரு பூரிப்பு. ஒவ்வோர் அசைவிலும் செயலிலும் புதுப் புது பாந்தங்கள் வெளிப்பட்டுத் தனிமையாய்க் கமழ்ந்தன.

''ராஜேஷ் உன்னோடு பேசினாரா?'' என்று கேட்டாள் மாலா, பார்வையிலேயே ஓர் அர்த்தம் தொனிக்க.

''இல்லையே? நான் வேலைக்குப் போய்க் கொண்டிருக்கிறேன்!'' என்றேன். எனக்கே என் பதிலில் கொஞ்சம் சந்தேகம். மெய்தானா அது?

''உன்னைப் பார்த்தால் அப்படித் தெரியவில்லை'' என்று செல்லமாகக் கன்னத்தில் கிள்ளினாள். அந்த இடத்தில் கலைந்து போன பவுடரைச் சிணுங்கிக் கொண்டே சரி செய்து கொண்டேன்.

இருபது மைல் தொலைவில் இருந்த ஓர் அவசர நோயாளியைக் கவனிக்கக் காரில் போனோம். அங்கிருந்து மாமல்லபுரம் இருபது மைல்தான். சுரேஷ் அழைத்தபோது நான் மறுக்கவில்லை. எனக்கு அவர் பேச்சும் கவனமும் வேடிக்கையாக இருந்தன. அவருக்குச் சுவாரஸ்யமாக இருக்கும்படி எனக்கு என்ன பேசத் தெரியும்? பாதரசம் துள்ளுகிற மாதிரி பழகத் தெரியுமா? என் இடத்தில் மாலா இருந்திருந்தால்? என்னால் அந்த நினைப்பை ஒதுக்க முடியவில்லை.

''உன்னைப் பற்றி நீ என்னிடம் முழுதும் சொல்லவில்லையே?'' என்றார் சுரேஷ். அறிவிலும் சாதுரியத்திலும் தனக்கு இணையில்லாத ஒரு குழந்தையிடம் அருமை ததும்பப் பேசும் குரல்தான் என் காதில் கேட்டது.

''என் பெயர் ஹேமா. எனக்கு வயது இருபது. எனக்கு ஓர் அக்கா இருக்கிறாள். ரொம்ப கெட்டிக்காரி.''

''நான் உன்னைப் பற்றித்தான் கேட்டேன்.''

நான் புருவங்களை உயர்த்திக் கண்களை உருட்டி விழித்தேன். அவருடைய சிரிப்பு என் காதுகளில் ரம்மியமாக ஒலித்தது.

''டாக்டர் சுரேஷ்—''

''வேலை செய்யும் இடத்தில்தான் நான் உன்னுடைய டாக்டர். இங்கே நான் உன்னிடம் வேலை விஷயமாகப் பேசவில்லை. சிறு வயதிலேயே என்னை எல்லோரும் டாக்டர் என்று கூப்பிட வேண்டும் என்று எனக்கு ரொம்ப ஆசை. டாக்டராக ஆகிவிட வேண்டும் என்று எனக்கு ஓர் ஆவல் அந்த வயதிலேயே. உன்னுடைய ஆசை என்னவோ?''

''ரொம்ப அழகாக இருக்க வேண்டும் என்றுதான்! என் அக்கா மாலாவைப்போல.''

''இப்போது நீ அழகாகத்தானே இருக்கிறாய்?'' என்று அவர் சொல்ல வேண்டும் என்று நான் விரும்பினேனா? சுரேஷ் அப்படி எதுவும் சொல்லவில்லை. ''சின்ன வயதில் அப்படித்தான் பிறரைப் பார்த்து அதைப் போல் நாமும் ஆக வேண்டும் என்று ஓர் ஆசை தோன்றும் ஹேமா!'' என்றார். என் பெயர் அதுவரையில் அத்தனை இனிமையாக என் காதில் ஒலித்ததில்லை.

கார் நிதானமாய் ஸ்வரம் பாடிக் கொண்டு ஓடியவண்ணம் இருந்தது. அது நின்ற இடம் ஓர் உல்லாசப் பொழுதுபோக்கு ஹோட்டல்.

''கொஞ்ச நேரம் இருந்துவிட்டுத் திரும்பிவிடலாம்'' என்றார் சுரேஷ். 'ஸ்டியரிங்' மேல் இருந்த கை விரல்கள் என் விரல் மேல் பட்டதும்கூடத் தற்செயலாகத்தானா?

கடற்கரைக் காற்றும் வண்ணப் பூங்காவும், உள்ளே மெல்லொளியில், மெத்தென்ற கம்பள விரிப்பு போட்ட ஹாலும், மென்மையான இசையும், என்னை எங்கோ இழுத்துச் சென்றன. ராஜேஷ் இத்தனை நாளாய் ஒரு முறையேனும் என்னை இந்தவிதமாக அழைத்து வந்ததில்லை.

நாங்கள் இருவரும் தனியாக ஒரு மேஜையில் அமர்ந்து சாப்பிட ஆரம்பித்தோம். மாலா இந்நேரம் என்ன செய்து கொண்டிருப்பாள்? என் கற்பனையில் என்னென்னவோ நிகழ்ச்சிகளின் ஊர்வலம்.

''உனக்குப் பின்னால் இருவர் உட்கார்ந்திருக்கிறார்கள். அந்தப் பெண் உன்னையே பார்த்துக் கொண்டிருக்கிறாள்'' என்றார் சுரேஷ். நான் சட்டென்று திரும்பிப் பார்த்தேன். எனக்கு 'ஜில்'லென்று வியர்த்தது. நெஞ்சில் கல் சுமையாய் ஓர் உணர்ச்சி இறங்கிற்று.

''ஹேமா என்னிடம் சொல்லிக்கொண்டு கிளம்பிய போதே நினைத்தேன்!'' என்று கண்ணில் சிரிப்பு தெரியச் சொன்னாள் அந்தப் பெண். அவள்தான் என் சகோதரி மாலா. அவர்கள் இருவரும் எங்கள் மேஜையிலேயே வந்து சேர்ந்து கொண்டார்கள். மாலாவுடன் இருந்தவரை நான் சுரேஷுக்கு அறிமுகம் செய்யவில்லை. எனக்கு அவ்வளவு தைரியம் இல்லை! அவரே கைகுலுக்கி, ''என் பெயர் ராஜேஷ். மிஸ் ஹேமாவை எனக்கு நன்றாகத் தெரியும். வி ஆர் குட் ஃப்ரெண்ட்ஸ்'' என்று சொல்லி நிறுத்திவிட்டு என்னைப் பார்த்தார். ஒரு கணம் அந்த மாமல்லபுரத்து மண் என்னை விழுங்கிவிடாதா என்று ஏங்கியபடி அமர்ந்திருந்தேன்.



எல்லாருத் தாத்தாவின் தாத்தா!

படத்திலிருப்பவருக்கு வயது 133 !

அமெரிக்கப் பிரஜை சார்லி ஸ்மித் அந்நாட்டிலே அனைவருக்கும் பெரியவர். அமெரிக்கச் சுதந்திரப் பிரகடனத்தின் இருநூறாவது ஆண்டு விழாவைக் காணும் சார்லி, அடிமை வாழ்க்கையையும் அன்று அனுபவித்தவர்.

அவரது அனுபவக் கல்வியைக் கணக்கில் எடுத்துக் கொண்டு பள்ளி இறுதி ஆண்டு படிப்பை முடித்ததாகக் கருதி அவருக்குக் கௌரவ 'டிப்ளோமா' வழங்கியது அவரது சொந்த ஊரில் ஒரு பள்ளி.

அப்போது சார்லி அடைந்த மகிழ்ச்சியை இரட்டிப்பாக்கியது ஜனாதிபதி ஃபோர்டு அவருக்கு அனுப்பிய வாழ்த்துச் செய்தி.

வைட்டமின் பற்றாக்குறையினால் ஏற்படும் களைப்பையும் சோர்வையும் எதிர்க்க:



டாக்டர்கள் சிபாரிசு செய்யும் வைட்டமின்களும் தாதுப்பொருள்களும் ரோஷ் விடாமினெட்ஸ் ஃபோர்டேயில் அடங்கியுள்ளன:

இன்றைய வாழ்க்கை முன்போல் அல்ல. அவசியமான உணவு பதார்த்தங்களின் விலை ஆகாயத்தை எட்டிப்பிடிக்கின்றது. கிடைக்கும் பொருள்களோ, ஊட்டச்சத்துடனும், தளதளவென்று புதுமையாகவும் இருப்பதில்லை. காலை பலகாரம், மற்றும் மதிய உணவு வெகு அவசரமாகச் சாப்பிடப்படுவதுடன், அவற்றுள் ஊட்டச்சக்தியும் முழுமையாக இருப்பதில்லை. அத்துடன், இந்த ஊட்டப்பற்றாக்குறை அலுவலகத்திலும், வீட்டிலும், தொழிற்சாலையிலும் உள்ள வேலை நெருக்கடியினால் ஏற்படும் களைப்பிற்கும், சோர்விற்கும் நம்மை உள்ளாக்குகிறது.


இந்த வைட்டமின் பற்றாக்குறையை எதிர்ப்பதில் முக்கியப் பங்கு வகிக்கிறது ரோஷ் விடாமினெட்ஸ் ஃபோர்டே—சமமான ஆகாரத்திற்கு அத்தியாவசியமான 11 வைட்டமின்கள் மற்றும் 5 தாதுப்பொருள்களின் சாரம்.

தினமும் காலையில் ஒரு ரோஷ் விடாமினெட்ஸ் ஃபோர்டே உட்கொள்ளுங்கள். களைப்பை எதிர்க்க ஒரு கவசம் போன்றது இது.

ரோஷ்

விடாமினெட்ஸ் ஃபோர்டே

“டானிக் மாத்திரை”




ஒரு ரோஷ் விடாமினெட்ஸ் ஃபோர்டே காலைதோறும் உங்களுக்கு 20 பைசாவுக்கும்* குறைவிலே!



* உள்ளூர் வரிகள் தனி

RP-8976


சாந்தி கிரவுன் புவனேஸ்வரி
(டிலக்ஸ் ஏர்கண்டிஷண்ட்) மற்றும் தென்னடெங்கும்
நடிகர்திலகம்
சிவாஜி கணேசன் அளிக்கும்
ஜெகபதி ஆர்ட் பிக்சர்ஸாரின்
உத்தமன்
(வண்ணப்படம்)
தயாரிப்பு-டைரக்ஷன்
வி.பி.ராஜேந்திர பிரசாத்
alpana
ELEGANT



ஒரு பெண் தவறிக் கடலில் விழுந்துவிட்டாள். அறுபது வயதுக் கிழவர் ஒருவர் கடலில் குதித்து அப்பெண்ணைக் காப்பாற்ற முயன்றார். இதற்குள் லைஃப் போட்டை இறக்கி இருவரையும் மீட்டனர்.

அக்கிழவரின் தீரத்தைப் பாராட்டித் தேநீர் விருந்துக்கு ஏற்பாடு செய்தார் கப்பல் தலைவர். பலரும் பல விதமாகப் பாராட்டினர். கிழவர் மட்டும் முகத்தைத் தூக்கி வைத்துக் கொண்டிருந்தார். இறுதியில் பேச எழுந்தார்:

"என்னைக் கடலில் பிடித்துத் தள்ளியவன் யார் என்ற உண்மை இப்போது தெரிந்தாக வேண்டும்" என்று கோபத்துடன் கர்ஜித்தார்! - கண்ணம்மா.

மாலாவும் சுரேஷும்தான் நிறையப் பேசினார்கள்; வாய்விட்டுச் சிரித்தார்கள்; நெஞ்சைக் கிளுகிளுக்கச் செய்யும்படி கிண்டல் பண்ணினார்கள். நானும் ராஜேஷும் சும்மா உட்கார்ந்திருந்தோம்; அவ்வளவுதான்.

சுரேஷின் கண்களில் ஒரு புது ஒளியைப் பார்த்தேன். அவருடைய பேச்சில் ஒரு லாகிரி தெரிந்தது. அத்தனை கலகலப்பாய் அவர் பழகி நான் காண நேர்ந்ததில்லை. அவரிடம் உள்ள உணர்ச்சிகளின் பூரிப்பு அவ்வளவையும் தன் பேச்சால், பார்வையால், பழக்கத்தால் பரிமளிக்க வைத்துவிட்டாள் மாலா. இத்தனை ஆண்டுகளாகியும் இந்த மந்திரத்தை நான் அவளிடம் கற்றுக் கொள்ள முடியவில்லையே?

ராஜேஷையும் நான் நிமிர்ந்து பார்க்க முடியவில்லை. என்னுடைய நெஞ்சை ஒழித்துப் பெருக்கி வைத்தது போலத் தோன்றியது. வாய் திறவாது ஊமையாய் உட்கார்ந்திருந்தோம் நானும் ராஜேஷும்.

ராஜேஷை நான் மறுபடியும் சந்திக்காமல் போய்விடுவேனா? "அங்கே நீ எப்படி வந்தாய்?" என்று அவர் என்னைக் கேட்க நேர்ந்தால், "நீங்கள் எப்படி மாலாவுடன் வந்தீர்கள்?" என்று நான் கேட்கமாட்டேனா? நான் எதையும் இழந்துவிடவில்லை. ஒரு விதத்திலும் குறைந்து போகவில்லை. எனக்கு இளமை இருக்கிறது. ஆதரவுக்கு வீடும் பெற்றோர்களும் இருக்கிறார்கள். என்னைக் காப்பாற்றிக் கொள்ள வேலை இருக்கிறது. நான் எதற்காக, யாருக்காக, வாடிப் போய் நிற்கவேண்டும்? ஏங்கி மறுகவேண்டும்?

உள்ளுக்குள்ளே என் குரல் கம்மிப் பிசுபிசுத்து நின்றதா? என்னையே நான் ஏமாற்றிக் கொண்டேனா? கடைக்கண்ணால் ராஜேஷைக் கவனித்தேன். அவருடைய பார்வை எதிரே ஐஸ்கிரீமின் முடியில் அமர்ந்திருந்த செர்ரி பழத்தின் மீதுதான் பதிந்திருந்தது!

அங்கேயே கொஞ்சநேரம் இருந்துவிட்டு வர விரும்பினார்கள், மாலாவும் ராஜேஷும். அதனால் நாங்கள் கிளம்பி வந்துவிட்டோம்.

கார் ஓடத் தொடங்கிற்று. கடற்கரைக் காற்றில் என் புடவை என் மனத்தைப் போலவே அடங்காமல் படபடத்தது. அவருடைய தோளின் மேல் பட்டு நழுவிய மெல்லிய கரையில், குறும்பாக நெற்றியை ஒற்றிக் கொண்டார் சுரேஷ். அந்தச் செய்கையில் என் நெஞ்சம் நெகிழ்ந்து கசிந்தது. மலர முடியாமல் தவிக்கும் உணர்ச்சி இதழ்களின் மணம்.

"மாலா — உன் சகோதரி" என்று ஒரு தடவை பெருமூச்சுவிட்டார் சுரேஷ். "அவள் ஓர் அபூர்வமான பெண். அவளைப் பார்க்கும் போது எனக்குத் தோட்டம் முழுதும் பூக்களை உதிர்த்துக் குலுங்கி நிற்கும் பவழ மல்லியின் ஞாபகம்தான் வருகிறது."

நான் அவரைத் திரும்பிப் பார்த்தேன். "டாக்டர் ஒரு கவிஞராவதற்கு மாமல்லபுரத்துக்கு வரவேண்டியிருக்கிறது. ஆனால் அந்தக் கவிதை உள்ளத்தைத் தாண்டிவிட்டது வெறும் சிற்பங்கள் அல்ல!" என்றேன்.

"உன் அக்காவை நான் புகழ்ந்தது தப்பு என்று நீ நினைக்கவில்லையே ஹேமா?" என்று கேட்டார்.

அவளைப் போல் என் பெயரிலும் இரண்டே எழுத்துக்கள்தாம். ஆனால் அதிருஷ்டத்தில் எவ்வளவு வித்தியாசம்?

"நிச்சயமாக இல்லை!" என்று சொல்லும்போதே தழுதழுத்த குரலைச் சரி செய்து கொண்டேன். அவர் காரை ஓர் ஓரமாக நிறுத்திவிட்டார். அவருடைய விரல்கள் என் கைகளில் படிந்தன.

"அவளைப் பார்த்தபிறகு எனக்கு உன்னிடம் ஏற்பட்ட மதிப்பு இன்னும் அதிகமாகி இருக்கிறது. அப்படி ஒரு பெண்ணுடன் கூடவே வாழ்ந்தும் நீ எப்படி உன்னுடைய தனித் தன்மையை விட்டுக் கொடுக்காமல் வளர்ந்திருக்கிறாய்? தோற்றத்திலும், செயலிலும் உன்னை முழுவதும் மறைத்துவிடக்கூடிய ஒரு 'பர்ஸனாலிடி' வீட்டிலேயே இருந்தும், நீ எப்படி அவளுடைய நிழலாகப் பின்தங்கி விடாமல் முன்னுக்கு வந்திருக்கிறாய்? அது தான் உன்னிடம் எனக்கு ரொம்பப் பிடித்திருக்கிறது ஹேமா! யு ஆர் வொண்டர்புல்!"

என் கையை எடுத்துத் தம் கைகளுள் பொத்திக் கொண்டார் சுரேஷ். அவர் தோள் மீது சாய்ந்து கொண்டேன். எங்கள் கண்கள் சந்தித்தன. அவர் மூச்சு என் முகத்தில் வீசுகையில், உணர்ச்சிகள் கமழ்ந்து இறங்கித் தலையை இலேசாகச் சுற்ற வைத்தன. அக்காவையும் என்னையும் இவர் பார்த்தவிதம்தான் என்ன? அக்காவை என்னுடன் ஒப்பிட்டவர் எத்தனையோ பேர். ஆனால் அவையெல்லாம் வேறு விதம். இது புது விதம். அந்தச் சந்தர்ப்பங்களில் எல்லாம் நான் தோற்றுப் போயிருக்கிறேன். இன்று வெற்றி எனக்குத்தான்.

ஆனால் மாலா அப்படி ஒன்றும் முழுதும் தோற்றுப் போய்விடவில்லை. நான் வெல்ல முடியாத ஒருவரை அவள் ஜயித்துக்கொண்டு போய்விட்டாள். எங்கள் கல்யாணத்தை ஒட்டியே, அவளும் ராஜேஷைக் கரம் பற்றி விட்டாள்.

பெஸண்ட் நகர் வாசமும், கடற்கரைக் காற்று வீசும் அறை வாசமும், மாலை நேரத்து உல்லாச நடையும் மாலாவுக்குத்தான் என்று நிர்ணயம் ஆகி இருந்தபோது, வேறு யார் தான் அதை எந்த விதத்தில் தடுத்திருக்க முடியும்?

சொர்க்கத்துக்குச் சுதந்திரம்!

சிறிய நாடுதான். ஆனால் 99 தீவுகளைக் கொண்டது. இந்தியாவுக்குத் தென்மேற்கே இந்து மகா சமுத்திரத்திலுள்ள ''ஸேஷெல்ஸ்.'' வரும் ஜூன் 28ந் தேதி பிரிட்டிஷ் ஆளுகையிலிருந்து பூரண சுதந்திரம் அடைகிறது. அறுபதாயிரம் மக்களே அடங்கிய பூவுலகில் ஒரு சொர்க்கமாகக் கருதப்படும் எழில் மிக்க தேசம். எனவே சொர்க்கத்துக்குச் சுதந்திரம் கிடைப்பது போல்தான். ஐக்கிய நாடுகள் சபையிலும் இடம் பெறுகிறது இந்தச் சொர்க்க பூமி!

''ஸேஷெல்ஸ் போகப் போகிறோம்'' என்று நீண்ட காலமாகவே திரும்பத் திரும்ப என் கணவர் வியப்பும் பெருமையும் பொங்கச் சொல்லிக் கொண்டிருந்தபோதிலும் எனக்குப் பரபரப்போ அக்கறையோ அந்த நாட்டைப் பற்றி ஏற்படவே இல்லை!

ஆனால் விமானம் ஸேஷெல்ஸை நெருங்கியபோது என் மனத்தில் ஏற்பட்ட திடீர் மாறுதலை வார்த்தைகளால் வர்ணிக்க இயலாது.

கொடைக்கானல் மலையை அப்படியே தூக்கிக் கொண்டுபோய் நடுக் கடலில் வைத்து விட்டால் எப்படி இருக்குமோ அப்படி இருந்தது! ரோமாஞ்சனம் உண்டாக்கிய காட்சி.

நாட்டின் முக்கியமான தீவு ஐம்பத்திநாலு சதுர மைல்களை கொண்ட ''மாஹே''. இந்தத் தீவில் ஜம்போ உள்பட எல்லாவிதமான ராட்சஸ விமானங்களும் வந்து போக சர்வ தேச விமானநிலையத்தைக் கட்டியிருக்கிறார்கள். இதனை அமைக்கக் கடலையே தூர்க்க வேண்டியிருந்ததாம். கலங்கவில்லை அவர்கள்!

இன்று வாரம் முப்பது ராட்சஸ விமானங்கள் உலகின் பல பாகங்களிலிருந்தும் வந்து உல்லாசப் பயணிகளை இறக்கி விடுகின்றன.

விமான தளத்தில் ஒரு விதமான தொந்தரவுமே கிடையாது. எங்களுடன் விமானத்தில் வந்து சேர்ந்த நூறு பிரயாணிகளையும் பத்துப் பதினைந்து நிமிஷங்களில் வெளியே அனுப்பி விட்டார்கள். அதற்குள்ளாகவே இரண்டு முறை எங்கள் பெயரை பிரிட்டிஷ் ஏர்வேஸ் அதிகாரிகள் மைக் மூலமாக அழைத்திருந்தார்கள். அவர்களுடைய மேஜைக்குப் போன உடனேயே எங்களுடைய ஹோட்டல் முதலிய விவரங்களைக் கொடுத்து, டாக்ஸி ஏற்பாடு செய்து காலதாமதமின்றி அனுப்பி வைத்தார்கள்.

நாங்கள் தங்கிய ஹோட்டல் ''ரீப்'' (Reef) என்ற பெயர் கொண்டது. ஏர் கண்டிஷன் செய்யப்பட்ட இருநூறு அறைகள் இருந்தன. ஒவ்வொரு அறையிலிருந்தும் கடற்கரையையும் பரந்த கடலையும் பார்த்து அனுபவிக்க நல்லதொரு பால்கனி.

இந்த நாட்டுக்கு வருவோர் எல்லோருமே உல்லாசப் பயணிகள்தான். அவர்களுடைய விடுமுறை உல்லாசத்துக்கு அனுசரணையாகக் கடற்கரையை அடுத்தாற்போல் திறந்த பெரிய கூடத்தில் பகல் உணவுக்கு ஏற்பாடு செய்திருந்தது. எவ்வளவு வித விதமான உணவு வகைகள்! குறைந்த





■ ஸேஷெல்ஸின் ஓர் எழில் தோற்றம்; ஜனாதிபதி மாஞ்சாம்; தேசியச் சின்னம்

பட்சம் ஐம்பது விதம்! அசைவ உணவை அனுபவிப்பவர்களுக்கு மாபெரும் விருந்து எனலாம். ஸேஷெல்ஸ் தீவின் முக்கிய பயிர் தேங்காய் ஆனதால் தேங்காயில் செய்யப்பட்ட பலவித உணவு வகைகள், இளநீர் எல்லாம் இருந்தன.

எங்கெல்லாம் போவது, எப்படி இந்தத் தீவைச் சுற்றிப் பார்ப்பது என்று யோசித்தோம். பிற்பகல் சுமார் நாலு மணி இருக்கும். ''விமலா! சீக்கிரமாகத் தயார் செய்து கொள். இந்த ஊரில் உள்ள தமிழ் வியாபாரி ஒருவர் நம்மை அழைத்துப் போக ஐந்து மணிக்கெல்லாம் வந்து விடுவார்'' என்று என் கணவர் சொன்னபோது என்னால் நம்பவே முடியவில்லை.

''அவரை எங்கே பிடித்தீர்கள்? எப்படிச் சந்தித்தீர்கள்?'' என்றேன். ''இந்த ஊர் டெலிபோன் டைரக்டரியைப் புரட்டினேன். கைலாசம் என்ற பெயரைப் பார்த்த உடனேயே போன் பண்ணி நாம் சென்னையிலிருந்து வந்திருப்பதைச் சொன்னேன். 'ரொம்ப மகிழ்ச்சி உடனே வருகிறேன்' என்று பதில் கிடைத்தது'' என்று விளக்கம் தந்தார் என் கணவர்.

ஐந்து மணிக்கெல்லாம் வந்து விட்டார் ஸ்ரீ கைலாசத்தின் மாப்பிள்ளை ஸ்ரீ ஷண்முகம். மாமனார் இந்தியா போயிருப்பதாகவும், அதனால் தாம் வந்திருப்பதாகவும் சொன்னார். வியாபாரம் நன்றாக நடப்பதாகவும் சுமார் நூறு இந்தியக் குடும்பங்கள் ஸேஷெல்ஸில் இருப்பதாகவும் தெரிவித்தார்.

ஹோட்டலிலிருந்து மாஹே தீவின் முக்கிய பட்டணமான விக்டோரியா சுமார் பத்து மைல். அங்கு அழைத்துப் போனார்.

தீவு முழுவதும் ஒரு மாபெரும் மலை. சமமான பூமியென்று விக்டோரியாவில்தான் சுமார் ஒரு சதுர மைல் உள்ளது. அதனால்தான் அதை முக்கிய நகரமாக்கி விட்டார்கள். அங்குதான் நாட்டின் துறைமுகமும் உள்ளது. தினமும் சராசரி ஒரு கப்பல் உலகின் பல பாகங்களிலிருந்தும் வருகிறதாம். அநேகமாகச் சாமான் ஏற்றிச் செல்லும் கப்பல்கள்தாம். நம் தேசத்திலிருந்து இரண்டு மூன்று மாதங்களுக்கு ஒரு முறை ''ஹர்ஷ வர்த்தன்'' என்னும் கப்பல் பம்பாயிலிருந்து வந்து போகிறதாம்.

ஜெட் விமானங்களில் ஆண்டுதோறும் ஐரோப்பிய தேசங்களிலிருந்தும், தென் ஆப்பிரிக்காவிலிருந்தும் சுமார் அறுபதாயிரம் பேர் உல்லாசப் பயணிகளாக வருகிறார்கள்.

இந்த எண்ணிக்கை இன்னும் நாலு வருஷங்களில் இரட்டிப்பாக வேண்டும் என்று திட்டமிட்டிருக்கிறார்கள்.

கடலுக்கு வெகு அருகிலேயே மலைத் தொடர்கள் ஆரம்பமாகி விடுவதால் இத் தீவு முழுவதும் வளைந்த மலைப் பாதைகள் தான். ஒரு பக்கம் ஆழ்ந்தகடலும், கடற்கரையும் கண்கொள்ளாக் காட்சி. மற்றொருபுறம் அடர்ந்த தென்னந் தோப்புக்கள். இன்னொரு பக்கம், மரங்கள், செடிகள், கொடிகள் மிகுந்த கானகங்களுடன் கூடிய வானளாவிய மலைத் தொடர்கள்.


ஸ்ரீ ஷண்முகம் எங்களுக்கு ஸ்ரீ ஜி. எஸ். பிள்ளையை அறிமுகம் செய்து வைத்தார். ஸ்ரீ பிள்ளை பார்ப்பதற்கு மிக சாதாரணமாக இருந்தார். வியாபாரத்தில் ஆண்டொன்றுக்கு இரண்டு லட்சம் சம்பாதிப்பவர் என்று யாரும் அவரைப் பார்த்து எடை போட முடியாத அளவுக்கு எளிமை. தஞ்சை ஜில்லா பேரளத்திலிருந்து 1946ம் வருஷம் தமது உறவினர் ஒருவருடன் அங்கு கப்பலில் வந்து சேர்ந்தாராம். தங்கி விட்டாராம். முதலில் சிறிய வேலை; பிறகு கூட்டு வியாபாரம்; 1960லிருந்து தனி வியாபாரம்.

ஸ்ரீ பிள்ளை விவரமாகத் தம்மைப் பற்றிச் சொல்லிக் கொண்டிருக்கும் போதே காப்பி பிஸ்கோத்துடன் அவர் மனைவி எங்களை உபசரித்தார்.

விக்டோரியாவின் பெரிய பெரிய கடைகள், ஐரோப்பா — அமெரிக்காவில் போலவே கண்ணாடிச் சுவர்களுடன் உள்ளே விளக்குகள் போடப்பட்டு, கண்ணையும் கருத்தையும் ஏன், பணத்தையும் கூடத்தான் கவர்கின்றன!

தடையின்றி இறக்குமதி செய்யும் ஏற்பாடு உள்ளதால் உலகின் எல்லாப் பாகங்களிலிருந்தும் நல்ல சரக்குகள் வந்து இங்கு கொட்டிக் கிடக்கின்றன. அதனால் உல்லாசப் பயணிகளுக்கு ரொம்பத் திருப்தி. உல்லாசப் பயணிகளை எப்படியெல்லாம் திருப்திப்படுத்துவது என்ற ஒரே குறிக்

பூவுலக சொர்க்கத்தின் ஓர் எழில் காட்சி



விமலா ரமணியும்

கோனுடன் வேலை செய்து வருகிறார்கள் இங்குள்ள ஹோட்டல்காரர்களும் சர்க்காரும்.

ஆழ்கடலில் உள்ள பவழக் காடுகளைப் பார்த்து வரக் கண்ணாடிப் படகுகள் உள்ளன. பறவைத் தீவில் பலவிதமான பறவைகளைக் கண்டு களிக்கலாம். ஃபேரி டர்ன்ஸ் என்னும் உலகிலேயே மிக அழகான பறவை இங்கு உள்ளது.

அன்றுபௌர்ணமி. கிழக்குப் புறமாக எங்கள் ஹோட்டல் இருந்ததால் பூரணச் சந்திரனைப் பார்த்துக் கொண்டே கடற்கரையில் உட்கார்ந்து இரவு விருந்தை அனுபவித்தோம்.

மறு நாள் காலை ஒன்பது மணிக்கெல்லாம் ஸ்ரீ பிள்ளை வந்து விட்டார். தமது காரில் எங்களை ஏற்றிக் கொண்டு ஊர் சுற்றிக் காண்பிக்க அழைத்துப் போனார். சுமார் நாலு மணி நேரம் தீவைச் சுற்றிப் போய்க் கொண்டிருந்தோம். சிறிய, சிறிய கிராமங்கள், அழகான வீடுகள், விதம் விதமான கண் கொள்ளாத இயற்கைக் காட்சிகள்.

தீவைப் பற்றிய விவரங்களைக் கூறியவாறே ஸ்ரீ பிள்ளை காரை மெதுவாக ஓட்டிச்சென்றார்.

''பூமத்திய ரேகைக்கு நாலு டிகிரி தெற்கே உள்ளது இந்தத் தீவுத் தொடர்கள். இங்கு வருஷம் முழுதும் 80—85 டிகிரி வெப்பம்தான். மெல்லிய கடற்காற்று எப்போதும் உண்டு. ஆனால் புயற்காற்றோ மற்ற இடர்ப்பாடுகளோ இடையிலே கிடையாது. இத்தீவுகள் பெரிய பெரிய மலைகளாக இருப்பதாலோ என்னவோ இப்படிப்பட்ட நல்லதோர் இயற்கை நிலை. வருஷத்துக்குத் தொண்ணூறு அங்குல மழை பெய்வதால் எல்லாம் பச்சைப் பசேலெனச் செழித்துக் கொழித்து வளருகின்றன. அதனால் உழைத்துப் பாடுபடவேண்டிய பயிர்களை ஒருவரும் பயிரிடுவதில்லை. தேங்காயைப் பறிப்பதில்லை. தானாக விழும் தேங்காய்களைப் பொறுக்கிக் காயவைத்துக் கொப்பறையாக மாற்றுகிறார்கள். ஆறாயிரம் டன் வரை கொப்பறை ஏற்றுமதி செய்கிறார்கள். டன்னுக்குச் சராசரி ரூ. நாலாயிரம் கிடைக்கிறது'' என்றெல்லாம் சொல்லிக்கொண்டே போனார்.

ஹோட்டல்கள் கட்ட முன்வருவோரையெல்லாம் 'வருக வருக' என்று அழைக்கிறது இந்த நாட்டின் அரசாங்கம். இந்த நாட்டின் ஜனாதிபதியே பல நாடுகளுக்கும் சென்று இந்த நாட்டின் விசேஷத் தனித் தன்மைகளை டெலிவிஷன் மூலமாகவும், பத்திரிகைப் பேட்டிகள் மூலமாகவும் பிரபலப்படுத்தி வருகிறார்.

இங்கு அதிகப்பட்ச வரி முப்பத்தைந்து சதவிகிதம்தான். அதனால் சம்பாதிப்பவர்களுக்கு நல்ல ஊக்கம் இருக்கிறது. ஸ்விட்ஸர்லாந்து மாதிரி பெயர் கூறாமல் நெம்பர் மட்டும் கொடுத்து பாங்கில் பணம் வைக்க ஏற்பாடுகளும் நடந்து வருகின்றன. அதனால் உலகின் பல பாகங்களிலும் உள்ள பணக்காரர்கள் இங்கு பணம் போட்டு வைப்பார்களென நம்புகிறார்கள்.

அமெரிக்காவில் போலவே இங்கும் ஜனாதிபதிக்குத்தான் எல்லாப் பொறுப்புக்களும், அதிகாரங்களும் உள்ளன.

தமிழ் நாட்டிலிருந்து சென்று குடியேறி, இந்த ஊர்ப் பிரஜையாக உள்ள ஸ்ரீ காமேசிச் செட்டி அவர்கள் இங்கு மந்திரி சபையில் நிதி மந்திரி! நமக்கும் பெருமையாக இருக்கிறது அல்லவா?

ஜனாதிபதி ஸ்ரீ ஜேம்ஸ் மான்சாமிற்கு வயது முப்பத்தேழுதான். முதல் மனைவியை விவாகரத்து செய்துவிட்டுத் தனித்தே வாழ்ந்து வருகிறார். உல்லாசக் களிப்பில் வெகுவான விருப்பமுள்ளவர். ஆனால் தமது வேலையில் மிகவும் சாமர்த்தியசாலி! சுற்றுலா அபிவிருத்தி மூலம் இந்தச் சிறிய நாட்டை மிகவும் உன்னத நிலைக்குக் கொண்டு செல்வதில் தீரமாக முனைந்துள்ளார்.

இவ்வூர் மக்கள் ஆசிய, ஆப்பிரிக்க, ஆங்கிலேய, ஐரோப்பியக் கலப்பு இனத்தவர் ஆவார்கள். ''ஸேஷெலாய்ஸ்'' என்று அவர்கள் அழைக்கப்படுகிறார்கள்.

ஆங்கிலம்தான் இந்நாட்டின் அரசாங்க பாஷை. அநேகமாக எல்லோரும் நன்றாகப் புரிந்து கொள்கிறார்கள். பிரெஞ்சும், ஸ்பானிஷ்ஷும் கலந்த பாஷையான ''கிரியோல்'' பாஷையையே சாதாரணமாகப் பேசி வருகின்றனர் இந்நாட்டு மக்கள். உலகிலேயே குறைவான விற்பனையுள்ள செய்தித் தாள்கள் இங்குதான் பிரசுரமாகின்றன!


இந்நாட்டில் புழக்கத்தில் உள்ள நாணயம் ரூபாய். நமது நூறு ரூபாய்க்கு இந்த ஊர் ரூபாய் எண்பத்தெட்டு கிடைக்கிறது. ஆனால் அவர்கள் ரூபாய் சர்வ தேச மதிப்புக் கொண்டது. *(Hard Currency)* நம்முடையது அப்படியல்ல.

சுதந்திர விழாவை 27ந் தேதியிலிருந்து ஒரு வார காலத்துக்குச் சிறப்பாகக் கொண்டாடப் போகிறார்கள். இங்கிலாந்து அரசியின் பிரதிநிதியாக க்ளாஸ்டர் கோமான் வருகிறார். நமது அயல் விவகார மந்திரி ஸ்ரீ சவானையும் எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றனர் இங்குள்ள மக்கள்.

திருடர் பயம் கிடையாதாம். திருடிவிட்டு எங்கே போய் ஒளிந்து கொள்வது என்று கேட்கிறார்கள். எல்லாப் பக்கமும் சமுத்திரம் இல்லையா?


மக்கள் வாழ்க்கைத் தரம் எப்படி என்று கேட்கலாம். ஊர் திரும்புவதற்கு ஹோட்டலிலிருந்து விமான நிலையத்துக்கு டாக்ஸியில் போய்க் கொண்டிருந்தோம். டாக்ஸி டிரைவரிடம், ''நீங்கள் எவ்வளவு சம்பாதிக்கிறீர்கள்?'' என்று கேட்டோம். அதற்கு அவர் ''இந்த ஊரில் உள்ள எல்லா டாக்ஸிகளுமே அதை ஓட்டுபவர்களுக்குச் சொந்தம். என்னைப் பொறுத்தவரை? சராசரி மாதத்துக்கு நாலாயிரம் ரூபாய் கிடைக்கிறது. செலவு போக ரூபாய் இரண்டாயிரம் மீதியாகிறது. சந்தோஷமாகவே இருக்கிறேன். ஒரு குறைவும் இல்லை'' என்றார்.

தாவர டாக்டர்!



மனித டாக்டர் ஆயிற்று. மிருக டாக்டரும் உண்டு. இப்போது தாவரங்களுக்கென்று மருத்துவமனை டாக்டர் எல்லாம் ஏற்பட்டிருக்கிறது. ''க்ரீன் ஃபிங்கர்'' என்ற ஒரு டாக்டர், நோய்வாய்ப்பட்ட தாவரத்தை, அது இருக்கும் வீட்டுக்கு வந்து பார்க்க ஐந்து டாலர் ''விசிட்டிங் பீஸ்'' வாங்குகிறார்! — நியூஸ் ஆஃப் த வோர்ல்டு


— முத்து



ஒரு காலத்தில் நான்கு நண்பர்கள் இருந்தார்கள். ஒருவன் குருடன், ஒருவன் செவிடன், ஒருவன் ஊமை, ஒருவன் நொண்டி. அவர்கள் ஒருவருக்கொருவர் தங்கள் துரதிர்ஷ்டத்தைக் கூறி ஒப்பாரி வைத்தார்கள். ஒவ்வொருவனும் தன் குறைபாடு தன்னை உலகில் முன்னேற விடாமல் தாழ்த்திவிட்டதாக எண்ணினான். குருடனுக்குக் கண்கள் மட்டுமே உலகில் மகிழ்ச்சியையும் செல்வத்தையும் தேடித் தரத் தக்கதாகத் தோன்றியது. செவிடனுக்குக் காதுகள்தாம் செல்வம் தேட மிக அவசியம் எனப் பட்டது. ஊமை நாக்கைத்தான் பெரிதாக மதித்தான். நொண்டி கால் இருந்தால்தான் அதிர்ஷ்டம் வரும் என்று கருதினான்.

திடீரென்று அவர்கள் ஒரு கூச்சலைக் கேட்டார்கள். ஒரு பைத்தியம் அந்தப் பக்கம் வந்தான். அவன் பலவானாக இருந்தான். எல்லா அவயவங்களும் அவனுக்கு நன்றாய்ப் பொருந்திப் பழுதின்றி இயங்கின. ஆயினும் அவன் கூச்சலிட்டுத் திட்டி நடனமாடிப் பிதற்றிக்கொண்டிருந்தான். இவனைப் பார்த்ததும் ஊனமுற்றிருந்த அந்த நான்கு நண்பர்களுக்கும் பயமாய்ப் போய் விட்டது. அவர்கள் அவசரம் அவசரமாக ஒரு பாதுகாப்பான இடத்தை அடைந்தனர். தங்களைப் பாக்கியசாலிகளாய்க் கருதிக் கடவுளை வாழ்த்தினர். "நல்ல வேளை நம் புத்தி பேதலிக்கவில்லையல்லவா?" என்று நிம்மதியுடன் எண்ணினர்.

நீதி: (நீங்களே எழுதிக்கொள்ளவும்)



கடவுள் புத்திசாலித்தனத்தைப் பகிர்ந்து கொடுத்துக் கொண்டிருந்தார். மனிதனுக்கே அதிகமாகக் கிடைத்தது. இதைக் கண்டு சில மிருகங்கள் ஆட்சேபித்தன. தங்களுக்கும் பங்கு வேண்டும் என்றன. நாய், பசு, குதிரை கிளி போன்ற சில மிருகங்கள் நியாயம் கோரி ஆர்ப்பாட்டம் செய்தன. அவற்றின் அளப்பரிய ஆசையைக் கெடுக்க விரும்பாத கடவுள் அவற்றுக்கு மனிதனின் புத்தியிலிருந்து சிறிது பங்கு பிரித்துக் கொடுத்தார்.

ஆனால் மனிதன் இந்த மிருகங்கள் மற்ற பல மிருகங்களை விட அதிக புத்திசாலிகளாக இருப்பதையும் மனிதனைப் புரிந்துகொள்ளும் ஆற்றல் இவற்றுக்கு இருப்பதையும் அறிந்து கொண்டான். இவற்றைத் தன் அடிமைகளாக்கிக் கொண்டான்.

நீதி: (நீங்களே எழுதிக்கொள்ளவும்)

Printed and published by V. Vaidyanathan on behalf of Messrs. Bharathan Publications Private Limited at Kalki Press, Chetput, Madras-600 031.
Managing Editor: T. Sadasivam. Associate Editor: K. Rajendran.

வீட்டிலே தயாரான, சுத்தமான இனிப்பு பண்டங்கள்...



என்றாலும் நூற்றுக்கு 95 பேரைப் பீடிக்கும் நோய் பரவிட இவை வழி செய்கின்றன!

பற்சிதைவு உலகமெல்லாம் பரவிப் பெருகியுள்ள நோயாகும். இதற்கு முக்கிய காரணங்கள் என்னவென்றால், நீங்கள் அன்றாடம் உட்கொள்ளும் இனிப்பு மற்றும் மாவு பண்டங்களாகும். எனவே தான் பற்களுக்கு இடைவிடாத பாதுகாப்பு தேவைப்படுகிறது.

பினாகா ஃப்ளோரைட் பற்சிதைவுக்கு எதிராக நீடித்த பாதுகாப்பளிக்கிறது

U–BF/4a/75 Tam

பற்சிதைவை 50 சதவிகிதம் வரை ஃப்ளோரைட் குறைக்கிறது என விஞ்ஞான சோதனைகள் நிரூபித்துள்ளன. ஆகவே தவறாமல் பினாகா ஃப்ளோரைடினால், நாள்தோறும் காலையிலும் படுக்கை வேளையிலும் பல் துலக்குங்கள். இதன் தனிப்பட்ட, நீடித்து நிற்கும் ஆற்றல் பல் எனாமலைப் பலப்படுத்துகிறது. பற்களைச் சிதைக்கும் கிருமிகளின் வளர்ச்சியையும் வலிதரும் சொத்தையையும் தடுக்கிறது.




**பல்லுக்கு உறுதி,
பற்சிதைவுக்கு எதிரி—**

பினாகா ஃப்ளோரைட்

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Sri Lanka
இலங்கையில் விலை 75 சதம் (தபால் செலவு தனி)
மலேசியாவில் விலை (விமானப் பதிப்பு) 60 மலேசிய காசு

ADDISON

ENGINEERS' CUTTING TOOLS



Estd.
1873

At the Tool works of Addison & Company we have just one object — to be precise and to build tools which are highest in accuracy, in quality and in length of effective service.

TWIST DRILLS (INCLUSIVE OF **FORGE-FORM** STRAIGHT SHANK DRILLS) • MILLING CUTTERS • REAMERS • INVOLUTE GEAR CUTTERS • SLITTING SAWS • GROUND THREAD TAPS • CARBIDE TIPPED TOOLS.

ADDISON & COMPANY LIMITED
158, MOUNT ROAD, MADRAS-2. INDIA.

(A Member of the Gauge and Tool Makers' Association, U.K.)

ATW-33-D